# செம்மொழி

## உள்ளும் புறமும்

மணவை முஸ்தபா

# CLASSICAL TAMIL
# - In & Out

Author

**MANAVAI MUSTAFA**

Price Rs. 35/-

Published By

**ARIVIAL TAMIL ARAKKATTALAI**

AE5, 6th Steet, Anna Nagar, Chennai - 600 040

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Semmozhi - In and Out |
| Author | · | MANAVAI MUSTAFA |
| Copyright | . | Author |
| First Edition | . | March 2004 |
| Paper Used | | White Creamwove |
| Printing Points used | : | 10 points |
| Size of the Book | | Crown Octovo |
| No of Pages | · | 104 |
| Price | : | Rs. 35/- |
| No. of copies printed | . | 1000 |
| Type setting | : | SHREE PRINT HOUSE<br>10/2, Velachery Main Road<br>Kannigapuram, Chennai.<br>Cell· 98411-16261 |
| Printer | | KARIS OFFSET PRINTERS<br>60, Nelson Manickam Road<br>Aminjikarai, Chennai - 600 029 |
| Binding | . | Paper Book |
| Publishing place | | ARIVIAL TAMIL ARAKKATTALAI<br>AE5, Annanager, Chennai - 40 |

# காணிக்கை

தமிழை 'செம்மொழி'யாக அரசை ஏற்கச் செய்வதில் முனைப்புக் காட்டிய ஆர்வமிகு இனிய தமிழ் உள்ளங்களுக்கு இந்நூல காணிக்கையாககப்படுகிறது

# முன்னுரை

'செம்மொழி' பற்றிப் பேசும்போதெல்லாம் நண்பர்கள் அடிக்கடி என்னிடம் கேட்கும் கேள்வி தமிழை 'செம்மொழி' என்று அழைப்பது சரியா? அல்லது 'செவ்வியல் மொழி' என்று அழைப்பது சரியா? என்பதுதான்

இவ்வாறு ஆளுக்கொரு சொல் என்று இல்லாமல், ஒருமைத் தன்மையோடு எல்லோரும் ஒரேவிதமாகச சொல்வது தானே தமிழ் நலனுக்கு உகந்ததாக இருக்க முடியும் சரி, மேற்கணட இரு சொற்களில் எது சரியான சொல்?

இரண்டு சொற்களுமே ஒவ்வொரு வகையில் சரியானதே என்று கூறி நான் நழுவ விரும்பவில்லை எது சரியான சொல் என்பதை தமிழ் மொழி வரலாற்றுப் போக்கில் இலக்கியம், இலக்கணக் குறிப்புகள் மூலம் முடிவு காண்பதே சரியானதாகவும் முறையானதாகவும் இருக்க முடியும்

முதலில் ஒரு செய்தியைத் தெளிவாக்க விரும்புகிறேன் சங்க இலக்கியம், மற்றும் தொல் காப்பிய இலக்கணம் முதலாக, மொழி ஞாயிறு பாவாணர்வரை அனைவரும் தமிழை 'செம்மொழி' என்றே அழைத்துவர, இன்று ஒருசிலர் செம்மொழிச் சொல்லுக்கு மாறாக 'செவ்வியல் மொழி' என அழைக்கத் தலைப்பட்டு குழப்பமுண்டாக்கி

வருகின்றனர் இதனால் பொதுமக்கள் செம் மொழியா? செவ்வியல் மொழியா? எனக் குழப்ப மடைகின்றனர் இதில், எது சரியான சொல் என்பதை அறியவும் ஆர்வப்படுகின்றனர்

சாதாரணமாக, முனைப்புச் செயல் ஒன்று உருவாகும்போது அதில் குறுக்குச் சால் ஓட்டி, வேகத்தடையாயமைவதில் சிலருக்கு அலாதி விருப்பம் அத்தகைய குறுக்குச் சால்களில் ஒன்று 'செவவியல் மொழி' என்பது. செம்மொழியா? செவ்வியல் மொழியா? என்பதில் கருத்தொற்றுமை தேவை.

அன்று முதல் இன்று வரை எல்லோரும் 'செம்மொழி' என்றே கூறிவரும் போது இடையில் குறுக்குச் சாலாக 'செவ்வியல் மொழி' என்பது எவ்வாறு வந்தது? 'கிளாசிககல்' எனும் ஆங்கிலச சொல்லை 'செவ்வியல்' என மொழி பெயர்த்ததால் வந்த விளைவு இது என்கின்றனர் முதலாவது இம்மொழிபெயர்ப்பில் ஆங்கில வழி சிநதித்துத தமிழை அணுகும் ஆங்கில மொழி அடிமை உணர்வே வெளிப்படுகிறது 'கிளாசிககல் லிட்ரேச்சர்' என்பதைத தமிழில் 'செவ்விலககியம்' எனப் பெயர்த்தலே பொருத்தமாகவும் பொருள் பொதிந்ததாகவும் அமையும்

'செவ்வியல் மொழி' என்று சொல்லும்போதே ஏதோ ஒரு புதுவகை 'இயல்' மொழி போலும் என்று எண்ணத் தூண்டுகிறதன்றோ? 'செவ்வி' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'இடஞ்சுட்டல்', 'காலம்', 'சமயம்', 'தருணம்' என 'தமிழ் லெக்சிகன்' பொருள் கூறுகிறது இதே பொருளில் தமிழ் இலக்கியங்கள் பலவும் 'செவ்வி' என்ற சொல்லைக் கையாண்டுள்ளன.

'கதங் காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி'
(குறள் 130)

எனத் திருக்குறளும்,

'வண்டுறைக் கமலச் செவ்வி வான்முகம்'
(கம்ப சூர்ப் 2)

எனக் கம்பராமாயணமும் குறிப்பிடுகின்றன இவற்றிலெல்லாம் 'செவ்வி' எனும் சொல் சந்தர்ப்பம், தருணம், சமயம் எனும் பொருளிலேயே கையாளப் பட்டுள்ளதைக் காணலாம்

இன்றும்கூட பள்ளித் தேர்வு வினாத் தாளில் 'செவ்வி கூறுக' என்ற தலைப்பின் கீழ், ஒரு வாசகத்தைக் கொடுத்து, அது யாரால், எந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? என்று கேள்வி கேட்பது வழக்கமாக உள்ளதை நாமெல்லாம் நன்கு அறிவோம்

இனி, 'செம்மொழி' என்பதைப் பற்றி ஆராய்வோம் 'செம்' என்பது 'செம்மை' என்பதன் குறுக்கமாகும 'செம்மொழி' எனில் 'செம்மையாய் அமைந்த மொழி' என்பது அதன் பொருளாகும் இதே கருத்தை, உணர்வை வெளிப்படுத்தும் வகையில் 'செம்மொழி மாதவர்' (சிலம்பு 30-32), 'செம்மொழி' (அகநானூறு 349), 'செந்தமிழ் நிலத்து வழக்கொடு' (தொல் எச்ச 2) எனப் பாடல்களில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம் 'செந்தமிழ் என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி 'கலப்பற்ற தூய தமிழ்' எனப் பொருள் விளக்கம் தந்து தெளிவுபடுத்துகிறது.

இதே பொருளிலும் உணர்விலும்தான் பரிதிமாற் கலைஞரும் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரும் தமிழை 'கிளாசிக்கல் லாங்குவேஜ்' எனும் பொருளில் குறிக்க 'செம்மொழி' (செம்மையாய்

அமைந்த மொழி) எனும் சொல்லால் குறிப்பிட லாயினர் இன்னும் அதனுடைய தனித்தன்மைகளை முழுமையாய் வெளிப்படுத்தும் வகையில் தமிழ் 'உயர்ந்த மொழி', 'தனித்தன்மையுடைய மொழி', 'செம்மையாய் அமைந்த மொழி' என குறிக்கும் வகையில், 'உயர் தனிச் செம்மொழி' எனக் குறிப்பிட லாயினர் அவர்தம் வழியை பின்பற்றி 'செம்மொழி' எனச் சொற்செட்டோடும் பொருட்செறிவோடும் குறிப்பிடுவதுதானே முறை அதை விடுத்து தேவை இல்லாமல் வேகத் தடையாயமையும் வகையில் 'செவ்வியல் மொழி' எனக் கூறி வேறு பாட்டைக் கற்பிக்கும் 'குறுக்குச்சால்' ஒட்டும் போக்கை இனியாவது தவிர்ப்பது நல்லது மொழிக் கோரிக்கையில் சொல் வழக்கில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் நிலவுவது அவசியம் என்பதை தொடர்புடையவர்கள் இனியாவது உணர்வது நலம்

இனி, தமிழ் செம்மொழி ஆவதன் அவசர, அவசியத்தைப் பறறி சற்று ஆழமாகச் சிந்திப்போம் தமிழ், நமகெல்லாம் வெறும் தாய்மொழி மட்டுமல்ல; அது நம் முகமும் முகவரியுமாக அமைந்துள்ளது எனபதை நம்மவர்களில் பலரும் இன்னும் சரியாக அறியவோ உணரவோ இல்லை என்றே எண்ண வேண்டியுள்ளது

தமிழ் பேசுவதால் தமிழன், தமிழன் என்பதால் தமிழ் இனத்தைச் சேர்ந்தவன்; தமிழ் இனம் இம்மண்ணில் வாழ்வதனால் இது தமிழ்நாடு என்று அழைக்கப்படுகிறது எனவே, நம் முகமும் முகவரியுமாக அமைந்திருப்பது தமிழ் என்பதை நாம் கட்டாயம் உணர்ந்து கொள்ளவேண்டும் தமிழ் இல்லையென்ற நிலை ஏற்பட்டால் நாம் நம் முகத்தையும் முகவரியையும் இழந்த அநாதை

இனமாக சமுதாய வீதியில் நடமாட வேண்டிய இழி நிலை ஏற்பட்டுவிடும் எனவே, தமிழுக்குக் கிடைக்கும் வெற்றி தமிழனுக்குக் கிடைக்கும் வெற்றி; தமிழ் இனத்துக்குக் கிடைக்கும் வெற்றி இவ்வெற்றியும் நம்மோடு முடியும் வெற்றியல்ல; நம் சந்ததிகளுக்கு நாம் விட்டுச் செல்லும் உண்மையான புகழ்மிகு சொத்து

ஆங்கிலேயர்களின் ஆட்சியதிகார அடிமைத் தனத்தில் இருந்து விடுதலை பெற்றபோதிலும் அவர்களால் நம்மிடையே அழுத்தமாகப் பதியச் செய்த ஆங்கில மொழியின் ஆதிக்கத்திலிருந்து விடு படாததோடு, நாமே வலியச் சென்று ஆங்கில அடிமை விலங்கை எடுத்து கைகளில் இறுக்கமாக மாட்டிக் கொண்டு, ஆங்கில மொழி அடிமைகளாக நம்மைக் காட்டிக் கொள்வதில் அலாதிப் பெருமையும் பூரிப்பும் அடைகிறோம் என்றால் நம் சிந்தனையில், உணர்வில் எங்கோ பெரும் தவறு ஏற்பட்டு, அது வளர்ந்து, சுய சிந்தனையாற்றலை இழந்தவர்களாக நம்மை ஆக்கிக் கொண்டுள்ளது என்பது தானே உண்மை

எல்லாச் செல்வங்களும் என் வீட்டில் நிறைந்திருக்க, அதனை அறியாதவனாக அடுத்த வீட்டிலும் எதிர் வீட்டிலும் ஏதுமற்ற ஏதிலிபோல் கையேந்தி நிற்கும் இழி நிலைக்கு எது காரணம்?

அறிவமுதை அள்ளித் தந்து, சிந்தனைத் திறத்தை வளர்த்து வளப்படுத்த தாய் மொழியை தெரிந்துவனாக மட்டும் இருந்து கொண்டு, அதன் அளப்பரிய ஆற்றலை அறியாதவனாக இருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை! நம் தமிழ் மொழியின் ஆற்றலை அறிந்து தெளிவதுடன், அத்தகுதிப் பாட்டை முழுவீச்சில் வெளிப்படுத்த சரியான

முறையில் வளர்த்து வளப்படுத்த முயலவேண்டும் இக்காலச் சூழலுக்கேற்ப அறிவியல், தொழில்நுட்ப அறிவை சிறப்பாக வெளிப்படுத்தவல்ல மொழி தமிழ் என்பதை இன்றைய அறிவுலகுமுன் மெய்பித்துக் காட்ட வேண்டும் அதற்குள்ள தனி அம்சங்களையும் வெளிப்படுத்தி, அனைத்துத் தகுதிப்பாடுகளின் அடிப்படையில் அதனை செம்மொழியாக மத்திய அரசை அங்கீகரிக்கச் செய்ய வேண்டும்

எதிர்காலத்தில் தமிழ் பெற வேண்டிய சிறப்பு மிகு நிலைகள் எத்தகையதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை சுமார் முப்பத்தொன்பது ஆண்டுகட்கு, முன்னதாக, 1965 ஆம் ஆண்டில் மாநிலங்கள் அவையில் பேசியபோது பேரறிஞர் அண்ணா வெளிப்படுத்தி சென்றுள்ளார்

> "உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் என் தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கு இருக்கிறது அந்தத் தமிழ் மொழி மற்ற எந்த மொழிக்கும் தாழாத வகையில் 'ஆட்சி மொழி' எனற தகுதி தரபபடும் வரை நான் அமைதி பெறமாட்டேன்"

எனக் கூறியுள்ளது தமிழின் தகுதிபபாட்டிற்கேற்ப தமிழின் உரிமையை நிலைநாட்ட நமக்கு அளித்துள்ள அன்புக் கட்டளை ஆகும்

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக தமிழுக்கு செம்மொழித் தகுதிப்பாட்டை நடுவணரசின் அரசாணை மூலம் நிலைநாட்டுவது அடுத்து, இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழை சட்ட பூர்வமாக, அரசியலமைப்பில் இடம்பெறச் செய்வது ஆகும்

செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப் பாடுகளும் ஒருங்கே அமைந்துள்ள தமிழுக்கு அத் தகுதியை விரைவில் 'செம்மொழி' எனும் முத்திரை குத்தி அங்கீகரிக்கும் என்று நம்புகிறோம் இது ஒருவகை காலக்கட்டாயம் என்பதை தொடர் புடையவர்கள் உணர்வார்களாக

அத்தகுதிப்பாட்டை மொழியியல் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக வரலாற்றுப் போக்கில் விளக்கிக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும் இங்கு மற்றொரு செய்தியையும் குறிப்பிட விரும்புகிறேன் அண்மையில் தஞ்சையிலுள்ள சங்கங்கள் இணைந்து நடத்திய 'செம்மொழி' விளக்கக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரையின் எழுத்து வடிவமே இந்நூல் இதற்கான களம் அமைத்துத் தந்த பெருமை தஞ்சாவூர் ரோட்டரி சங்கத்தலைவர் திரு என் கணேசன் அவர்களையே சாரும் அறிவாற்றலும் செயல்திறனு மிக்க அவர் ஐந்து ரோட்டரி சங்கங்களை ஒன்றிணைத்து இக்கூட்டத்தை நடத்தினார்

சாதாரணமாக, 'சுழற்சங்கம்' என்றழைக்கப்படும் ரோட்டரிச் சங்கங்கள் பொது நலனையே உயிரோட்டமாகக் கொண்டவைகளாகும் எனினும், மொழி, கலை, இலக்கியப் பண்பாட்டுத் துறைகளின் பால் அவர்கள் அவ்வளவாகக் கவனம் செலுத்து வதில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும் அப்படியே ஆர்வம் ஏற்பட்டாலும் அது திரைப்படச் சார்புடையதாக மட்டுமே இருப்பதுதான் வழக்கம்

இந்நிலைக்கு மாறாக, தமிழ் வளர்ந்த தஞ்சை மண்ணில் முளைவிட்டு வளமாக வளர்ந்துவரும் சுழற்சங்கங்கள் தமிழ் மீது, அதுவும் அதன் எதிர்கால வளர்ச்சிமீது காட்டும் அக்கறையும் ஆர்வமும்

பெருமகிழ்வூட்டுவதாயுள்ளது இச்செயற்பாடு தமிழகமெங்குமுள்ள சுழற்சங்கங்கள், காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப எவ்வகையில் இயங்கினால் சமுதாயத்திற்கு நலம்பல பயக்கும் என்பதற்கு வழிகாட்டும் ஒரு முன்மாதியான ஆக்கச் செயல் என்பதில் ஐயமில்லை அத்தகு ஆக்கமிகு செயற்பாட்டிற்கு அடித்தளம் அமைத்துத் தந்த செயல்வீரர் 'ரோட்டரியன்' என் கணேசன் அவர்களும் அவரோடு இணைந்து செயல்பட்ட தஞ்சாவூர் சுழற்சங்கங்கள் அனைத்தும் பாராட்டிற் குரியனவாகும்

அன்பன்

மணவை முஸ்தபா

'தமிழ் செம்மொழி ஆக வேண்டும்' என்ற கோரிக்கை இதுகாறும் ஒரு வேண்டுகோளாக தமிழ் ஆர்வலர்களாலும் தமிழியல்துறை வல்லுநர் களாலும் அரசுக்கு விடுக்கப்பட்டு வந்தது ஆனால் இன்றோ அரசியல் கட்சிகளின் கோரிக்கையாக அது வடிவெடுத்துள்ளது இன்னும் சொல்லப்போனால் 'தமிழ் செம்மொழி ஆக வேண்டும்' என்பதைப் பேசாத தமிழ்நாட்டுத் தலைவர்கள் இல்லை, அரசியல் கட்சிகள் இல்லை தங்கள் தேர்தல் அறிக்கையில் மிக முக்கிய இடத்தை இதற்கு வழங்கியதிலிருந்தே அவர்கள் இக்கோரிக்கைக்கு அளித்துவரும் முக்கியத்துவத்தை நாம் நன்கு உணர்ந்து கொள்ளமுடியும் எனவே இக்கோரிக்கை இப்போது பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளதில் வியப்பேதும் இல்லை

## நூற்றாண்டுப் பிரச்சினை

பல்வேறு தரப்பினரின் கவனத்தை ஈர்த்த போதிலும் செம்மொழி பற்றிய தெளிவு எத்தனை பேரிடம் உள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டிய கேள்வியாகும் 'செம்மொழி' என்றால் என்ன? ஏன் தமிழ் 'செம்மொழி' ஆக்கப்பட வேண்டும்? இக்கோரிக்கை ஏன் திடீரென எழுப்பப்படுகிறது? அல்லது இதற்கு முன் எப்போதாவது இக்கோரிக்கை எழுப்பப்பட்டது உண்டா? அப்படியானால் எப்போது? எதற்காக எழுப்பப்பட்டது? இன்றையச்

சூழலில் இக்கோரிக்கைக்கு அப்படி என்ன தனி முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது? அரசு இக் கோரிக்கையை ஏற்பதால் தமிழுக்கு அப்படி என்ன பெரிய நன்மை விளைந்து விடப்போகிறது? இக் கோரிக்கையை இதுவரை அரசு ஏற்காமைக்குக் காரணம் என்ன? என்பன போன்ற வினாக்கள் பொது மக்களிடையே எழுவது இயல்புதான் தொடர் புடையவர்கள் இக்கேள்விகளுக்கெல்லாம் தக்கவாறு பதில் கூறக் கடமைப்பட்டுள்ளார்கள்

சுமார் நூற்றிருபது ஆண்டுகட்கு முன்பு தமிழுக்குச் சோதனையான ஒரு காலகட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது செம்மொழிப் பிரச்சினை, காலவோட்டத்தில் தமிழுக்கு நீதி கேட்கும் பிரச்சியாக மாறியது இன்றோ அதையும் கடந்த நிலையில் தமிழுக்கு முறைப்படி வழங்கப்பட வேண்டிய உரிமைப் பிரச்சினையாக மக்கள் மன்றததால் எழுப்பப்படுகிறது இதற்கு வலுவூட்டும் வகையில் அசைக்க முடியாத ஆதாரங்கள் முன் வைக்கப்பட்டுகின்றன அரசின் மௌனம் களைய வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இன்று உருவாகிக் கொண்டுள்ளது

தமிழ் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீதி வாய்ப்பட்ட உரிமைக் கோரிக்கையாக நூற்றிருபது ஆண்டுகளுக்கு மேல், வேரில் பழுத்த பலாவாக இருந்து வருகிறது அன்று இக்கோரிக்கை எழத் தூண்டுகோலாக இருந்த சூழ்நிலை எத்தகையது என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும்

வணிகத்திற்காக வந்து ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த ஆங்கிலேயர்கள், சுயநல வேட்கையோடு

தங்கள் செயல்பாடுகளைக் கைக்கொண்டிருந்தாலும் சுதேசிகளினுடைய நலத்திலும் ஓரளவு அக்கறை செலுத்துபவர்களாக இருந்ததைக் காணமுடிகிறது இதற்கு அடிப்படைக் காரணம் 'யார்' என்பதைக் காட்டிலும் 'என்ன' என்பதில் கருத்தூன்றும் அவர்தம் மனப்போக்குதான் என்று கூறலாம்

## கல்லூரி பாடமொழிப் பிரச்சினை

உயர்நிலைப் பள்ளிக் கல்வி வரை, அவரவர் தாய் மொழியையும் ஒரு பாடமாகக் கற்க வழி வகுத்திருந்த ஆங்கிலேய அரசு, கல்லூரிக் கல்வியிலும் அவரவர் தாய் மொழியை ஒரு பாடமாகக் கற்க வழி செய்ய முற்பட்டார் அன்றைய இந்திய வைஸ்ராயாக இருந்த கர்ஸான் பிரபு இம்முயற்சியை அறிந்த சம்ஸ்கிருதப் பண்டிதர்கள் சுறுசுறுப்படையத் தொடங்கினர் வடநாடு, தென்னாடு, கிழக்கு மேற்கு என்ற பேதங்கள் ஏதும் இல்லாமல் இந்தியா வெங்கணுமிருந்த சம்ஸ்கிருதப் பண்டிதர்கள் ஒன்றிணைந்து கர்ஸான் பிரபு முன் புதுக்கோரிக்கை ஒன்றை வைத்தார்கள் என்ன கோரிக்கை?

'இந்தியாவில் வாழும் மக்களில் மிகப் பெரும் பான்மையினர் ஹிந்து மத்தைப் பின்பற்றும், ஹிந்துக்கள் ஹிந்து சமய மொழியான சம்ஸ் கிருத்தை, தாய்மொழிக் கல்விக்குப் பதிலாக பாட மாக்குவதன் மூலம் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒரேவித சிந்தனையோட்டமுள்ள இந்தியர்களை உருவாக்க முடியும் இந்திய நாட்டின் ஒரே செம் மொழியான சம்ஸ்கிருதத்தைப் பாடமாகக் கற்பதன் மூலம்தான் ஒரேமாதிரியான பாரதப் பண்பாட்டை, கலையை, பழக்க வழக்கங்களை வளர்க்கவும், வளமடையச் செய்யவும் முடியும்' என்பதே

அக்கோரிக்கை இதன் மூலம் ஒத்த கருத்துடைய இந்தியக் குடி மக்களை எளிதாக உருவாக்க முடியும் என எடுத்துக் கூறி விளக்கப்பட்டது

அப்போது அதிகம் படித்தவர்களாக விளங்கியவர்கள் பிராமணர்கள் அரசின் முக்கியப் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருந்தவர்களும அவர்களே எனவே, நாடெங்கணுமிருந்து - சம்ஸ்கிருதப் பண்டிதர்களிடமிருந்து - வந்த கல்லூரிப் பாடத்திட்டத்தில் அவரவர் தாய் மொழிக கல்விக்குப் பதிலாக சம்ஸ்கிருதத்தை அமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையைச் சட்டபூர்வமாக்கும் வகையில் அப்போதிருந்த மத்திய சட்டசபையில் ஒரு தீர்மானம் வடிவில் கொண்டு வரப்பட்டது இதை நிறைவேற்றி சட்டமாக்கிட அனைத்து வகைகளிலும் முயற்சி மேற் கொண்டனர்

தாய் மொழிக கல்விக்கு மாறாக ஒரு குறிப்பிட்ட மதச் சார்புடைய வேத மொழியான சம்ஸ்கிருதத்தைப பாடமாக்குவதா? என்ற கேள்வி அன்று வைஸ்ராயாக இருந்த கர்ஸான்பிரவு முன் பேருருக் கொண்டது அத்துடன் இது நாடெங்கும் ஒரு விவாதப் பொருளாகவும் அன்றையச் சூழலில் மறாத் தொடங்கியது கர்ஸான் பிரபுவைச் சுற்றியிருந்த பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் அனைவரும் பிசிறில்லாமல் ஒரே குரலில் சம்ஸ்கிருதக் கல்வியை வலியுறுத்தி வந்தனர்

இதற்கு எதிர்ப்புக் குரல்களும ஆங்காங்கே பரவலாக எழத் தொடங்கின அதன் தொடர்ச்சி யாகத் தமிழ் அறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் இங்கிருந்தபடியே எதிர்ப்புக் குரல் எழுப்பத் தொடங்கினர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்

இருவர் ஒருவர் ஆங்கிலத்தில் நிறை புலமையும் சுய மரியாதைச் சிந்தனையுமுடைய மு.சி பூரணலிங்கம் பிள்ளை அவர்களும் சென்னைக் கிருத்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரான வீ.கோ சூரிய நாராயண சாஸ்திரி எனும் பெயருடைய பரிதிமாற் கலைஞருவருமாவர் இவர் சம்ஸ்கிருதப் புலமை படைத்த பண்டிதரும் கூட. திரு மு.சி பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் தன்னை இன்னாரென வெளிக் காட்டிக் கொள்ள விழையாதவராக 'எம் எஸ் பேட்ஃபீல்டு' எனும் புனை பெயரில் அப்போது சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'தி மெட்ராஸ் மெயில்' என்ற ஆங்கில இதழில் கட்டுரைகள் எழுதி எதிர்ப்புக் குரல் எழுப்பி வந்தார்

## செம்மொழிப் போர்வையில் சம்ஸ்கிருத முனைப்பு

சம்ஸ்கிருதத்தை கல்லூரிப் பாடமாக ஆக்க பண்டிதர்களும் பிராமண அதிகாரிகளும் கூறி வந்த காரணங்களுள் மிக முக்கியமான ஒன்று, இந்திய மொழிகளிலேயே 'செம்மொழி' எனும் தனித்தகுதி பெற்ற ஒரே மொழி சம்ஸ்கிருதம் மட்டுமே என்பது தான் தான் போதிய அளவு சம்ஸ்கிருத மொழியறிவு பெற்றிருந்தபோதிலும், தாய் மொழிக் கல்விக்கு மாற்றாகச் 'சம்ஸ்கிருதக் கல்வி' என்ற சம்ஸ்கிருத ஆர்வலர்களின் வாதத்தை ஏற்காத பரிதிமாற் கலைஞர் எனும் வீ கோ சூரிய நாராயண சாஸ்திரியார், சம்ஸ்கிருத மொழியைவிட எல்லா வகையிலும் ஏற்றமிகு மொழியாக - ஆற்றல்மிகு மொழியாக, இன்னும் சொல்லப்போனால் மற்ற எல்லா மொழி களையும் விட உயர்வான நிலையில் போற்றத்தக்க தனித்தன்மையுடன் செம்மையாய் அமைந்த மொழி

தமிழ் என்பதற்கொப்ப "உயர்தனிச் செம்மொழி"யாக அமைந்திருப்பது தமிழே என்பதை எண்பிக்க எல்லா வகையிலும் முயன்றார்

கல்லூரிப் பாடத்திட்டத்தில் தாய்மொழிக் கல்வியாக சேர்க்கப்பட வேண்டியது அவரவர் தாய் மொழியா? அல்லது இந்தியாவின் ஒரே செம் மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்ஸ்கிருதமா? என்ற விவாதம் ஒரு கட்டத்தை எட்டியபோது, அதனை முடிவு செய்யும் பொறுப்பை அன்று இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாகத் திகழ்ந்த சென்னைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்க முடிவு செய்தார் வைஸ்ராய் கர்ஸான் பிரபு அவர்கள் வைஸ்ராயிடமிருந்து வந்த கோரிக்கை, மொழித் தொடர்புடையதாக இருப்பதால் அதன் மீது முடிவெடுக்க தகுந்த அமைப்பு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமே எனக் கருதிய அன்றைய சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர், முடிவெடுககும் முழுப் பொறுப்பையும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திடமே ஒப்படைத்தார்

## தமிழ்காத்த தகைமை

இதையறிந்த பரிதிமாற் கலைஞரும் எம் எஸ் பூரணலிங்கம் பிள்ளை அவர்களும் முடிவெடுக்கும் அதிகாரம படைத்த ஆசிரியர் சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே சந்திதது, தாய் மொழிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினர் இதற்காக இவ்விருவரும் பம்பரம் போல் சூழன்று செயலாற்றினர் இவர்கள் விரும்பியது போலவே பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் 'கல்லூரிகளில் அவரவர் தாய்மொழிக் கல்வியே பாடமாக்கப்பட வேண்டும்' எனத் தீர்மானம்

நிறைவேற்றி, பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பியது துணைவேந்தர் அந்த முடிவையே சென்னைப் பல்கலைக்கழக முடிவாக வைஸ்ராய் கர்ஸான் பிரவுக்கு அனுப்பி வைத்தார் சென்னைப் பல்கலைக்கழகத் தீர்மானத்தை அரசின் தீர்மானமாக ஏற்றுக் கொண்ட கர்ஸான் பிரபு, இந்தியாவெங்கும் உள்ள கல்லூரி மாணவர்கட்கு அவரவர் தாய் மொழிக் கல்வி பெற பாடத்திட்டத்தில் வகை செய்யப்பட்டது இதன் மூலம் இந்தியக் குடிமக்கட்கு அவரவர் தாய் மொழிக்கல்வி, கல்லூரிகளில் ஒரு பாடமாக உறுதி செய்யப்பட்டது பரிதிமாற் கலைஞர், மு சி பூரணலிங்கம் பிள்ளை முயற்சி களுக்குப் பின்புலமாகவும் மிகப்பெரும் உதவியாகவும் விளங்கிய பெருமை, நான்காம் தமிழ் சங்கத்தை மதுரையில் நிறுவிய பாண்டித்துரை தேவர் அவர்கட்கும் உண்டு என்பதை நன்றியுணர்வோடு நினைவுகூரத் தமிழ் மக்கள் என்றென்றும் கடமைப் பட்டுள்ளனர்

## திரும்பும் வரலாறு

நூறாண்டுகளுக்கு முன்னர் என்னென்ன காரணங்களைக் காட்டி, பாடத் திட்டங்களில் இடம் பெற சம்ஸ்கிருத மொழி துடித்ததோ, அதே காரணங்களைக் காட்டி, இன்றைய பாடத் திட்டத்தில் இடம் பெற பகீரத முயற்சி மேற்கொண்டு வருகிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை அன்று யாரெல்லாம், எப்படியெல்லாம் முயற்சி மேற்கொண்டு சம்ஸ்கிருதத்துக்கு சிம்மாசனம் அளிக்க முற்பட்டார்களோ, துணை நின்றார்களோ அதே தன்மையினர் தான் இன்றும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் முயற்சி மேற்கொண்டுள்ளனர்

அன்று பரிதிமாற் கலைஞர், பூரணலிங்கம் பிள்ளை, பாண்டித்துரைத் தேவர் போன்ற ஒருசிலர் விழித்துக் கொண்டு செயல்பட்டு, அம்முயற்சியை தடுத்து நிறுத்தி, இந்திய மொழிகளைக் காத்தனர் இன்றோ பலதரப்பு மக்களும் விழிப்பாயிருப்பதனால் மொழி ஆதிக்கத்தை நிலை நாட்ட மறைமுகமான முயற்சிகள் எல்லா மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன என்பதை விழிப்புணர்வு உடையோர் நன்கு அறிந்தே உள்ளனர் தமிழ்நாட்டை பொறுத்த வரை அத்தகைய விழிப்புணர்வின் வெளிப்பாடுதான் அனைத்துத் தகுதிப்பாடுகளும் சிறப்புமிகு தனித் தன்மைகளும் ஒருங்கு கொண்ட தமிழை 'செம்மொழி' யாக மத்திய அரசு அங்கீகரித்து அறிவிக்க வேண்டும் என்ற உரிமைக் கோரிக்கை, இதுவெறும் கோரிக்கை மட்டுமன்று, நீதியின் அடிப்படையில் நிலைநிறுத்தப் படும் உரிமை வேட்கையுமாகும் இன்னும் சொல்லப் போனால் ஒரு ஒருவகையில் தவிர்க்கவியலா உரிமை முழககமுமாகும்

### சிறப்பு அம்சங்கள்

தமிழ் 'செம்மொழி' என எண்பிப்பதற்கான மொழியியற் கோட்பாடுகளையன்னியில், சில சிறப்பமசங்கள் இந்திய மொழிகளிலேயே தமிழுக்கு மட்டுமே உள்ளன என்பதை இந்த நேரத்தில் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்

### பன்னாட்டு மொழி - தமிழ்

இந்திய மொழிகளிலேயே 'பன்னாட்டு மொழி' என்ற தகுதிப்பாடு தமிழுக்கு மட்டுமே கிடைத்துள்ள மிகபபெரும் பெருமையாகும் இந்தி உட்பட மற்றைய மொழிகளெல்லாம் இந்திய மொழிகள் எனும்

மகுடத்தைத் தாங்கும் அதே வேளையில், தமிழ் மொழி மட்டுமே இந்தியப் பன்னாட்டு மொழி (Indian International language) எனும் சிறப்புத் தகுதிப் பாட்டினைப் பெற்றுள்ளதென்பது இங்கு கவனித்தற் குரிய ஒன்றாகும்

ஒரு நாட்டு மொழி மற்றொரு நாட்டின் ஆட்சி மொழியாகவோ அல்லது ஆட்சி மொழிகளில் ஒன்றாகவோ சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், அந்த மொழி 'பன்னாட்டு மொழி' எனும் சிறப்புமிகு தகுதியைப் பெற்றுவிடும் அவ்வகையில், தமிழ்மொழி இலங்கையில் ஆட்சிமொழிகளில் ஒன்றாக சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது அதே போன்று சிங்கப்பூரிலும் தமிழ் ஆட்சிமொழிகளில் ஒன்றாக, சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு, சம உரிமை யுடன் நடைமுறையில் இருந்துவருகிறது

## உலகெங்கும் தமிழ்

அது மட்டுமல்ல, மலேசியாவில் நாடாளுமன்ற மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது பிபிசி போன்ற உலகப் புகழ் பெற்ற ஒலிபரப்புகளில் பன்னாட்டு மொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட்டுள்ளது பிபிசி போன்றே சீன வானொலியிலும் தமிழ் ஏற்கப்பட் டுள்ளது அது போன்றே உலகப் பேரமைப்பான யுனெஸ்கோ வெளியீடான 'யுனெஸ்கோ கூரியர்' பன்னாட்டு மாத இதழை தமிழிலும் வெளியிட்டதன் மூலம், தமிழ் சர்வதேச மொழிகளில் ஒன்று என்ற தகுதிப்பாட்டினைப் பெற்றுள்ளது தெளிவாகிறது அவற்றையெல்லாம் விட தமிழுக்கு உலக அரங்கில் கிடைத்துள்ள பெரும் சிறப்பு சுமார் 53 நாடுகளில்

உள்ள தமிழர்களால் பேசப்படும் சர்வதேச மொழியாகவும் தமிழ் அமைந்துள்ளது இன்னும் சொல்லப்போனால், உலகெங்கும் பரவலாகப் பேசப்படும் ஒரே ஆசிய மொழி தமிழ் ஆகும் உலகெங்கும் பரவி வாழும் ஈழத்தமிழர்கள் தமிழைப் பேசி வருவதோடு அதன் வளர்ச்சிக்கும் உழைத்து வருகிறார்கள் எனலாம் தமிழில் படித்து பட்டம் பெறுவதை கனடா அரசு அங்கீகரித்துள்ளது என்பது தமிழ் சர்வதேச மொழி என்பதற்குக் கிடைத்த ஒருவகை அங்கீகாரமாகும்

## செம்மொழி - தகுதிப்பாடுகள்

ஒருமொழி சிறந்த மொழியாகவும் உயர்ந்த மொழியாகவும் இருக்கலாம் அதிகமான எண்ணிக்கையினரால் பேசவும் எழுதவும் பயன் படுத்தப்பட்டு வரலாம் அது ஒரு சிறப்புமிகு மொழியாகக் கருதப்படுமேயன்றி 'செம்மொழி'யாகக் கருதப்படாது

செம்மொழியாக உலகினரால் அங்கீகரிக்கப் பட வேண்டுமெனில் அதற்கு மொழியியல் அடிப் படையில் பதினொரு (11) தகுதிப்பாடுகள் இருக்க வேண்டுமென மொழியியலாளர்கள் வரையறை செய்துள்ளனர் இத்தகைய பதினொரு தகுதிப் பாடுகளும் உள்ள மொழிகள் மட்டுமே செம் மொழிகளாக அங்கீகரிக்கத்தகக தகுதிப்பாடுடைய மொழிகளாகும் உலகிலுள்ள செம்மொழிகளில் தமிழ் ஒன்று மட்டுமே இத்தகுதிப்பாடுகள் அனைத்தும் கொண்ட ஒரே மொழி என்பது நமக்கே தெரியாத மாபெரும் மொழியியல் உண்மையாகும்

### செம்மொழிக்குரிய 11 தகுதிப்பாடுகள்

செம்மொழித் தகுதிக்கு மொழியியலார் வகுத்துத் தந்துள்ள பதினொரு தகுதிப்பாடுகளாவன.

1 தொன்மை (Antiquity)

2 தனித்தன்மை (Individuality)

3 பொதுமைப் பண்பு (Common character)

4 நடுவு நிலைமை (Neutrality)

5 தாய்மைத் தன்மை (Parental Kingship)

6 பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு

7 பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை

8 இலக்கிய வளம் (Literary prowess)

9 உயர் சிந்தனை (Noble ideas and ideals)

10 கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு - பங்களிப்பு

11 மொழிக் கோட்பாடு (Linguistic Principles)

மேற்கண்ட பதினொரு தகுதிப்பாடுகளை யுடைய மொழியே செம்மொழியாக ஏற்கப்படும் என்பது மொழியியலார் வகுத்தமைத்துள்ள அளவு கோளுக்கு ஓரளவு உட்பட்டு வருவனவாகவே லத்தீன், ஹீப்ரு, கிரீக் முதலான மேலைநாட்டுச் செம்மொழிகளும் சம்ஸ்கிருதம், பாரசீகம், அரபி போன்ற ஆசிய மொழிகளும் அமைந்துள்ளன இப்போது செம்மொழியாக வழக்கில் இருந்துவரும் மொழிகளில் அனைத்துத் தகுதிப்பாடுகளும் ஒருங்கே அமையப் பெற்ற செம்மொழியாக எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை

இனி, இத்தகுதிப்பாடுகள் என்ன என்பதை ஆராய்வோம்:

### 1. தொன்மை (Antiquity)

தமிழரின் தோற்ற வரலாற்றைக் குறிப்பிடும் போது, 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி' என்பது ஆன்றோர் வாக்கு

தமிழரைப் போன்றே தமிழின் தோற்ற வரலாற்றைக் கணித்தறிய முயன்ற மொழியியல் அறிஞர்கள் அனைவருமே காலம் கணக்கிடவியலா தொன்மைமிகு மொழி தமிழ் என்றே குறிப்பிட்டுள்ள னர் மனிதகுல தோற்ற வரலாற்றோடு இயைபுடைய தாக இதனைக் கருதுவோரும் உண்டு எனவேதான் தமிழின் தொன்மையைப் போற்ற முனைந்த பாரதி, "ஆதிசிவன் பெற்றுவிட்டான்" எனப் பாடி, இறைவனால் உருவாக்கப்பட்டு, மனித குலத்துக்கு வழங்கப்பட்ட மொழியே தமிழ் எனக் கூறிப் பெருமைபட்டுக் கொண்டான் இதே உணர்வையே இஸ்லாமும் கிருஸ்தவமும் கொண்டுள்ளன என்று கூறலாம்

### முதல் மனிதர் ஆதாம் பேசிய மொழி தமிழ்

ஆதி மனிதனாகிய ஆதாமும் ஏவாளும் பேசவும் தன் சந்ததியினர்க்கு விட்டுச் செல்லவும் இறைவனால் வழங்கப்பட்ட ஆதி மொழி தமிழ் என்பது, தமிழர்கள் வாழ்ந்ததாகக் கண்டறியப்பட்ட குமரிக் கண்டத்தை ஆராய்ந்த ஆய்வாளர்களின் கருத்து கடல் பிளவுகள் (Rift) ஏற்படும் முன் ஒரே நிலப்பகுதியாக இணைந்திருந்த குமரிக்கண்டப் பகுதியில் தான் தமிழர்கள் வாழ்ந்திருந்தார்கள் அவர்கள் தமிழைப்

பேசுவதோடு, தமிழை வளர்த்து வளப் படுத்த இரண்டு தமிழ்ச் சங்கங்களையும் அப்பகுதியில் உருவாக்கி தமிழை வளர்த்தார்கள் என்பது 'இறையனார் களவியலுரை' போன்ற நூற்கள் தரும் தகவலாகும் இப்பகுதியில் தமிழ் பேசும் நாற்பத் தொன்பது நாடுகள் இருந்ததாகவும், இங்கு இருவேறு காலகட்டங்களில் முதல் தமிழ்ச் சங்கமும் இரண்டாம் (இடைச்சங்கம்) தமிழ்ச் சங்கமும் இருந்ததாகவும் கருதப்படுகிறது கடற் பிளவு ஏற்பட்டபோது, நிலப் பகுதிகள் பல்வேறு திசைகளை நோக்கி நகர, மூலத் தமிழ்ப் பகுதி குறுகலாயிற்று அத்துடன் மலைகளும் ஆறுகளும், சமநிலப் பெருவெளிகளும் காலப் போக்கில் திடீர் திடீரென கடலுள் மூழ்க தமிழர்கள் எஞ்சிய இந்திய நிலப்பகுதியில் மட்டும் வாழ்வாராயினர் இந்நிகழ்வைப் பதிவு செய்ய விழைந்த சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள்,

"பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"

என வருந்திப் பாடுவாராயினார்

எஞ்சிய இந்தியப் பகுதியின் தென்பகுதி மதுரையில் 'கடைச் சங்கம்' என அழைக்கப்படும் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்க்கலாயினர் தமிழர்.

இப்பகுதியில் தமிழ் வழங்கிவந்ததற்கு ஆதாரமாக ஆசிய, ஆஃப்ரிக்க மொழிகள் பலவற்றில் தமிழ்ச் சொற்கள் விரவிக் கிடப்பதைச் சான்றாகக் கூறுகின்றனர் இதுவரை நிலப்பகுதி மொழியின் தொன்மையைப் பார்த்தோம் இனி, தமிழ் இலக்கண இலக்கியத் தொன்மையைக் காண்போம்

## தொன்மை இலக்கணம் 'தொல்காப்பியம்'

தமிழ் இலக்கண நூல்களில் மிகத் தொன்மையான இலக்கண நூலாக அமைந்திருப்பது தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பிய இலக்கண நூலாகும் இஃது சுமார் 2,600 ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்டிருக்கலாம் என இலக்கண வரலாற்றாசிரியர்கள் கணித்துக் கூறியுள்ளனர் இவ்வளவு பழமையுடை இலக்கண நூல் வேறு எந்த இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதம் உட்பட இருப்பதாகத் தெரியவில்லை உலக மொழிகளிலாவது இருக்கிறதா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்

உலக மொழி இலக்கண நூல்களில் காணக் கிடைக்காத ஒரு தனிப்பெரும் சிறப்பு 'தொல்காப்பிய' இலக்கண நூலில் காணக்கிடக்கிறது அதுதான் மொழிக்கு இலக்கணம் வகுத்ததோடமையாது, மனித வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்த நூலாக விளங்குவது அதன் தனிச் சிறப்பாகும்

## தமிழ் இலக்கியத் தொன்மை

ஒரு மொழியில் இலக்கண நூல் இருக்கிறதென்றால் அது தோன்றுவதற்கு ஆதாரமான இலக்கியங்கள் அம்மொழியில் பெருமளவு உருவாகியிருக்க வேண்டும் எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல இலக்கியப் படைப்புகளின் அடிப்படையிலேயே இலக்கண விதிமுறைகள் உருவாக்கவியலும் என்பது உலகியல் முறை இது, வாழ்க்கையிலிருந்து எழும் இலக்கியமே மனிதனுக்கு வாழக் கற்றுத் தரும் ஆசானாக அமைவதுபோல், இலக்கியங்களிலிருந்து வகுக்கப்படும் இலக்கண விதிகளே இலக்கியப் படைப்புகள் சிறந்த முறையில் உருவாக்கப்பட வழி

காட்டும் ஒளிவிளக்குகளாக அமைகின்றன. இந்த அடிப்படையில் தொல்காப்பியத்திற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழில் பலவகையான இலக்கியப் படைப்புகள் உருவாகி இருக்க முடியும் இவ்வளவு நீண்ட காலப் பழமையுடைய இலக்கியங்கள் வேறு எந்த மொழியிலாவது உண்டா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்

## உலகிலேயே முதல் தொகுப்பு நூல் தமிழில் மட்டுமே

ஒரு மொழியின் பழமையைக் கண்டறிய இலக்கியவாணர்களும் மொழியியல் வல்லுநர்களும் கைக்கொண்டுள்ள அளவுகோல், அம்மொழியில் முதல் தொகுப்பு நூல் எப்போது தொகுக்கப்பட்டது என்பதாகும்.

மேற்குலக மொழிகளில் பழமைமிக்கதாகக் கூறப்படும் மொழி கிரேக்க மொழியாகும் இம் மொழியில் உருவாக்கப்பட்ட முதல் தொகுப்பு நூல் "கால்ண்டு ஆஃப் மெனிகர்" என்பதாகும் இத்தொகுப்பு நூல் தொகுக்கப்பட்ட காலம் கிமு முதல் நூற்றாண்டாகும்

இதே போன்று மேற்குலக பழம்பெரு மொழிகளில் ஒன்றாகக் கருதப்படுவது லத்தீன் மொழியாகும் பிற்காலத்தில் இறப்பை மேற்கொண்டு இயங்கா மொழியாகிவிட்டபோதிலும் ஏசுவின் இறை வேத மொழியாகப் போற்றப்படும் மொழி லத்தீன் மொழியாகும் இம்மொழியில் முதல் தொகுப்பு வெளிவந்த ஆண்டு கிபி ஐந்தாம் நூற்றாண்டாகும்

இந்திய மொழிகளில் தமிழுக்கு அடுத்த பழமையுடைய மொழியாகக் கருதப்படும் மொழி சம்ஸ்கிருதம் ஆகும் சம்ஸ்கிருத மொழி இலக்கிய வரலாற்றில் முதல் தொகுப்பு நூலாகக் கருதப்படும் 'கவிந்த்ர வரச சமுத்சயம்" எனும் தொகுப்பு நூல் வெளிவந்தது கி பி பத்தாம் நூற்றாண்டு என்று வடமொழி இலக்கிய வரலாறு குறிப்பிடுகிறது

ஆனால், அதே சமயத்தில் தமிழில் முதல் தொகுப்பு நூலாகக் கருதப்படுவது "நெடுந்தொகை" ஆகும் இஃது தொகுக்கப்பட்ட ஆண்டு கி மு இரண்டாம் நூற்றாண்டு எனச் சங்க இலக்கிய வரலாறு கூறுகிறது

இவ்வாறு உலகப் பெருமொழிகளில் குறிப்பாக செம்மொழிகளில் தொகுக்கப்பட்ட முதல் தொகுப்பு நூல் கூட, தமிழிலேயே முதலில் தொகுக்கப் பட்டுள்ளது என்பது வரலாற்று அடிப்படையில் கிடைக்கும் அசைக்க முடியாத ஆதாரபூர்வ செய்தியாக அமைந்துள்ளது

## 2. தனித்தன்மை (INDIVIDUALITY)

பழமையைப் போலவே மொழி, இலக்கிய, இலக்கணத் தனித்தன்மைகளும் செம்மொழிக் குரிய தனிப் பெரும் அம்சமாகக் கருதப்படுகிறது

உலக மொழிகளில் எந்தவொரு மொழியும் இயல், இசை, நாடகமென முப்பெரும் பகுப்பாகக் பகுக்கப்பட்டு, பின் அவை அனைத்தும் ஒன்றிணைக்கப் பட்டு ஒரே மொழியாக அமைந்திருப்பதாக கூற முடியவில்லை ஒரே மொழியாயமைந்து, அதுவே,

இயலுக்கும் இசைக்கும் நாடகத்தும் பயன்படும் மொழியாக அமைந்து இருக்கலாமே தவிர, முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து, அவை ஒன்றி, மொழி என்ற நிலையில் எந்தவொரு மொழியும் அமைந்திருக்கவில்லை என்றே கூறலாம்

அந்த வகையில் தமிழ்மொழி மட்டுமே உலகில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்தமிழாக வளர்ந்து, வளம் பெற்று வந்துள்ளது இதனைச் செந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரப் பதிகம்,

> "இயலலிசைநாடகப் பொருட்தொடர் நிலைச் செய்யுள்"

என்று கூறி உறுதிப்படுத்துகிறது

அகம் - புறம்

சங்க காலத் தமிழ்ப் புலவர்கள் ஒட்டு மொத்த மனித வாழ்வை, அவற்றின் அடிப்படையில் அகம் - புறம் என இரண்டாகப் பிரித்து இலக்கியம் படைத்தனர் சமுதாய வாழ்வை இரு பெரும் பிரிவாக பிரித்த தமிழ்ப் புலவர்கள், உள்ளம் சார்ந்த வாழ்வை அகவாழ்க்கை என்றும் வீரம் சார்ந்த வெளி வாழ்க்கையைப் புறவாழ்க்கை என்றும் பிரித்து இலக்கியம் படைத்து, செழுமைப்படுத்தினர் காதல் வாழ்வாகிய அகவாழ்வையும் கூட இரண்டாகப் பிரித்து களவியல் - கற்பியல் எனப் பகுத்து வாழ்ந்த தனித்தன்மையும் தமிழ்ப் புலவர்கட்குண்டு காதல் வயப்பட்ட வாழ்வுச் சூழலை 'களவியல்' என்றும் மனமொத்து, மணமுடித்து, இல்லறம் பேணிவாழும் நல்லற வாழ்வைக் 'கற்பியல்' எனக் கொண்டு வாழும் தமிழரின் வாழ்வு நெறி இலக்கியத்தில் மட்டுமல்ல,

சமுதாய அமைப்பு முறையிலும் தனித்துவமுடைய தாகும்

## வியக்கவைக்கும் ஐந்திணைப் பகுப்பு

இந்த உலகை ஐந்து வகைப்பட்டனவாகப் பகுத்து இலக்கியம் படைத்த பெருமை தமிழ்ப் புலவர்கட்கு உண்டு உலகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பகுத்து, அவற்றின் தன்மைகளை வாழ்வியலோடு இணைத்து இலக்கியம் படைத்த பெருமை தமிழுக்குண்டு இப்பகுப்பு முறை வேறு எந்த மொழியிலும் இருப்பதாகத் தெரியவில்லை தமிழ்நாட்டில் பாலை வனம் ஏதும் இல்லையென்றாலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலப்பகுதிகள் தன்னிலை திரிந்து பாழடைந்து போனால், அப் பகுதியை பாலையாகக் கருதி இலக்கியம் படைக்கும் போக்கு தமிழுக்கேயுரிய தனித்தன்மையாகும்

## கலை, பண்பாடு, நாகரிக வெளிப்பாடு

தமிழ் இலக்கியங்களின் குறிப்பிடத்தக்க மற்று மொரு தனித்தன்மை, அவை சமுதாயத்தின் எந்தப் பிரிவினரையும் முழுமையும் சார்ந்ததாகப் படைக்கப் படவில்லை சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரைச் சுட்டிக்காட்டும் வகையில் இலக்கியப் படைப்பு அமையினும், அப்பிரிவினரிடையே பேதமேற் படுத்தும் வகையிலோ வேற்றுமை உணர்வுகளை உண்டாக்கும் முறையிலோ எந்தவொரு அம்சமும் இடம்பெறா வகையில் உருவாக்கப்பட்டவைகளாகும் இன்னும் சொல்லப்போனால், சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரைத் தொட்டுக் காட்டினாலும்

தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டு மொத்த பண்பாட்டு, கலை, நாகரிக வெளிப்பாடுகளாக அமைந்தனவே தவிர, எந்த ஒரு குறிப்பிட்ட சாராரையும் சார்ந்ததாக அமைக்கப்படாதது தமிழ் இலக்கியத்திற்காணும் தனித்தன்மையாகும்

## உலகின் முதல் குடிமக்கள் காப்பியம்

உலகின் மிகப் பெரும் காப்பியங்கள் அனைத்துமே அரசர்களையும் அரசிகளையும் நாயகர்-நாயகிகளாகக் கொண்டு படைக்கப்பட்ட வைகளாகும் உலகப் பழம்பெரும் மொழிகளான கிரேக்க மொழியாயினும் லத்தீன் அல்லது சீனம் மற்றும் சம்ஸ்கிருத இலக்கியமாயினும் அனைத்துப் படைப்புகளுமே அரசகுல நடவடிக்கைகளை விவரிப்பனவாகவே இருப்பதாகக் காணலாம் ஆனால், அதே கால கட்டத்தில் தமிழில் இயற்றப் பட்ட முதல் காப்பியமான சிலப்பதிகாரம் சாதாரண குடிமகனான, வணிகர்களின் வழித் தோன்றல்களான கோவலன் - கண்ணகியை கதாநாயகனாகவும் நாயகியாகவும் அமைத்து உருவாக்கப்பட்ட உன்னதப் படைப்பாகும் மற்ற மொழிப் பேரிலக்கியப் படைப்பு களெல்லாம் அரச குலக்காப்பியங்களாக இருக்க முதல் தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரமும் இரண்டாம் பெருங்காப்பியமான மணிமேகலையும் சாதாரண குடிமக்கள் காப்பியங்களாக அமைந் திருப்பது தமிழ் இலக்கியத் தனித்தன்மையை நிலை நாட்டுவதாகும் அதிலும் சிலப்பதிகாரமும் மணி மேகலைக் காப்பியமும் ஒரே குடும்பத் தொடர் புடைய இலக்கியமாக அமைந்திருப்பது மற்றொரு சிறப்புத் தன்மையாகும். இங்கு இன்னொரு

செய்தியையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் செம்மொழியாக ஏற்கப்பட்டுள்ள சம்ஸ்கிருத இலக்கியங்கள் துறவிகளையும் புரோகிதர்களையும் சார்ந்ததாக உருவாக்கப்பட்டிருக்கும்போது, சங்கத் தமிழ் இலக்கியங்கள் வீரர்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளன

## உள்ளது உள்ளபடி வாழ்க்கை விளக்கம்

சங்ககால இலக்கியங்களில் நாம் காணும் மற்றுமொரு தனித்தன்மை, இவற்றில் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி விவரிக்கப்பட்டிருப்பதாகும் பிற்கால சமய இலக்கியங்களில் விவரிப்பது போல் இல்லாமல் கூடுதல் குறைப்பு இல்லாமல் வாழ்க்கையை உள்ளபடி விவரிக்கும் போக்கையே அவற்றில் காண முடியும் அதுமட்டுமில்லாமல், வாழ்க்கையை அறிவியல் சிந்தனைப் போக்கிலும் சமுதாய வாழ்வை மிகைப்படுத்தாமலும் கூறுவதன் வாயிலாக அன்றைய சமுதாய மக்களின் வாழ்வின் நோக்கையும் போக்கையும் தெளிவாகக் காட்டும் காலக் கண்ணாடி யாக சங்கப் படைப்புகள் இன்றும் திகழ்கின்றன

## அறிவியல் அடிப்படையில் இலககியம்

சங்க கால இலக்கியத்தின் மற்றொரு தனித் தன்மை அறிவியல் செய்திகளை உள்ளடக்கிய அருந் தமிழ்ப் பாக்களை இயற்றியிருப்பதுதான் அறிவியல் என்பது ஏதோ அண்மைக் காலத்தில், ஆங்கிலேயர் களின் ஆட்சியின் விளைவாக இஙகு இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய துறை என்ற எண்ணமே எல்லோரிடமும் மேலோங்கியுள்ளது ஆனால், உணமை நிலை என்னவென்றால் சங்க காலத்திலும்

சங்க காலத்திற்கு முன்னதாகவும் வாழ்ந்த தமிழர்கள் அறிவியல் பூர்வமாக வாழ்ந்தவர்கள் அப்போது அவர்கள் மீது சமயத் தாக்கம் ஏதும் படிந்திருக்க வில்லை சமயத் தாக்கம் ஏதுமில்லாத அன்றைய தமிழன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான் அறிவியல் பூர்வமான சிந்தனைகளோடு தன் வாழ்வியல் போக்குகளை அமைத்துக் கொண்டான் வானவியலிலும் கடலியலிலும் கப்பலியலிலும் சிறந்து விளங்கிய தமிழன், உலகெங்கும் கப்பல் செலுத்தி வாணிகம் செய்தான் வடக்கே வடகடல் தாண்டி சீனா வரை சென்றான் மேற்கே மத்தியதரைக் கடல் தாண்டி மேற்கு ஐரோப்பா வரை சென்று வாணிகம் செய்தான் கிழக்கே கம்போடியா வரையிலும் தெற்கே நியூஸிலாந்து வரையிலும் சென்றான் என்பதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன பெல்ஜியத்தில் கிடைத்துள்ள தமிழ் எண்களைக் கொண்ட கடிகாரமும் பெய்ஜிங்கில் புதை பொருளாய்வின்போது கிடைத்த சீன, தமிழ் எழுத்துக்கொண்ட கல்வெட்டுகளும் நியூசிலாந்து அருகில் கடலுள் மூழ்கிக் கிடந்த கப்பலிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட கப்பல் மணியும் மற்றும் கம்போடியாவிலுள்ள ஆங்கோர்வாட் கோயிற்றொகுதியின் அருகிலுள்ள 'சோளே தோய்' (சோழர் காலனி) 'பாண்டியே தோய்' (பாண்டியர் காலனி) என்றழைக்கப்படும் இடங்கள் எல்லாமே தமிழர்களுடைய வெளிநாட்டுத் தொடர்பு களை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் நினைவுச் சின்னங்களாகும்

இவ்வாறு அறிவியல் அறிவோடு உலகளாவிய முறையில் வாழ்ந்த தமிழர்கள், அன்று பெற்றிருந்த

அறிவியல் அறிவு நம்மை வியக்கவைக்கிறது இன்று அறிவியல் உலகம் எதையெல்லாம் கண்டறிந்துள்ளதாகப் பெருமைப்படுகிறதோ, அந்த அறிவியல் உண்மைகளையெல்லாம் சங்ககாலத் தமிழன் நன்கு அறிந்து, உணர்ந்து தெளிந்திருந்தான் என்பதை அன்றைய சங்கப் பாக்களே இன்றும் விவரித்துக் கூறி நம்மை வியப்பிலாழ்த்துகின்றன

இந்த நிலவுலகம் எவ்வாறு தோன்றியது என்பதை அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் இன்று தெளிவாக அறிந்துள்ளோம் ஆனால், இந்தக் கண்டுபிடிப்பின் அறிவியல் உண்மைகளை முதன் முதலாகப் பதினாறாம் நூற்றாண்டில் கோப்பர் நிக்கஸ், கலீலியோ போன்ற வானவியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துக் கூறியபோது, உலகம் ஏற்கத் தயங்கியது அறிவியல் உண்மைகளை கூறியதற்காக கலீலியோ போன்றவர்கள் கடுமையாகக் கண்டிக்கப் பட்டனர் சிறையில் அடைத்துக் கொடுமையாகத் தணடிக்கப்பட்டனர் ஆனால் அதே அறிவியல் உண்மைகளை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழன் தெளிவாகக் கண்டறிந்து, சங்கப் பாடல்களில் மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளான் சான்றாக, இந்த உலகம் எவ்வாறு உருவாகி நிலை பெற்றது என்பதை விவரிக்க முனைந்த சங்கப் புலவன்,

> "செந்தீச் சுடரிய ஊழியும் - பனியொடு
> தண்பெயல் தழீஇய ஊழியும்"

எனச் சுருக்கமாகக் கூறுகிறான்

'சூரியனிலிருந்து தெறித்து விழுந்த அனற் பிழம்பான இவ்வுலகம் நெருப்புக் கோளமாக ஒரு ஊழிக்காலம் வானில் சுழன்று கொணடேயிருந்தது

பின், வெப்பம் குறையவே மேற்பகுதி பனிப் படலங்களாகப் படிந்தது ஒரு ஊழிக் காலத்துக்குப் பின் பனி உருகி பள்ளங்கண்டவிடம் பாய, தரைப் பகுதி தலைதூக்க, அதில் உயிர் வர்க்கங்கள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக உருவாகி வாழத் தலைப்பட்டன' எனக் கூறுவதன் மூலம், உலகம் தோன்றி நிலைபெற்ற வரலாறு முறைப்பட இப்பாடலில் சொற்செட்டோடும் பொருட் செறிவோடும் விளக்கப்படுகிறது

பதினாறாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப் பட்ட அறிவியல் உண்மை, இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பே தமிழனால் கண்டறியப்பட்டுள்ளது என்பது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் அரிய அறிவியல் உண்மையாகும்

அவ்வாறே, இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்கள் என்று கூறப்படும் அடிப்படைத் தனிமங்களாலானது அதாவது, நிலம், வானம், காற்று, தீ, நீர் எனப்படும் ஐம்பூதங்களாலானது என்பது அறிவியல் உலகம் கண்டறிந்து கூறியுள்ள அடிப்படை அறிவியல் உண்மையாகும் இதை விஞ்ஞான பூர்வமாக உலகம் கண்டறிந்து அறுநூறு ஆண்டுகளே ஆகின்றது ஆனால், இதே அறிவியல் உண்மையை இரண்டா யிரம் ஆண்டுகட்கு முன்யே தமிழன் பாடல் வரிகளாகப் பதிவு செய்திருக்கின்றான் என்பதைச் சங்கப் பாடலொன்று,

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்

தீ முரணிய நீரும்
என்றாங்கு ஐம்பூதத்தியற்கை"

என்ற பாடல் வரிகள் தெளிவாக எடுத்துக் கூறி விளக்குகின்றன

இதில், இன்னொரு சிறப்பம்சமும் அடங்கி யுள்ளது ஐம்பூதங்களாகிய ஐம்பெரும் தனிமங்களால் (Elements) இந்நிலவுலகம் அமைந்துள்ளது என்ப தோடு, இத்தனிமங்கள் எதிலிருந்து எது உருவாயின என்பதற்கான படிநிலைகளையும் இப்பாடல் தெளிவாக்குகிறது

நிலமும், நிலத்திலிருந்து வானும், வானிலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும் உருவாயின என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது

இத்தகைய அறிவியல்நுட்பச் செய்திகளை தமிழன் பாடல் வரிகளாகப் பதிவு செய்த இதே காலகட்டத்தில் வேறு எந்த மொழி இலக்கியத்தி லாவது இத்தகைய அறிவியல்நுட்பச் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா? என கேள்வி எழுப்பினால் அதற்கு 'இல்லை' என்றே பதில் கூற வேண்டிய நிலையே எங்கும் உள்ளது

இவ்வாறு, அறிவியல்நுட்பச் செய்திகளை பன்னெடுங் காலத்துக்கு முன்பே பதிவு செய்திருப்பது தமிழின் தனித்துவத் தன்மையாகும்

### காலப்போக்குக்கும் தேவைக்குமேற்ப தமிழ் வளர்ச்சி

காலத்தின் போகககுக்கும தேவைககுமேற்ப ஒரு மொழி நெகிழ்நது கொடுத்து தன்னைத்

தகவமைத்துக் கொண்டு வளர வேண்டும் இது ஒரு சிறந்த மொழிக்குண்டான அடிப்படைப் பண்பாகும். அப்போதுதான் அம்மொழி என்றென்றைக்குமாக வாழவும் வளமாக வளரவும் முடியும் என்பது மொழியியலார் முடிபு

இத்தகு போக்கினைக் கைக்கொள்ளாத எந்த மொழியும் தேக்க நிலைக்கு ஆளாகி, காலப்போக்கில் இயங்கும் வல்லமையை இழந்தனவாக இறப்பைத் துணைக் கொண்டு, மொழி வரலாற்றில் மட்டும் இடம்பிடித்து வாழும் நிலையைப் பெறுகின்றன இவ்வுண்மைகளையே வழக்கிழந்துபோன லத்தீன் போன்ற புகழ்மிகு மொழிகள் உலகுக்கு இன்று உணர்த்திக் கொண்டிருக்கும் வரலாற்று உண்மைகள்

ஆனால், தமிழ் மொழி - இலக்கியத்தைப் பொறுத்தவரை காலப்போக்கையும் தேவையையும் கருத்திற்கொண்டு, மாற்ற திருத்தங்களை நெகிழ்வுத் திறனோடு ஏற்று, காலத்திற்கேற்ற மொழியாகத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளத் தவறியதே இல்லை "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில, கால வகையினானே" என்பதற்கொப்ப பழைய இலக்கிய வடிவங்களை விட்டுவிட்டுப் புதிய இலக்கிய வடிவங்களை ஏற்றும், தன்னைக் காலத்திற் கேற்ப தகவமைத்து வளமாக வளர்ந்து வந்ததை தமிழ் மொழி - இலக்கிய, இலக்கண வரலாறு இன்றும் பறைசாற்றிக் கொண்டுள்ளது

### அகம் - புறம், இகம் - பரம் ஆகியது

அவ்வகையில் அகம் - புறம் எனப் பிரித்து, சமுதாயத் தமிழாக மலர்ந்து மணம் வீசிக்

கொண்டிருந்த சங்க இலக்கியம், சமயங்களின் வருகையினால் ஏற்பட்ட வாழ்வியல் போக்குகளுக் கேற்ப இலக்கியம் மாற்ற திருத்தங்களை ஏற்று, தன்னை தக்கவாறு தகவமைத்துக் கொள்ளத் தவற வில்லை அதன் விளைவாக வைதீக சமய வருகை யினால் சைவ, வைணவ இலக்கிய வடிவமெடுத்தது; வைதீக சமயத்தைத் தொடர்ந்து தமிழகம் வந்த சமண (ஜெய்னம்) சமயத் தேவையை நிறைவும் செய்யும் பொருட்டு சமணப் படைப்புகளாக தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் உருவாகி நிலை பெற்றன அதைத் தொடர்ந்து தமிழகம் வந்த பௌத்த சமயப் படைப்புகளும் அதிக அளவில் உருவாகித் தமிழின் இலக்கிய வளத்தைப் பெருக்கத் தவற வில்லை வடநாட்டிலிருந்து மட்டுமல்ல வெளி நாடுகளிலிருந்து வந்த கிருத்துவ சமயச் சார்போடு கிருத்துவ இலக்கியங்களாகவும் இஸ்லாமியம் சார்ந்த இஸ்லாமிய இலக்கியங்களாகவும் பெருமளவில் உருவெடுக்கத் தவறவில்லை

### புதுமை இலக்கிய வடிவங்கள்

அதேபோன்று, ஆங்கிலேயர் ஆட்சியின் போது அவர்கள் மூலம் இங்கே அறிமுகப்படுத்தப் பட்ட நாவல் எனும் புதினப் படைப்புகள், சிறுகதை, திறனாய்வு, ஓரங்க நாடகம் முதலான பல்வேறு புதுமை இலக்கிய வடிவங்களாகத் தமிழில் உருவாகி நிலைபெறத் தவறவில்லை

இவ்வாறு சங்ககாலச் சமுதாயத் தமிழாக இருந்த தமிழ் வைதீக சமய, சமண, பௌத்த, கிருத்துவ, இஸ்லாமிய மற்றும் நவீன இலக்கியமாக உருவெடுத்து நிலைபெற்று வளங்கூட்டியது

போன்றே, இன்றைய இன்றியமையாத் தேவையான அறிவியல் சார் நூல்களாக - அறிவியல் இலக்கியப் படைப்புகளாக உருவெடுத்து நிலைபெற்று வருகிறது

## பழமைக்குப் பழமை - புதுமைக்குப் புதுமை

இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட வரலாற்றையுடைய ஒரு மொழி, இன்றும் வலுவோடும் வனப்போடும் பழமைக்குப் பழமை யாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்குகிற தென்றால் அதில் முதல்நிலை பெறும் மொழி தமிழாக, தமிழ் இலக்கியமாகத் தான் இருக்கமுடியும் என்பது மொழியியல் வரலாற்று அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும்

## 3. அனைவரும் ஏற்கும் பொதுமைப்பண்பு (COMMON CHARACTER)

சங்கத் தமிழ் இலக்கியங்களின் தனித் தன்மைகளில் ஒன்று, தனி மனித வாழ்வியல் பிரச்சினைகளைக் கூட, சமுதாயக் கண்ணோட்டத்தில் அலசி ஆராய்வதாகும் இதனால், இலக்கிய நிகழ்வு களின் சாயல் தத்தமது வாழ்வில் பிரதிபலிப்பதாகக் கருதும் ஒவ்வொரு தமிழனும் அவ்விலக்கியப் படைப்புத் தன்னைச் சார்ந்ததாகவே எண்ணி மகிழ்கிறான் இதனால் ஒரு குறிப்பிட்ட சாரார் அல்லது பகுதியினர் என்ற பேச்சுக்கே இடமில்லாமற் போகிறது அனைத்துத் தரப்பினரும் தங்களைச் சார்ந்த இலக்கியப் படைப்பாக அமைவதன் மூலம் 'அனைவரும் ஏற்கும் பொதுமைப் பண்பு'டைய படைப்புகளாக உலகு முன் காட்சியளிக்கின்றன

இதற்கு ஏற்றதொரு எடுத்துக்காட்டாக திருவள்ளுவர் படைத்தளித்த திருக்குறள் அறநூலைக் கூறலாம்

திருக்குறளுக்கு 'உலகப் பொதுமறை' என்ற மற்றொரு பெயரும் உண்டு நாடு, மொழி, இனம், சமயம் அனைத்தும் கடந்த நிலையில் மனித குல நலன்களை மட்டும் கருத்திற் கொண்டு படைக்கப் பட்ட நீதிககளஞ்சியம திருக்குறள் வள்ளுவரின் பொதுமைப் பண்பை போற்றமுனைந்த தமிழ்ப் புலவர் ஒருவர்

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறி பொருளிதுவென்ற"

குறள் எனப் போற்றியிருப்பது தமிழ்ப் படைப்பான வள்ளுவத்தின் பொதுமைப் பண்பைப் போற்றுவதாய் உள்ளது

தமிழில் உருவாக்கப்பட்ட முதல் காப்பியம் என்ற பெருமைக்குரியது 'சிலப்பதிகாரம்' ஐம்பெருங் காப்பியங்களுள் தலையாயதான சிலப்பதிகாரம் சேர, சோழ, பாண்டியர் ஆண்ட மூன்று நாடுகளையும் ஒன்றிணைத்த காப்பியமாகும் மூவேந்தர் நாடுகளின் ஆளுகைக்குட்பட்ட இம்மூன்று நாடுகளில் தமிழே வழங்கிய போதிலும் ஆட்சிகளால் பிரிக்கப்பட்டு வாழ்ந்த தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக உலகு பார்க்கும் வண்ணம் தமிழ் இனத்தின் பொதுமை உணர்வை, இன, சமய நல்லிணக்கத்தை ஊக்கும் வகையில் சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்த கண்ணகி, கோவலனோடு மதுரைக்குச் சென்று அங்கே கணவனை பலிகொடுத்து, சேரநாடு சென்று விண்ணுலகு சென்றதாகக கதையமைத்து

பிளவுபட்டுக் கிடந்த சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஒன்றிணைத்ததன் மூலம் தமிழ் இனத்தையே ஒன்றிணைத்து, பொதுமைப்பண்பை ஊக்குவிக்கும் வகையில் படைக்கப்பட்ட முதல் தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரமாகும்

## 4. நடுவுநிலைமை (NEUTRALITY)

சங்க இலக்கியப் படைப்புகள் சமயச் சார்பற்றவை களாகும் சங்க காலத்தில் வட நாட்டுச் சமயங்கள் தமிழ்நாட்டில் கால் பதிக்க முனைந்தன அதற்கு முந்தைய காலகட்டம் சமயத் தாக்கம் என்பது அறவே இல்லாத காலமாகும் அக்கால கட்டத்தில் வாழ்ந்த தமிழன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்த காலமாகும் அதன் பின்னர் இருந்த சங்ககால இலக்கியங்கள் பலவும் சமுதாய நோக்கில் எழுந்தவை யாகும் மனித குலத்தை நடுவு நிலைமையோடு அலசும் இலக்கியப் படைப்புகளாகும். எந்த ஒரு தனிப்பட்ட பிரிவையோ வகுப்பையோ அல்லது சமயச் சார்போடுக்கூடிய படைப்புகளாக உருவாக்கவில்லை இந்தச் சமுதாயப் பேருண்மையை கீழ்க்கண்ட சங்கப் பாடல் திட்பநுட்பமாக உணர்த்துகிறது

"யாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே"

என்பது சங்கப் பாடல் வரிகள்

களவுமுறையில் காதலித்து கற்பியல் முறையில் திருமணம் செய்துகொண்ட காதலன்-காதலியாகிய கணவனும் மனைவியும் திருமணத்திற்குப் பிறகு

தனிமையில் தங்கள் கடந்த கால காதல் வாழ்வை நினைவு கூர்ந்த நிலையில் ஒருவரைப் பார்த்து இன்னொருவர் வியப்புற்ற நிலையில்,

"உங்களைப் பெற்ற தாய் யார் என்று எனக்குத் தெரியாது, என்னைப் பெற்ற தாய் யார் என்று உஙகளுக்குத் தெரியாது; உங்கள் தந்தையும் என் தந்தையும் எந்த வகையில் உறவுடையோரோ? நமக்குத் தெரியாது வானிலிருந்து செம்மண் நிலத்தில் விழும் மழைநீர் செந்நிறத்தைப் பெறுவதுபோல், அன்புள்ள நம் நெஞ்சங்கள் ஒன்றோடொன்று கலந்து ஒன்றிவிட்டன" என வியந்து பேசுவது போல் அமைந்துள்ள இப்பாடல்மூலம் இருமனம் ஒத்து ஒரு மனமாகும் காதலர்களின் மனநிலையை மட்டும் இப்பாடல் சித்தரிக்கவில்லை சாதி, சமயம், இன, வகுப்புப் பிரிவு ஏதுமில்லாது, மனிதன் - தமிழன்-தமிழச்சி என்ற உறவுகளுக்கு மேல் மற்ற வேறுபாடு கற்பிக்கும் எந்த உறவுக்கும் இடமில்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூறத் தயங்கவில்லை இப்பாடலை இயற்றிய புலவன் கூட தன் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை அப்பெயர் மூலம் இப்புலவன் இன்ன குலம், இன்ன கோத்திரம் அல்லது பிரிவைச் சேர்ந்தவன் என யாரும் கருதி விடக்கூடாது என்பதற்காக இவர் பெயரை 'செம்புலப் பெயல்நீரார்' என்று அவர் சுட்டிய உவமையின் பெயராலேயே அவர் அழைக்கப்படுகிறார் இதிலிருந்து சங்க கால இலக்கியங்கள் எந்தவொரு செய்தியையும் நடுவு நிலைமையில் விவாதிப்பதையே தன் உயிர் மூச்சுக் கொள்கையாகக் கொண்டிருந்தன என்பது மிகத் தெளிவாகத் தெரியவருகிறது

எச்சார்புமின்றி உலகியலை நடுவுநிலைமையில் அலசி ஆராயும் போக்கே சங்க காலத்தில் அரசோச்சி வந்த உணர்வு என்பதை இன்றும் உணர்த்திக் கொண்டிருக்கும் சங்ககாலப் படைப்பு திருக்குறளாகும் அதனால்தான் அனைத்து வேறுபாட்டுணர்வுக்கு அப்பாற்பட்ட நிலையில் திருக்குறளை இன்றைக்கு 'உலகின் எழுத்தோவியம்' என்ற அளவில் அணுகுகின்றனர் ஆல்பர்ட் ஸ்வைட்சர், ஏரியல் போன்ற மேனாட்டறிஞர்கள் திருக்குறளை உலக மக்களின் ஒரே மறை நூல்' என்று கூறி வியக்கிறார்கள் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம், அனைத்து வேறுபாட்டுணர்வுகட்கும் அப்பாற்பட்ட நிலையில் மனிதகுலத்தை மட்டும் மனதிற் கொண்டு நடு நிலைமையில் நெறி வகுத்துச் சொல்வதுதான்

## 5. தாய்மைத் தன்மை (PARENTAL KINGSHIP)

ஒரு மொழி செம்மொழியாக இருக்க வேண்டுமென்றால் அது பல மொழிகளின் உருவாக்கத்துக்குத் தாயாக இருந்திருக்க வேண்டும்' என்பது மற்றொரு அடிப்படை அம்சமாகும்

வடபுலத்தின் மலைவாழ் மக்களால் பேசப்படும் பிராகுயி மொழி முதல் இந்தியாவின் தென்கோடி கேரளம் வரை சுமார் 42 மொழிகளுக்கு இன்றும் தாயாகத் திகழும் சிறப்புமிகு தகுதி தமிழுக்கு உண்டு என்பது கால்டுவெல் போன்ற மொழியியல் வல்லுநர்களின் ஆய்வு முடிவாகும்

## 'பேபல் டவர்' உணர்த்தும் உண்மை

உலக மொழிகள் அனைத்துக்கும் ஏதோ ஒரு மொழி முதன் மொழியாக இருந்து, அதனின்றும் கிளைத்துப் பரவிய மொழிகளாகப் பிறமொழிகள் இருக்க வேண்டும் என்ற பலமான அனுமானம மொழியியல் ஆய்வாளர்களிடம் காலங்காலமாக இருந்து வருகிறது இக்கருத்துக்கு எல்லா வகையிலும் ஆக்கம் தரும் வகையில் விவிலியத்தில் 'பேபல் டவர்' பற்றிய செய்தி அமைந்துள்ளது என்பது இங்குக் கவனித்தற்குரியதாகும் ஒரு மூல மொழியிலிருந்து பல மொழிகள் கிளைத்துப் படர்ந்தன என்பதை இந்நிகழ்வு உறுதிப்படுத்துகிறது

தொடக்கக காலத்தில் மக்கள் அனைவரும் ஒரே மொழி பேசி வந்தனர் அவர்கள் அனைவரும் ஒரே கூட்டமாக ஒருங்கிணைந்து ஒற்றுமையாக சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர்

இறைவனின் அற்புதப் படைப்புகளை கண்டு வியந்து நின்ற அம்மக்கள், அவ்விறைவனை நேரில் காணவிரும்பி, வானத்தை நோக்கி ஒரு மாபெரும் கோபுரத்தை எழுப்பலாயினர்

மக்கள் எல்லோரும் ஒரே மொழி பேசியதால் எல்லோரும் ஒத்த உணர்வும் சிந்தனையும் உடையவர்களாக மிகுந்த ஒற்றுமையுடன் உழைத்து கோபுரததை மிக உயரமாக விரைந்து எழுப்பினர் கோபுரமும் விண்ணை நோக்கி வேகமாக வளர்ந்து வந்தது இறைச் சவாலான இச்செயல் இறைவனுக்குச் சினமுண்டாக்கியது

எல்லோரும் ஒரே மொழி பேசுவதால்தானே அனைவரும் ஒன்றிணைந்து இறைவனுக்கே சவால்

விடும் வகையில் இவை அவனை நோக்கி கோபுரம் எழுப்ப முடிந்தது என்று கருதிய கடவுள், அவர்கள் அனைவரும் பேசி வந்த ஒரே மொழியை மறக்கவும் ஒவ்வொரு பகுதியினரும் வெவ்வேறு மொழியைப் பேவும் செய்தார் ஒத்த உணர்வோடு ஒன்றிணைந்து ஒரே மொழி பேசி ஒற்றுமையாகப் பேபல் கோபுரம் எழுப்பிக் கொண்டிருந்த மக்கள் திடீரென வெவ்வேறு புதிய மொழிகளைப் பேசலாயினர் ஒருவர் பேசியமொழி மற்றவர்க்குப் புரியவில்லை இதனால் குழப்பம் ஏற்பட்டது சண்டை, சச்சரவு எங்கும் தலை தூக்கியது அதுவரை ஒன்றுபட்டு ஒழுங்காக பேபல் கோபுரம் எழுப்பும் பணிக்குத் திடீரென குந்தகம் விளைந்தது ஒருவர் பேசிய மொழி மற்றவர்க்குப் புரியாததால் ஒருவருக்கொருவர் சச்சரவிட்டு சண்டையிட்டுக் கொண்டனர் இதனால், ஒற்றுமை குலைய ஒவ்வொரு மொழி பேசியவரும் தனித்தனியே பிரிந்து சென்று வாழமுற்பட்டனர் இவ்வாறு அவர்கள் பேசிய மொழிகளின் மொத்த எண்ணிக்கை எழுபத்திரண்டு எனக் கூறப்படுகிறது

இந்த மொழிகள் அனைத்துகசும் மூலமாக தம் மக்களால் முதலில் பேசப்பட்ட அந்த ஒரே மொழியின் சொற்களும் ஒலிகளும் ஏதோ ஒரு வகையில் இந்த எழுபத்திரண்டு மொழிகளிலும விரவியிருந்தன அந்த மூலமொழி குமரிக் கண்டத்தில் வாழ்ந்த ஆதி பிதா ஆதாம்வழி வந்த வம்சா வழியினராக இருக்கலாம் அவர்கள் பேசிய ஒரே மூல மொழி தமிழாக இருக்கலாம் அதனால் தான் ஆசிய, ஆஃப்ரிக்க மொழிகளில் தமிழ்ச் சொற்களும் ஒலிகளும் மிகுதியும் கலந்துள்ளன என மொழியியல் ஆய்வாளர்கள் அனுமானிக்கிறார்கள்

எப்படியோ, உலக மொழிகளில் மிகத் தொன்மை மொழியாகத் தமிழ் இருந்தது என்பது பண்டை இலக்கிய செய்திகளாலும் மொழியியல் ஆய்வாளர்களின் அனுமானங்களாலும் உறுதி செய்யப்பட்டு வருகிறது

கடற்பிளவால் சிதைந்த குமரிக்கண்டம்

குமரிக்கண்டம் கடற்பிளவால் (Rift) பல்வேறு பகுதிகளாக பிளவுபட்டு ஒதுங்கிச் சென்றபோது அந்தந்த நிலப்பகுதிகளில் வாழ நேர்ந்த மக்கள் அவ்வக் காலச் சூழலுக்கேற்ப தங்கள் மொழியில் ஒலியையும் ஒலி உணர்த்தும் பொருளையும் அமைத்துக்கொள்ள, அவரவர் போக்கிற்கேற்ப மொழியும் வளர்ந்து வளம் பெற்றது என்பது மொழி வரலாறு உணர்த்தும் உண்மையாகும்

மனித குலத்துககு ஆதிபிதா ஆதாம் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை உலக மொழிகளுக்கெல்லாம் ஆதித தாயாக, ஆதாம் பேசிய தமிழ் மொழி இருந்திருக்க வேண்டும் என்பதுமாகும்

ஹரப்பா, மொகஞ்சோதரோவில் தமிழ்

இந்தியாவைப பொறுத்தவரை ஆஃப்கானிஸ் தான் முதல் குமரி எல்லை வரையுள்ள மொழிகளில் அங்குமிங்குமாக தமிழ்செல்வாக்கு இருந்தே வருகிறது இன்னும் சொல்லபபோனால், ஹரப்பா - மொகஞ்சோதரோ பகுதிகளில் வழங்கிவந்த பண்டைய மொழி தமிழாகத்தான் இருக்க முடியும் என மொழியியல் ஆய்வாளர்களும, புதைபொருள் ஆய்வாளர்களும் கண்டறிந்து கூறியுள்ளனர்

அப்பகுதிகளில் கிடைத்த எழுத்து முத்திரைகளில் காணப்பட்ட ஒலிக்குறியீடுகளை அறிவியல் அடிப் படையில் முனைப்புடன் ஆய்ந்த ஃபின்னிஷ் ஆய்வாளர்கள் அவ்வொலிக் குறியீடுகள் அனைத்தும் தமிழைச் சார்ந்தே உள்ளன என்பதைக் கண்டறிந்து கூறி உறுதிப்படுத்தியுள்ளனர் இதை 'யுனெஸ்கோ கூரியர்' சர்வதேச மாத இதழ் 'மொகஞ்சோதரோ, ஹரப்பா' சிறப்பிதழ் மூலம் ஆதரப்பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது

சான்றாக, ஹரப்பா - மொகஞ்சோதரோ பகுதி மக்கள் உயர் சின்னமாக 'புலி' இலச்சினையைப் பயன்படுத்தி வந்ததாகத் தெரிகிறது புலிச் சின்னம் பிற்காலத்தில் சோழப் பேரரசர்களின் அரசுச் சின்னமாகக் கையாளப்பட்டு வந்தது வெளிநாடு களிலிருந்து சோழநாட்டுத் துறைமுகங்கள் வழியாக வந்து சேரும் பொருட்களின் பொதியின் மீது புலிச் சின்ன முத்திரையிட்டு அனுப்புவது வழக்கம் அவ்வாறே, சோழநாட்டுத் துறைமுகங்களிலிருந்து ஏதேனும் பொருள் கப்பல் வழி வெளிநாட்டுக்கு அனுப்பும் போதும் 'புலிச் சின்னம்' பொறித்தே அனுப்புவது வழக்கம் என்பதை 'புலி பொறித்துப் புறம் போக்கி' என்ற பட்டினப்பாலைப் பாடல் வரிகள் வாயிலாக அறிந்துணரமுடிகிறது

## ஆஃப்ரிக்க மொழிகளில் தமிழ்

இந்திய, ஆசிய மொழிகள் மட்டுமல்ல, ஆஃப்ரிக்க மொழிகள் பலவற்றிலும் தமிழ்ச்சாயல் நேரிடையாகவும் மறைமுகமாகவும் படிந்திருப்பதை அவ்வப்பகுதி மொழியியல் ஆய்வாளர்கள் கண்டறிந்து கூறியுள்ளனர் ஆசிய, ஆஃப்ரிக்க மொழிகளன்னியில்

ஐரோப்பிய மொழிகளில் தமிழ் வேர்ச் சொற்கள் பல இடம்பெற்றுள்ளதை மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், ஞானகிரி நாடார், சாத்தூர் சேகரன் போன்ற பலர் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளனர்

சில ஆண்டுகட்கு முன்பு, ஆஃப்ரிக்காவில் உள்ள செனகல் நாட்டுக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஃபெடரிக் செங்கார் என்பவர் - இவர் மாபெரும் புரட்சிக் கவிஞரும் மொழியியலாரும்கூட - இந்தியாவோடு செய்து கொண்ட ஒப்பந்த மொன்றில் கையெழுததிட புதுதில்லி வந்தார் வந்தவர், தமிழ் நாட்டிற்கும் வந்தார் ஆளுநர் மாளிகையில் தங்யிருந்த அவர் தமிழறிஞர்களைப் பார்த்து பேச விரும்புவதாக விருப்பம் தெரிவிக்கவே, சில தமிழறிஞர்கள் ஆளுநரால் அழைக்கப்பட்டனர் பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், வாகீச கலாநிதி கிவா ஜகந்நாதன் போன்றவர்களோடு 'யுனெஸ்கோ கூரியர்' சர்வதேச இதழின் ஆசிரியர் என்ற முறையில் நானும் அழைக்கப்பட்டிருந்தேன் அவர் எங்களைப் பார்த்தபோது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை தன் இனத்தோடும் தன் தாய்மொழியோடும் மிக நெருக்கமான தமிழ் மொழி, தமிழின மூதாதையரின் வழித்தோன்றல்களை நேரில் கண்டு அளவளாவவே தமிழ்நாடு வந்திருப்ப தாகக் கூறியபோது அவர் கண்கள் உணர்ச்சி மிகுதியால் பனித்துவிட்டதைப் பார்கக முடிந்தது தங்கள் செனகல் மொழிக்கும் தமிழுக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதை ஒரு மொழியியலாளர் என்ற முறையில் நன்கு அறிந்திருப்பதாகவும் கூறினார் செனகல் மொழி மட்டுமல்லாது மற்றைய ஆஃப்ரிக்க மொழிகளும்கூட தமிழ்மொழியோடு நெருக்கம் கொண்டிருப்பதை காணும்போது தமிழ் அல்லது

தமிழ் போன்ற ஒரு மூல மொழியிலிருந்து கிளைத்து வளர்ந்த தனி மொழியே செனகல் மொழி என்பதை நன்கு உணர்ந்திருப்பதாகவும் கூறி மகிழ்ந்தார் இதிலிருந்து தமிழ் மொழியின் தாய்மைத் தன்மையை மிக நன்றாக அறிந்து கொள்ளலாம்

செனகல் போன்ற ஆஃப்ரிக்க மொழிகளில் மட்டுமல்ல, ஜப்பானியம் போன்ற ஆசிய நாட்டு மொழிகளுக்கும் தமிழின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் இருந்து வருவதை மொழியியல் ஆய்வாளர்கள் தக்க ஆதாரத்துடன் மெய்ப்பித்து வருகிறார்கள்

## கிழக்காசிய நாடுகளில் தமிழ்த்தாக்கம்

மொழியியலில் மட்டுமல்லாது கலை, பண் பாட்டுப் போக்குகளிலும் பழக்க வழக்கங்களிலும் நடையுடை பாவனைகளிலும் கூட தமிழோடும் தமிழ் இனத்தோடும் ஜப்பானியருக்கு நெருங்கிய தொடர்பு இருப்பது பன்னாட்டு மாநாடுகளில் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டு வருவதைப் பரவலாகக் காண முடிகிறது

இதன் விளைவாகவே சென்னையில் 'ஆசிய வியல்' அமைப்பு பெருஞ்செலவில் அரசு உதவியோடு ஜப்பானியரால் உருவாக்கப்பட்டு திறம்பட இயங்கி வருகிறது இதற்குப் பெருமளவில் நிதியுதவியும் பிற உதவிகளும் வழங்கி வருபவர்கள் ஜப்பானியர் களாவர் தங்கள் இனமும் மொழியும் தமிழகத்தோடு எல்லா வகையிலும் தொடக்க முதலே இணைப்பும் பிணைப்பும் கொண்டிருப்பதாக அவர்கள் நம்புவதே இதற்கு அடிப்படைக் காரணமாகும் ஜப்பானிய

மொழிக்கும் தமிழ் மொழிக்குமுள்ள உறவுகளையும் ஜப்பானிய மொழியின் தோற்ற வளர்ச்சிக்கு தமிழ் வழங்கியுள்ள பங்களிப்புகளையும் பற்றிய ஆய்வுகள் சிறப்பாக நடந்துள்ளன இன்றும் முனைப்போடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

தமிழுக்கும் பிறமொழிகளுக்கும் உள்ள உறவை, குறிப்பாக தமிழுக்கும் இந்திய மொழிகளுக்கும் அதிலும் குறிப்பாக தமிழுக்கும் திராவிட மொழி களுக்குமுள்ள தொடர்பை மொழியியல் அடிப் படையில் நீண்ட காலம் ஆய்வு செய்த கால்டுவெல் பெருமகனார், தன் ஆய்வுகளை 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (Comparative study of Dravidian Languages) எனும் பெயரில் அரிய மொழியியல் ஆய்வு நூலொன்றை எழுதியுள்ளார் அதில் இந்திய மொழிகளில் குறிப்பாக கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளோடு தமிழுக்குள்ள உறவு களையும் இம்மூன்று மொழிகளுக்கும் தமிழ் எவ்வாறு தாயாக அமைந்துள்ளது என்பதையும் அசைக்க முடியாத ஆதாரங்களோடு நிறுவிக்காட்டி உள்ளார்

உலகின் புகழ் பெற்ற மொழியியல் ஆய்வாள ராகவும் அறிவியல் அடிப்படையிலான மொழியியல் துறையின் தந்தையாகவும் போற்றப்படும் டாக்டர் எமினோ அவர்கள் 'உலக மொழிகளிலே எல்லா மொழிகளுக்கும் தாயாக விளங்கும் பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய தனிப்பெரும் சிறப்பாகும்' எனக் கூறியிருப்பது தமிழின் தாய்மைத் (Parental Kingship) தன்மைக்குக் கிடைத்த மிகப்பெரும் சிறப்பாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை

## 6. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு

தான் எழுதப்பட்ட காலம் எதுவோ, அக்காலத்தின் போக்கை முழுமையாக உணர்த்தும் இலக்கியமே தலைசிறந்த இலக்கியமாகத் திறனாய் வாளர்களால் அங்கீகரிக்கப்படும் அவ்வாறே, தன் காலத்தைத் திறம்பட கதைக் கருவின் மூலமோ பாத்திரங்கள் வாயிலாகவோ முழுமையாகச் சித்தரிக்கும் ஆசிரியனே 'தலைசிறந்த எழுத்தாளர்' எனும் தகுதிப்பாட்டினைப் பெறவியலும்

வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து உருவாக்கப்படும் இலக்கியமே வாழக் கற்றுத் தரும் ஆசானாகவும் அமைய வேண்டும்

### காலக் கண்ணாடி

இந்தக் கருதுகோள்களின் அடிப்படையில் ஆராயும்போது சங்க இலக்கியம், சமுதாய வாழ்வின் திறந்த புத்தகம் என்றே கூறலாம் சங்கப் படைப்புகளில் கவைக்குதவாத கற்பனைகள் ஏதுமில்லாமலும் வாழ்க்கைப் போக்குகளை பகட்டில்லாமலும், உள்ளது உள்ளவாறே சித்தரிக்கும் காலக்கண்ணாடிகளாக விளங்குகின்றன எனலாம் சுருங்கச் சொன்னால் சங்கப் படைப்புகளில் வெளிப்படுத்தப்படும் அக, புற வாழ்வு நிகழ்வுகள் அனைத்துமே முழுக்க முழுக்க பட்டறிவின் வெளிப்பாடுகளாகவே விளங்குவதை அறிந்திடலாம் அவற்றில் ஒரு அம்பு ஏழு மரங்களை வெட்டி வீழ்த்தியது என்ற விந்தை நிகழ்வையோ 'உவகைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலுள் ஓடி ஒளிந்தான்' என்ற அதீதக் கற்பனைக் காட்சிகளையோ காணவே முடியாது. சங்க இலக்கியத்துள் சித்தரிக்கப்

படும் நிகழ்வுகள் அனைத்தும் பட்டறிவின் வெளிப் பாடுகளாகவே அமைந்திருப்பது அவற்றின் தனிச் சிறப்பாகும்

அது மட்டுமல்ல, சங்க இலக்கியங்கள் வாயிலாக அன்றைய சமுதாயநிலை எவ்வகைப் போக்குடையதாக அமைந்திருந்தது அன்றைய மக்கள் மனம் எத்தகையதாக இருந்தது, அன்றைய மக்களின் கலையுணர்வு எவ்வகையினவாக இருந்தன, மக்கள் அன்றாட வாழ்வில் அகத்திலும் புறத்திலும் பேணி நடந்த பண்பாட்டு உணர்வுகளும் செயல் பாடுகளும் எத்தகையதாயிருந்தன என்பதை 'உள்ளது உள்ளபடி' உணர்த்தும் படைப்புகளாகவே இருந்தன

இதனைச் சங்க இலக்கியப் பாடல்களில் மட்டு மல்லாது, சங்கத்தைத் தொடர்ந்து படைக்கப்பட்ட முதல் தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரத்தின் மூலமும் மிகத்தெளிவாக அறிந்துணர்ந்து மகிழலாம்

## இளங்கோ ஒன்றிணைத்த தமிழகம்

சேர, சோழ, பாண்டிய மன்னராட்சிக்கு உட்பட்டிருந்த அன்றையத் தமிழகம ஒரே மொழி பேசும் தமிழ் இனம் ஒரே இனமாக இருந்தும் மூன்று நாடுகளாகப் பிளவுபட்டு வாழ்வதை அன்றைய மக்கள் விரும்பவில்லை ஒரே மொழி, ஒரே இனம், ஒரே கலை, பண்பாடு என இருந்தும் மூவேந்தர்களின் போக்கால் மூன்று நாடுகளாகப் பிளவுண்டு, ஒருவரோடொருவர் பகைமை பாராட்டி வாழ வேண்டுமா என்ற நல்லுணர்வு மக்கள் மத்தியில் நிலவி வந்ததை ஒரு காப்பியத்தின்மூலம் வெளிப் படுத்த இளங்கோ விழைந்ததன் விளைவுதான் சோழ நாட்டில் பிறந்த கண்ணகி, பாண்டிய நாட்டில்

கணவனை பறிகொடுத்து, சேர நாடு சென்று விண்ணுலகு அடைந்தது மூவேந்தர் ஆண்ட மூன்று நாடுகளில் கதை நடந்ததாகக் கூறி மூன்று நாடுகளையும் அதில் வாழும் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே குரலில் பேச வைக்கிறார் இதன் மூலம் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் ஒட்டு மொத்தக் கலை, பண்பாட்டுச் செய்திகள் ஒருமுகப்படுத்தப் பட்டவைகளாக இளங்கோவால் சித்தரிக்கப்படு கின்றன இயல், இசை, நாடகக் காப்பியமாக அமைந்திருப்பதால் அன்றைய கலைகளின் பல்வேறு வகைகளையும் வடிவங்களையும் நம்மால் அறிந்து இன்புற முடிகிறது மக்களைப் பண்படுத்தி வந்த பண்பாட்டுக் கூறுகளையெல்லாம் திட்பநுட்பத் துடன் அறிந்தின்புற முடிகிறது அவற்றை எல்லாம் திறம்பட எடுத்தியம்பும் வண்ணம் பல்வேறு வகையான இலக்கிய உத்திகளைப் பாங்குறப் பயன்படுத்தி வெற்றியடைந்துள்ளார் இளங்கோ வடிகள்

### சமய நல்லிணக்கம்

தமிழகத்தில் வடபுல சமயங்கள் யாவும் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கால் பதித்து, தங்கள் பிரச்சாரங் களை வலுவோடு நடத்த முற்பட்ட காலமும் கூட சமுதாய நோக்கோடு அகம்-புறம் என வாழ்ந்த தமிழ் மக்களை இகம்-பரம் என வாழத் தூண்டிய காலகட்டமும் கூட இக்கால கட்டத்தில் அழுந்தக் காலூன்ற முயன்ற சமயங்கள் ஒருபுறம், சமயப் போக்குகளுக்கோ, சமயங்கள் உணர்த்த முற்பட்ட சமயப்பற்று, சமய வேற்றுமை உணர்வுகட்கு

அப்பாற்பட்ட மனநிலையோடு சமயப் பொறை யோடு நல்லிணக்க உணர்வு பொங்க வாழ்ந்த சான்றாண்மைகளையும் சிறப்புற விளக்கி, வேற்றுமை களுள் ஒற்றுமை கணடு வாழும் சமுதாய, சமய நல்லிணக்க உணர்வூட்டும் உன்னத வழிகாட்டி நூலாக சிலப்பதிகாரம் விளங்குவதைக் காண முடிகிறது இதற்கான சூழல்களை திறம்பட உருவாக்கிக் கதையை நகர்த்துவதன் மூலம் படிக்கும் வாசகனையும் தம் மன உணர்வையே பெறத் தூண்டி வழிகாட்டுகிறார் இளங்கோவடிகள் இதை முழுமையாகப் பிரதிபலிக்கும் காட்சியொன்றைப் பார்ப்போம்

பூம்புகாரிலிருந்து பிழைப்புத் தேடி மதுரை நோக்கிச் செல்லும் கோவலன்-கண்ணகி தம்பதியரோடு மதுரை நோக்கிச் செல்லும் சமண சமயத் துறவியரான கவுந்தியடிகளும் இணைந்து கொள்ள, மூவருமாக மதுரையம்பதி நோக்கிப் பயணிக்கின்றனர் வழியில் மாடலன் எனும் மறையவனைச் சந்திக்க நேர்கின்றது அவனிடம் மதுரைக்கு வழிகேட்க, வைதீக வைணவ சமயத்தைச் சார்ந்த அவ்வேதியன் தான் திருவரங்கத்தில் உள்ள அரங்கநாதரையும் திருப்பதியிலுள்ள திருமாலையும் வணங்கி இறை அருள்பெற மதுரையிலிருந்து செல்வதாகவும் கூறியதோடு, அப்பதிகளின் பெருமையையும் அப்பதிவாழ் தெய்வங்களின் சிறப்புகளையும் விலாவாரியாக விவரித்துக்கூறி பெரு மகிழ்வடைகிறான் அதே சமயம், மதுரை செல்லும் இம்மூவரும் அங்குள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய தீர்த்தங்களில் மூழ்கி எழுந்தால் முப்பிறவி

நிலை அறிந்துணர முடியும் எனக் கூறி, தன் வைணவ சமயத்தின் அருமைபெருமைகளையெல்லாம் அளந்து கட்டுகிறான் அவன் கூறிய அனைத்துச் செய்தி களையும் கோவலன்-கண்ணகியோடு பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த சமண சமயத் துறவியான கவுந்தியடிகள், தன் சமண சமயப் பெருமைகளை விரிவாக விளக்கிக் கூறி வைணவ மாடல மறையவ னோடு வாதிட்டிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்ய முனையாததோடு, அவன் இதயம் ஏற்குமாறு எளிமையாக,

> "வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓப்புநர்க்கு
> யாவதுமுண்டோ எய்தா அரும்பொருள்
> காமுறும் தெய்வம் கண்டடி பணிய நீபோ
> யாங்களும் நீள்நெறிப் படர்குதும்"

எனக் கூறுகிறார்

வாய்மை வழியில் நின்று ஒருவன் ஒழுகுவானே யாகில் அவன் வாழ்வில் பெறத்தக்க பேறுகள் அனைத்தையும் பெறமுடியும் எனும் பேருண்மையைப் புரிந்து கொண்டால் போதும் அவன் பெறத்தக்க பேறுகள் அனைத்தையும் பெற முடியும் நீங்கள் விரும்பும் தெய்வங்களை வணங்கி அவர்களின் பேரருளைப் பெற நீங்கள் தொடர்ந்து பயணியுங்கள் நாங்களும் நீண்ட பயணத்தைத் தொடர்ந்து மதுரை நோக்கிச் செல்கிறோம்" என்று கூறிப் பயணத்தைத் தொடர்கிறார்

இதன் மூலம் சமயப் பிரச்சாரம் நடைபெற்ற பாங்கையும் சமய வேற்றுமை பாராட்டாது சமய உணர்வுகட்கு அப்பால் சமய நல்லிணக்க

உணர்வோடு சமயவாதிகளே வாழ முனைந்தனர் எனக் கூறுவதன் மூலம், சாதாரண மக்கள் 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்', 'அப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் கண்டு பேணுவதாக, நல்லிணக்க உணர்வோடு வாழ வழிகாட்டும் வகையில் அன்றையக் காலச் சூழலை ஆடியிற் காணும் காட்சியாகக் கூறுவதைக் காண முடிகிறது

மேற்கண்ட காட்சி சாதாரண மக்கள் கைக் கொண்டிருந்த மனநிலையைக் காட்டுகிறது சமயச் சார்புடைய மன்னர் நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதையும் இளங்கோ தன் காப்பியத்தில் சுட்டிக்காட்டத் தவறவில்லை

### மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி

சைவ சமயத்தவனான மன்னன் சேரன் செங்குட்டுவன் சிவனை வணங்கி, வழிபாடு செய்தபின் சிவப்பிரசாதங்களாகிய திருநீற்றை நெற்றி நிறைய பூசியவனாக நகர்வலம் வருகிறான் அவன் பவனி வரும் வழியில் திருமால் பள்ளி கொண்டிருக்கும் பதமநாப சுவாமி கோவில் இருக்கிறது அங்கிருக்கும் வைணவ குருமார்கள் திருமாலின் பிரசாதமான துளசி மாலையை கோவிலின் சார்பில் பிரசாதமாக கொடுக்கின்றனர் தான் சிவபக்தனாக இருந்த போதிலும நெற்றியில் சிவ பிரசாதமான திருநீறு பூசியிருப்பதனால் வைணவக் குருமார் தந்த திருமால் பிரசாதமான துளசி மாலையை உவப்போடும் பக்தி சிரத்தையோடும் இரு கரங்களால் பெற்று மார்பில் அணிந்து மகிழ்ந்தான் என்பதை.

"ஆடகமாடத்து அரிதுயிலமர்ந்தோன்
சேடங்கொண்டு சிலர்நின்றேத்த
ஆங்கதுவாங்கி அணிமணிபுயத்துத் தாங்கினன்"

எனக் கூறுவதன் மூலம் அன்று வேற்றுச் சமய மன்னர்களும் பிற சமயங்களை மதித்தும் போற்றினர் சமய நல்லிணக்க உணர்வோடு 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என மக்களுக்குச் சமய நல்லிணக்க உணர்வுடன் வழிகாட்டும் வகையில் நடந்து கொண்டதை உள்ளது உள்ளவாரே கூறுகிறார்

இவ்வாறு மக்களிடம் பொதிந்து கிடந்த சமயப் பொறை, வேறுபாட்டுணர்வின்மை, மாற்றார் கருத்தை மதிக்கும் மனப்பான்மை போர் உயர் தகைமைகளைப் பட்டறிவோடு உணர்த்தும் பாங்கு தமிழ் இலக்கியங்கள், குறிப்பாகச் சங்க இலக்கியங் களில் காணும் தனித் தன்மைகளாகும்

## 7. பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை

ஒரு மொழி செம்மொழியாவதற்கான தகுதிப் பாடுகளில் ஏழாவதாகக் குறிப்பிடப்படும் அம்சம் 'பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை'யாகும்

சமுதாயக் கட்டமைப்பில் ஒரு மொழிபேசும் மக்கள் மற்ற மொழிபேசும் மக்களோடு கலந்து உறவாடுவது தவிர்க்கவியலா ஒன்றாகும் இதனால் மனித உறவு மட்டுமன்றி மொழி உறவுகளும் ஏற்படுவது இயற்கையே இந்த மொழி உறவு வெவ்வேறு மொழிபேசும் மக்களின் இணைப்பையும் பிணைப்பையும் பொறுத்து அமைவதாகும்

இவ்வாறு உருவாகும் மொழிக்கலப்பு சில சமயம் சில மொழிகளுக்கு ஆக்கமாகவும் மற்றும் சில

மொழிகளுக்குப் பாதகமாகவும் அமைய நேரிடும் ஏனெனில், சில மொழிகளில் சொற்பெருக்கம் குறைவாக இருக்கும் புது மொழிச் சொற்கள் அக் குறையை நிறைவு செய்யும் வகையில் வந்தமைவதால் அந்த மொழிக்கு அது பயனாயமைகிறது அதே சமயம் நன்கு வளர்ந்து சொற்பெருக்கத்தோடு வளமாக இயங்கி வரும் மொழியில் புதிய மொழிச் சொற்கள் வந்து கலக்கும்போது, அம்மொழியிலுள்ள பல பழைய, பொருள் பொதிந்த சொற்களின் பயன்பாடு குறைய அச்சொற்கள் இறப்பைத் துணைக் கொண்டு வழக்கிழந்து செத்து மறைகின்றன இதனால் இருக்கும் சொல் வளத்தை இழந்து நிற்க நேர்கிறது இவ்வாறு ஏற்படும் மொழிக் கலப்புகள் இயல்பாக ஏற்படுவதும் உண்டு சில சமயம் வேண்டுமென்றே திட்டமிட்டு சமயப் போர்வை, ஆட்சிப் போர்வை போன்றவைகளின் துணையோடு வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல் சொற்களைக் கலந்து கலப்பட மொழியாக்கி, தனித்தியங்க இயலாவண்ணம் ஆக்கப்படுவதும் உண்டு உலக மொழிகளின் வரலாற்றில் இத்தகைய நிகழ்வுகள் ஏராளம் உண்டு

அத்தகு நிலையிலும்கூட, பிற மொழிச் சொற்களின் ஒட்டும் உறவும் இல்லாது, தனக்கென்று உள்ள மூலச் சொற்களைக் கொண்டே தனித்துத் திறம்பட இயங்கவல்ல அம்சம் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளில் ஒன்றாகும் இவ்வகையில் வேறு எந்த மொழிச் சொல்லின் உதவி இம்மியும் தேவைப்படா நிலையில் எத்தகைய உணர்வையும் கருத்தையும் பிசிறில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்பதை டாக்டர் எமினோ,

கிரியர்ஸன், கால்டுவெல், பாவாணர் போன்ற மொழியியல் வல்லுநர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்

## மொழிக் கலப்பும் தமிழும்

உலகில் சில மொழிகள் பிறமொழிகளின் கலப்பின் காரணமாக வளமும் வலுவும் பெற்று புகழோடு இயங்கி வருகின்றன அதில் முதலாவதாக இடம்பெறத்தக்க மொழி ஆங்கிலமாகும் ஆங்கிலத்தில் கலக்காத பிறமொழிச் சொற்களே இல்லை எனலாம் வெங்காயத்தின் மேல்தோலை ஒன்றன்பின் ஒன்றாக நீக்கிக் கொண்டே போனால் இறுதியாக வெங்காயத்தில் ஒரு காம்புக்குச்சி மீந்துவது போல் ஆங்கிலத்திலுள்ள பிற மொழிச் சொற்களை யெல்லாம் நீக்கிக் கொண்டே சென்றால் இறுதியில் இங்கிலாந்தில், தொடக்க காலத்தில் வாழ்ந்த ஆதிவாசிகள் பேசிய பழைய பிரிட்டானிகா மொழியில் போய் முடியும்

இந்தியாவின் ஒரே செம்மொழி எனும் முத்திரை குத்தப்பட்டுள்ள சம்ஸ்கிருதம்கூட, பிராக்கிருதம், பாலி மொழிச் சொற்களோடு ஐந்தில் ஒரு பங்கு சிதைக்கப்பட்ட தமிழ்ச் சொற்களும் கலந்துள்ள மொழியேயாகும் என்பது கால்டுவெல், எமினோ போன்ற மொழியியலாளர் கருத்து 'சம்ஸ்கிருதம் ஏராளமான தமிழ்ச் சொற்களைக் கடன்வாங்கித் தன் சொல்வளத்தைப் பெருக்கிக் கொண்டுள்ளது' என சம்ஸ்கிருதம் மற்றும் தமிழ் அறிஞரும் ஆய்வாளருமான தாமஸ் பரோ என்பார் கூறியுள்ளார். சம்ஸ்கிருத மொழியின் உறுதுணையால் உருவானவைகளே வட இந்திய மொழிகள் அனைத்தும் சம்ஸ்கிருதச் சொற்களை இம்மொழி

களிலிருந்து நீக்கினால் அவற்றால் தனித்தியங்க இயலாது அவ்வாறே பழைய தமிழும் சம்ஸ்கிருதமும் இணைய உருவானவைகளே தென்னக மொழிகளான கன்னட, தெலுங்கு, மலையாள மொழிகள் இவற்றிலிருந்து தமிழ்ச் சொற்களையோ அன்றி சம்ஸ்கிருதச் சொற்களையோ நீக்கினால் அவற்றால் அறவே இயங்க முடியாது

ஆனால், தமிழைப் பொறுத்தவரை சமயம், ஆட்சி போன்ற பல்வேறு காரணங்களால் எத்தனையோ மொழிச் சொற்கள் வலியக் கொண்டு வந்து தமிழில் கலக்கச் செய்தபோதிலும் அவை, தண்ணீரில் எண்ணெய் கலந்தாற்போல் ஒட்டியும் ஒட்டாமலும் பட்டும்படாமலும் இருந்து வருகின்றன வலியப் புகுத்த முனைந்த முயற்சி எதுவும் வெற்றி பெறாநிலையில் இன்றும் தமிழ் தனித்து இயங்க வல்ல தனித்தன்மைமிக்க மொழியாக இருந்து வருவதுதான் உலக மொழியியலாளர்களின் நெற்றிகளை வெகுவாகச் சுழிக்க வைத்துள்ள நிகழ்வாகும் தமிழில் முதலில் கலந்த பிறமொழிச் சொற்கள் பிராகிருத, பாலி மொழிச் சொற்களாகும் காரணம் இவற்றின் ஒலிப்பு முறை தமிழ் ஒலிப்பு முறையோடு ஓரளவு இணைவாக அமைந்திருப்பதுதான் அதே சமயம் சம்ஸ்கிருதச் சொல் ஒலிப்பு முறை தமிழ் ஒலிப்பு முறைககுச் சற்று மாறுபட்டிருந்ததால் தமிழ்ப் புலவர்கள் இச்சொற்களை எளிதாக எடுத்துப் பயன்படுத்த விழையவில்லை அப்படியே தவிர்க்கவியலா நிலையில் சம்ஸ்கிருதம் போன்ற பிற மொழிப் பெயர்ச் சொற்கள், இடப் பெயர் போன்றவற்றைக் குறிப்பிட நேரும்போதுகூட, தமிழ் மொழியின் தனித்துவமான ஒலிப்புத் தன்மை கெடா

வண்ணம் எப்படி தமிழைக் கையாளுவது என்பதைப் பற்றி,

"வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என ஒலிப்பிலக்கணம் வகுத்தளித்துள்ளது, உலகின் முழுமையான முதல் மொழி இலக்கண நூலான தொல்காப்பியம்

எனினும், பிறமொழிச் சொற்களின் துணையின்றி தமிழால் தனித்து இயங்க இயலும் என்பது மொழியறிஞர்களால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது

## தமிழின் தனித்தன்மை

இவ்வாறு, பிறமொழிச் சொற்களின் துணை அறவே இல்லாது தமிழால் தனித்தியங்க இயல்வதற்கு அடித்தளக் காரணம், தமிழில் இடம் பெற்றுள்ள சொற்பெருக்கமேயாகும் வேறு எந்த மொழியிலும் காணமுடியாத அளவுக்கு வேர்ச் சொற் களஞ்சியமாக தமிழ் அமைந்திருக்கிறது என்பதுதான் மொழியியலாளர்களின் ஒருமித்த கருத்து. இச் சிறப்பம்சத்தைக் கடந்த அரை நூற்றாண்டாக கலைச் சொல்லாக்க முயற்சியாளன் என்ற முறையில் பட்டறிவுகளினடிப்படையில் நான் நன்குணர்ந்து வருகிறேன்

இது அறிவியல் ஊழி வாழ்வின் அனைத்தும் படித்தரங்களிலும் அறிவியலின் தாக்கம் நீக்கமற நிறைந்துள்ளதால் அறிவியல், தொழில்நுட்பத் தொடர்புடைய செய்திகளைத் தமிழில் கூற வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இதற்காக ஏராளமான

அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவக் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கித் தீர வேண்டிய கட்டாய நிலை இஃது தமிழில் இயலுமா? என்பது விடைகாண வேண்டிய வினாவாகும்

## இதே சூழலில் மற்ற மொழிகளின் நிலை என்ன?

இன்று எல்லா மொழிகளுக்கும் கலைச் சொல்லாக்கம் காண வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஆங்கிலத்தில் ஒரு கலைச் சொல்லை உருவாக்க வேண்டுமென்றால் அதற்கான வேர்ச் சொல்லை கிரேக்க மொழியில் இருந்தோ, லத்தீனிலிருந்தோ அல்லது ஹீப்ரு மொழியிலிருந்தோதான் தேடிப் பெறவேண்டும் அதே போன்று ஹிந்தி முதலான ஏதேனுமொரு வட இந்திய மொழிகளில் ஒரு புதிய கலைச் சொல்லை உருவாக்க வேண்டுமெனில் அதற்கான வேர்ச் சொல்லை சம்ஸ்கிருதத்திலிருந்தோ அல்லது பிராகிருதம் மற்றும் பாலி போன்ற பழம்பெருமொழிகளிலிருந்தோதான் தேடிப் பெற வேண்டும் தென்னக மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் ஒரு புதிய கலைச் சொல்லை உருவாக்க வேண்டுமெனில் அதற்கான வேர்ச்சொல்லை சம்ஸ்கிருதத்திலோ அல்லது பழந் தமிழிலோ இருக்கிறதா எனத் தேடிப்பெற வேண்டும் ஆனால், அதே சமயத்தில் தமிழில் ஒரு புதிய கலைச் சொல்லை உருவாக்க வேண்டுமெனில், அதற்கான வேர்ச்சொல்லை தமிழிலிருந்து மட்டுமே தேடிப் பெறவியலும் வேறு எந்த மொழி வேர்ச்சொல்லும் தமிழ்க் கலைச் சொல்லாக்கத்திற்கு அறவே பயன் படாது என்பது மொழியியலார் கருத்தாகும்

அது சரி, நாளும் விரைந்து வளர்ந்து வரும் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும்

வகையில் தமிழில் பெரும் எண்ணிக்கையில் கலைச் சொற்களை உருவாக்க இயலுமா எனப் பலரும் எண்ணுகின்றனர் இதற்கு மொழியியல் துறையின் தந்தையாகப் போற்றப்படும் டாக்டர் எமினோ அவர்கள், 'உலகத்து மொழிகளிலேயே மிக அதிகமான வேர்ச் சொற்களையுடைய மொழியாகத் தமிழ் திகழ்கிறது" எனக் கூறியுள்ளதே தக்க பதிலாகும்

இவ்வாறு, தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி யாய் அமைந்துள்ளது என்பதற்குரிய அம்சங்களில் ஒன்றான 'கவிதை மொழித் தாக்கமிலாத் தனித் தன்மை யுடைய மொழியாகத் தமிழ் அமைந்துள்ளது என்பதற்கு இத்தனிச் சிறப்பே தக்க எடுத்துக் காட்டாகும்

## 8. இலக்கிய வளம் (LITERARY PROWES)

உலகத்து மொழிகளில் எந்த மொழியில் மிக அதிகமான இலக்கியப் படைப்புகள் உருவாக்கப் பட்டு உள்ளதோ, அந்த மொழி 'செம்மொழி'யாகக் கருதப்படுவதற்கு, அதுவொரு அடிப்படைத் தகுதியாகக் கருதப்படும் இந்த அளவுகோலின் அடிப்படையில் பார்க்கும்போது, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உலக மொழிகளில் எதுவெல்லாம் அதிக அளவில் இலக்கிய வளமிகு படைப்புகளைப் பெற்றுள்ளதென்பதைக் கணக்கிட்டறியலாம் இதற்கு லத்தீன், கிரீக், ஹீப்ரு போன்ற மொழிகள் உச்சச் செழிப்போடு இருந்த காலக்கட்டத்தையே கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் அந்தக் கால கட்டம் தமிழைப் பொருத்தவரை சங்க காலமாகவும் சமஸ்கிருதத்தைப் பொருத்தவரை வேதகாலமாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்

சங்க கால இலக்கியப் படைப்புகளின் செழுமையை மிகச்சிறப்பாகப் பிறமொழி இலக்கியங்க ளோடு ஒப்பீட்டடிப்படையில் ஆய்ந்தவர்கள் செக் நாட்டு மொழியியல் அறிஞரும் ஆழ்ந்த தமிழ்ப் புலமையாளருமான கமில் சுவலபில் என்பவராவார் இவர் சங்க இலக்கியங்களை சிறப்பாக ஆய்ந்து, அவை 26,350 வரிகளில் அமைந்திருப்பதாகக் கணக்கிட் டுள்ளார் இதே காலககட்டத்தில் லத்தீன், ஹீபரு, கிரேக்க மொழிகளிலோ அல்லது சீன, சம்ஸ்கிருத மொழிகளிலோ இந்த அளவு எணணிகசையில் இலக்கியப் படைப்புகள் இயற்றப்படவில்லை என்பது அவர்தம் ஆய்வு முடிவாகும்

எண்ணிக்கையில் மட்டுமல்ல, இலக்கியத் தரத்திலும் மிக உயர்ந்த நிலையை சங்க இலக்கியங்கள் பெறுவதாகக் கூறுகிறார் அதோடு, ஒட்டு மொத்த மனிதகுல மேன்மையை மையமாகக் கொண்டு எழுந்த இலக்கியப் படைப்புகள் அவை என்பது அவர் கருத்து அக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் பலவும் அரச குலச் சார் புடைய மேன்மக்களைப் பற்றிப் பேசும்போது, சங்க இலக்கியங்கள் சாதாரண குடிமக்களின் சமுதாய வாழ்க்கை பற்றி அலசி ஆராயும் வகைகளில் இலக்கியப் படைப்புகள் உருவான விந்தையைப் போற்றி மகிழ்கிறார் இன்னும் சொல்லப் போனால் சாதாரண குடிமகன், குடிமகளான கோவலன்-கண்ணகி வாழ்வைச் சித்தரிக்கும் உலகின் முதல் குடிமக்கள் காப்பியமாக சிலப்பதிகாரம் அமைந்த அதேசமயம், அதே குடும்பத் தொடர்புடைய இலக்கியப் படைப்பாக, மாதவியின் மகள் மணிமேகலையைக் காப்பியத் தலைவியாகக்

கொண்டு உருவாகி நிலை பெற்ற மணிமேகலைக் காப்பியத்தின் தனித்தன்மை, தனித்துவமிக்கதாகும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரே குடும்பத் தொடர்புடைய இரட்டைக் காப்பியங்கள் உலக மொழிகளிலேயே தமிழில் மட்டுமே உருவாக்கப் பட்டுள்ளன என்பது உலக இலக்கியப் படைப்புலக வரலாற்றில் காணும் சிறப்புமிகு செய்தியாகும்

### 9. உயர்சிந்தனை (NOBLE IDEAS AND IDEALS)

ஒரு மொழி 'செம்மொழி' எனும் தகுதிப் பாட்டினைப் பெறவேண்டுமெனில் அவை பெற்றிருக்க வேண்டிய சிறப்பம்சங்களில் ஒன்று 'உயர் சிந்தனை' வளத்தையுடைய மொழியாக அமைந்திருத்தல் அவசியமாகும் அவ்வுயர் சிந்தனை தனி மனிதனை மட்டுமல்லாது ஒட்டுமொத்த மனித சமுதாயத்தையே வழிநடத்துவதாக இருத்தல் வேண்டும் இக்கோட் பாட்டின் அடிப்படையில் தமிழர் சிந்தனைகளை ஆயும்போது, அதில் இடம்பெற்றுள்ள உயர் சிந்தனைகள், கருத்துணர்வுகள் கடந்த கால மக்களின் நல்வாழ்வுக்கு மட்டுமல்ல, நிகழ்கால மக்களுக்கும் - ஏன் - எதிர்கால மக்களுக்கும் என்றென்றுமாகப் பின்பற்றியொழுகி, வாழ்வில் வழி காட்டும் ஒளி விளக்குகளாக அவ்வுயர்சிந்தனைகள் அமைந்துள்ளன அவற்றுள் முடிமணியாய்த் திகழ்வன 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கோட்பாடும், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற வாழ்வியல் நெறியுமாகும்

உயர்சிந்தனையின் முத்தாய்ப்பான இவ்விரு வாழ்வியல் கோட்பாடுகள் சங்ககாலத் தமிழனின் உயிர் மூச்சுக் கொள்கைகளாகும் மனித குலத்தைச் சார்ந்த அத்தனைபேரும் ஆதிப்பிதா ஆதம் வழி வந்த

சகோதரர்கள் என்ற உணர்வு அவர்களிடம் உயர் நோக்கத்துடன் இருந்து வந்தது இதனால், உலகிலுள்ள அனைத்து மக்களையும் தம் உறவினர் களாகப் பார்க்கும் உயர்சிந்தனை பெற்றிருந்தார்கள் உலகெங்கும் வாழும் அத்தனை மக்களையும் தன் உறவினர்களாகப் பாவித்து மகிழ்ந்த தமிழன் அவர்கள் வாழும் ஊர்களையெல்லாம் தன் ஊர் களாகவே பாவிக்கும் விரிமனம் கொண்ட உயர் சிந்தனையாளர்களாக வாழ்ந்தனர் என்பதையே இம்முழக்கம் வெளிப்படுத்துகிறது

அதுமட்டுமல்ல, வேறுபாட்டு உணர்வே இன்னதென்று அறியா நிலையில் உலக மக்கள் அனைவரையும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாகவும் அவர்கள் அனைவருக்கும் ஒரே கடவுள் மட்டுமே இருப்பதாகவும் கருதி 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என முழங்கினான்; நம்மையும் என்றென்று மாக முழங்கி மகிழ இலக்கியத்திலும் அழுத்தமாக அவ்வுணர்வை - உயர்சிந்தனையைப் பதிவு செய்து பெருஞ்சொத்தாக நமககு விட்டுச்சென்றுள்ளனர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்புள்ள எந்த நாட்டிலாவது, எந்த மொழியிலாவது, எந்த இலககியததிலாவது இத்தகைய உயர்சிந்தனைகள் பதிவாகி உள்ளனவா என்பது விடைகாணவியலா வினாவாகவே உள்ளது

உலகில் செம்மொழிகள் எனப் போற்றப்படும் சம்ஸ்கிருதம் உட்பட வேறு எந்த மொழி இலக்கியத்திலாவது இந்த அளவுக்கு உயர்சிந்தனை வெளிப்பாடு வெளிப்படையாகக் கூறப்பட்டதாகத் தெரியவில்லை உயர்ந்த குடி, தாழ்ந்த குடி என்ற பேதங்களே, ஏழை-பணக்காரன் என்ற பொருளாதார

ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணமாகி, மக்களைப் பல பிரிவினராகப் பகுத்துப் பார்க்கும் மனப்போக்கே உலகெங்கும் நிலவிவந்தது சம்ஸ்கிருதப் படைப்புகள் சாதீயத்தை வற்புறுத்தும் வர்ணாஸ்ரம அடிப்படை கொண்டது என்பது வெள்ளிடைமலை ஆனால், தமிழில் உருவான படைப்புகள் மட்டுமே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உலகையே தன் ஊராகவும் உலக மக்கள் அனைவரையும் தன் உறவினர்களாகவும் கருதிப்போற்றும் உன்னத மனப்போக்கும் உயர் சிந்தனையும் இருந்துள்ளதை கண்டுணர முடிகிறது

பொருளியல் அடிப்படையிலான வேறு பாடுகளைவிட மத அடிப்படையிலான வேறு பாடுகளே அதிகம் மனித குலத்தை அன்றும் இன்றும் பாதிக்கிறது உலகிலுள்ள அனைத்து மக்களையும் ஒரே குலமாகக் காணும் தமிழ் உள்ளம் அனைத்துக் கடவுள்களையும் ஒரே இறைவனாகப் போற்றுவதன் மூலம் சமய மாசசரியங்களையெல்லாம் மாய்த்து, மனித இறையுணர்வுகளை ஒருமுகப்படுத்தி, ஒரே நேர்கோட்டில் செயல்பட வழிகாட்டும் ஒப்புயர்வற்ற உயர்சிந்தனையாயமைந்துள்ளது

இவ்விரு உயர்சிந்தனைகட்கும் என்றென்றுமான ஊற்றுக் கண்ணாக திருவள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் அமைந்துள்ளது உலகத்தின் ஒப்புயர்வற்ற நீதி நூலான இது, தமிழில், தமிழ்நாட்டில் எழுதப் பட்டிருப்பினும் இநநூலுள் எந்த இடத்திலும் தமிழ், தமிழ்நாடு, தமிழன் எனும் சொற்கள் அறவே இடம்பெறாதது அதன் உலகியல் நோக்கின் உச்சவுணர்வாகும்

## 10. கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு - பங்களிப்பு

தமிழ் 'செம்மொழி' என்பதற்கான தகுதிப் பாடுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று 'கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு - பங்களிப்பு' என்பதாகும் இதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகள் தமிழ் இலக்கியங்களில் உண்டென்றாலும் ஒன்றை மட்டும் இங்குச் சுட்டிக்காட்டலாம் எனக் கருதுகிறேன்

உலகப் பெருமொழிகளில் எத்தனையோ இலக்கியஙகள் உள்ளன அவை புதினம், சிறுகதை, நாடகம், திறனாய்வு எனப் பல்வேறு வகையினவாகவும் உள்ளன தமிழிலும் அவ்வாறே பலவகை இலக்கிய வடிவங்கள் உள்ளன

ஆனால், மொழிகளில் பலவகைகள் இருப்பதாகத் தெரியவில்லை அதிகமாகப் போனால் ஒவ்வொரு மொழியையும் எழுத்து வழக்குமொழி, பேச்சு வழக்குமொழி என இருவகையினவாகப் பிரிப்பர் இஃது எல்லாமொழிகளுககும் உண்டான அடிப்படைப் பொதுத் தன்மையாகும்

ஆனால், உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லாத ஒரு தனித்தன்மை தமிழுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்றதாக உள்ளது அதுதான் 'முத்தமிழ்' என்ற தனிப்பெரும் சிறப்பு

உலகிலுள்ள மொழிகள் அனைத்தையும் ஒரு மொழி என்ற அளவில் மட்டுமே அணுகுகின்றனர், ஆய்கின்றனர் ஒரு மொழியின் இலக்கிய வடிவங்களைப் பல்வேறு வகையினவாகக் காண்பது உலகியல் நடைமுறை ஆனால் தமிழ் மொழியை மட்டும் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என

மூவகையாகக் காணும் போக்கு, தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய தனித்தன்மையாகும்

சாதாரணமாக, தமிழ்மொழியில் பேசும்போது வல்லின, மெல்லின, இடையினச் சொற்களைக் கலந்து, உணர்வோட்டமாகப் பேசும்போது, இம் மூவின சொல்லோசை கலந்து வரும் பேச்சில் ஒரு இசைத் தன்மை இயல்பாக மேலோங்கி நிற்கும் கேட்பவர்களை இசைபோல் ஈர்க்கும் தன்மை தமிழ்ப் பேச்சுக்கு உண்டு என்பதை நாமெல்லாம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறோம் அதே போன்று, தமிழில் பேசும்போது சொல்ல வந்த கருத்தையும் உணர்வை யும் முழுமையாக வெளிப்படுத்த விழைகிறோம் அப்போது, பேச்சொலிக்கேற்ப கை, கால்களை அசைத்து, முகபாவங்களோடு சொல்ல விழையும் கருத்துக்கும் உணர்வுக்குமேற்ப, மெய்ப்பாடு தோன்ற வெளிப்படுத்துகிறோம் இவ்வாறு நாடகத்தில் நடிப்பது போன்ற நிலையில் இருந்து கொண்டு பேசுகிறோம் இதனாலேயே தமிழ் நாடகப் போங்குடையதாகக் கருதப்படுகிறது அதனாலேயே தமிழ், நாடகத் தமிழாகவும் போற்றப்படுகிறது

இவைகளையன்னியில் தமிழ் இயற்றமிழ் வகையாகவும் கணிக்கப்படுகிறது இயற்றப்படும் இலக்கியங்கள் அனைத்துமே இயற்றமிழாக அழைக்கப் படினும், இசைத்தமிழ் சார்ந்த படைப்புகள் இசைத் தமிழ் சார்ந்த வகையினவாகவும் நாடகத்துறை சார்ந்த படைப்புகள் நாடகத்தமிழ் சார்ந்த வகையினவாகவும் கருதப்படுகின்றன இப்படி முத்துறைகளும் ஒரே இலக்கியப்படைப்பில் இணைந்த நிலையில் உருவாக்கப்பட்ட காப்பியமே தமிழில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சிலப்பதிகாரம் இதனைச்

சிலப்பதிகாரப் பாயிரத்திலேயே ஆசிரியர் இளங்கோவடிகள்,

> "இயலிசை நாடகப் பொருட்டொடர்
> நிலைச் செய்யுள்"

எனக் கூறியிருப்பதிலிருந்தே மூன்று தமிழும் ஒன்றிணைந்த நிலையில் உருவாக்கப்பட்ட முழுமுதற் காப்பியம் சிலப்பதிகாரம் எனவே அது 'முத்தமிழ்க் காப்பியம்' எனச் சிறப்பித்து அழைககப்படுகிறது

எனவே தமிழ் 'செம்மொழி'த் தகுதிக்குரிய 'கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு - பங்களிப்பாலும் முதன்மை நிலை பெறுவதால் தமிழ் செம்மொழியாவதில் தகுதிப்பாட்டுத் தடைகள் ஏதும் இல்லை என்பது அக, புறச் சான்றுகளால் தெள்ளத் தெளிவாகிறது

## 11. மொழிக்கோட்பாடுகள் (LINGUISTIC PRINCIPLES)

செம்மொழிக்குரிய மிக முக்கியத் தகுதிப் பாடுகளில் ஒன்றாக அமைந்திருப்பது மொழிக் கோட்பாடுகள் பற்றிய இலக்கண வரம்புகளோடு கூடிய கொள்கை வரையறைகளாகும்

சாதாரணமாக 'மொழிநூல்' (Philology) அடிப்படையில் மொழியியல் கோட்பாடுகளை வகுக்கும் முறையே பல்வேறு மொழியியல் அறிஞர் களுக்கிடையே இருந்துவந்தது இதற்கான விதி முறைகள் உலக மொழிகளில் அவ்வம் மொழிக்கென அவரவர் அளவில் வகுத்துச் செயல்படுத்தி வந்த மொழிக் கோட்பாடுகளாகும் இந்த அளவுகோலைக் கொண்டே பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை

மொழி ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்தன திராவிட ஒப்பிலக்கண ஆய்வுநூல் எழுதிய கால்டுவெல் போன்றவர்கள் இந்த அடிப்படையில் மொழியாய்வு செய்தவர்களே யாவர்.

ஆனால், இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் வீச்சுக்கேற்ப அதன் அடிப்படையில் மொழியியல் கொள்கை கோட்பாடுகளை வகுக்கும் மனப்போக்கு மொழி ஆய்வாளர்களிடையே ஏற்பட்டது அதற்கிணங்க மொழி நூலில் வேண்டிய மாற்ற திருத்தங்களை ஏற்படுத்தி, நீக்குவன நீக்கி, ஏற்பன ஏற்று புதிய மொழியியல் கோட்பாடுகள் இன்று உருவாக்கப்பட்டுள்ளன இதை இன்றைக்கு 'மொழியியல்' (Linguistics) என அழைக்கின்றனர் இதன் அடிப்படையிலேயே மொழியியல் வல்லுநராகவும் 'மொழியியல் தந்தை' எனப் போற்றப்படும் டாக்டர் எமினோ அவர்கள் தொல்காப்பிய இலக்கண நூலை ஆய்வு செய்து வியந்துபோனார் காரணம், இன்று மொழியியல் கோட்பாடுகளாக வகுக்கப்பட்டுள்ள பல கோட்பாட்டுக் கொள்கைகளுக்கு விளக்கமாக தொல்காப்பியம் அமைந்திருப்பதுதான்

அதிலும் குறிப்பாக, 'தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் சொல் பிறப்பியலில் எழுத்துக்கள் எப்படி பிறக்கின்றன எழுத்துக்களின் உச்சரிப்பு ஒலிகள் துல்லியமாகவும் பொருளுள்ளதாகவும் அமைய அவ்வெழுத்தை எவ்வகையில் உச்சரிக்க வேண்டுமெனத் தொல்காப்பியர் வகுத்துக் கூறியுள்ள வழிமுறைகள் முழுக்கமுழுக்க அறிவியல்பூர்வமாக அமைந்துள்ளது' என போற்றிப் பாராட்டி மகிழ்கிறார் டாக்டர் எமினோ அவர்கள் இந்த வகையிலும் சிறந்த மொழிக் கோட்பாடுகளை வகுத்து மொழித்திறம் பேணிவரும் மொழி தமிழ் என்பது நிலை பெறுகிறது

இதுவும் தமிழ் 'செம்மொழி' என்பதற்கு எல்லா வகையிலும் அசைக்க முடியாத ஆதாரமாக அமைந்துள்ளதெனலாம்

## சம்ஸ்கிருதம் செம்மொழியானது எப்படி?

செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள் பதினொன்றும் தமிழுக்கு முழுமையாகப் பொருந்தி வருகின்றன அதே சமயத்தில் 'செம்மொழி'யாக அறிவிக்கப் பட்டுள்ள சம்ஸ்கிருத மொழிக்கு இத்தகுதிப் பாடுகளில் ஏழு மட்டுமே பொருந்துவன என்பது மொழியியல் ஆய்வாளர்களின் கருத்தாகும் அவ்வா றெனில், சம்ஸ்கிருதம் எப்படி செம்மொழித் தகுதிப் பாட்டைப் பெற முடிந்தது எனப் பலரும் வினாத் தொடுக்கவே செய்கின்றனர் இதற்கான காரணத்தை தெளிவாக அறிய வேண்டுமெனில் நம் பார்வையைச் சற்றுப் பின்னோக்கிச் செலுத்த வேண்டும்

வணிகத்திற்காக இங்குவந்து காலூன்றத் தொடங்கிய ஆங்கிலேயர், நாளடைவில் ஆட்சிக் கட்டில் ஏறி அரசோச்சுபவர்களாக மாறினர் தாங்கள் ஆட்சி செய்யமுனைந்த கிழக்கத்தியப் பகுதி களின் மொழி, கலை, பண்பாடு போன்றவற்றைக் கவனிப்பதற்காக 'ஏசியாட்டிக் சொசைட்டி' (Asiatic Society) என்ற அமைப்பு அன்றைய ஆட்சியின் அடித் தளமாக விளங்கிய சென்னையில் தொடங்கப் பட்டது ஆட்சி விரிவாகி அழுத்தம் பெற்றபோது ஆங்கில ஆட்சிக்கான தலைநகராகக் கல்கத்தா அறிவிக்கப்பட்டவுடன் 'ஏசியாட்டிக் சொசைட்டி' அமைப்பும் கல்கத்தாவுக்குச் சென்றுவிட்டது

சென்னையில் இச்சொசைட்டி இருந்தபோது தமிழுக்கு முதன்மை நிலை இருந்தது இவ்வமைப்பு

கல்கத்தா சென்ற பிறகு அங்கே வடஇந்திய மொழிகள் குறிப்பாக, சம்ஸ்கிருதம் முதல் நிலை பெற்றது இதற்கு முதற்பெரும் காரணம் வடநாட்டு மொழிகள் அனைத்துக்கும் தாய் போல சம்ஸ்கிருதம் விளங்கியதுதான் அனைத்து மொழிகட்கும் சம்ஸ்கிருதம் அடிப்படை என்ற உணர்வு உருவாக்கப் பட்டிருந்ததும் ஒரு காரணமாகும்

கல்கத்தாவிலிருந்த ஏசியாட்டிக் சொசைட்டி யுடன் இந்திய மொழியாளர்களைப் போன்றே ஐரோப்பிய, மற்றும் ஆசிய மொழியாளர்களும் தொடர்பு கொண்டிருந்தனர் அவர்களுள் ஜெர்மன் நாட்டு .மொழியாளர்களின் பங்கும் பணியும் நாள் தோறும் மிகுந்து கொண்டே வந்தது இதற்கு அடிப் படைக் காரணம் ஜெர்மானியர்கள் தங்களை ஆரிய இனத்தைச் சார்ந்தவர்களாக் கருதிக் கொண்டிருந்த தாகும் ஆரியர்களின் ஒரே வேத மொழி சம்ஸ்கிருதம் என்பது, ஜெர்மானியர்களை சம்ஸ்கிருதம் மீது அளவு கடந்த பற்றும் பாசமும் வைக்கத் தூண்டியது

எனவே, சம்ஸ்கிருத மொழி கற்க ஏராளமான ஜெர்மானியர்கள் இந்தியா வரத் தொடங்கினர் மொழி கற்றதோடு சம்ஸ்கிருத மொழியில் இருந்த படைப்புகளை ஜெர்மன் மொழியில் மொழி மாற்றம் செய்வதை பெரும் தொண்டாகவே கருதி செய்ய லாயினர் ஜெர்மானிய அறிஞரான மாக்ஸ்முல்லர், சம்ஸ்கிருத மொழியில் பெரும் புலமை பெற்று, ஆரிய மதத் தொடர்பான நூல்களை, குறிப்பாக வேத நூல்களை ஜெர்மன் மொழியில் பெயர்க்கலானார் ஆரியர்களைத் தவிர வேறுயாரும் வேதத்தைப் படிக்ககூடாது என விதி வகுத்துச் செயல்பட்ட ஆரிய வேதவாதிகள் மார்க்ஸ்முல்லர் வேத நூல்களை

படித்ததோடு மொழி மாற்றம் செய்ததையும் தடுக்கவில்லை காரணம், ஜெர்மானியர்களும் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்களே என்று கருதியதுதான்

## ஜெர்மன் மொழி வாயிலாக ஐரோப்பிய மொழிகளில்

மாக்ஸ்முல்லரைத் தொடர்ந்து கெதெ போன்ற புகழ்பெற்ற ஜெர்மானிய இலக்கிய வாணர்கள் சம்ஸ்கிருத மொழியிலுள்ள புகழ் பெற்ற படைப்பு களை, காளிதாசனின் சாகுந்தலம் போன்ற படைப்புக ளெல்லாம் ஜெர்மானிய மொழியில் பெயர்க்கப்பட, அவைகளெல்லாம் பின்னர், ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப் படலாயின இதன் மூலம் சம்ஸ்கிருத மொழியும் சம்ஸ்கிருதப் படைப்புகளும் ஐரோப்பாவெங்கும் பரவலாயின பின்னர் அவை உலகெங்கும் மொழி பெயர்க்கப் பட்டுப் பரவலாயின

இந்தியாவில் அச்சுவாகனமேறிய முதல் நூல் 'தம்பிரான் வணக்கம்' எனும் தமிழ் நூலாக இருந்த போதிலும், தமிழ்ப் படைப்புகளை பற்றி வெளியுலகம் அறிந்து கொள்ள வாய்ப்பேதும் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும் சமயப் பணி காரணமாகத் தமிழகம் வந்த பெஸ்கி போன்ற பாதிரிமார்கள் 'வீரமாமுனிவர்' என்று தமிழ்ப் பெயர் சூடி, தமிழ்ப் பணி ஆற்றியபோதிலும் ஜெர்மானியர்கள் சம்ஸ்கிருதத்தையும் அதன் படைப்புகளையும் உலகுக்கு அறிமுகப்படுத்தியதுபோல் வேறு யாரும் தமிழையும் தமிழ்ப் படைப்புகளையும் தெரியப்படுத்த முனையவில்லை என்றே கூறலாம் சம்ஸ்கிருத மொழியும் இதன் படைப்புகளும் வெளியுலகெங்கும்

பரவ ஜெர்மானியர்கட்கு ஆரிய இன உணர்வு ஒரு பெரும் உந்துசக்தியாக இருந்ததுபோல் தமிழ் ஆர்வம் தூண்டுசக்தியாக மாற இயலாததும் ஒரு காரணமாகும் தமிழை உரிய முறையில் மேனாட்டாருக்கு, குறிப்பாக மாக்ஸ்முல்லர் போன்ற ஜெர்மானியர்கட்கு, தமிழும் தமிழ் இலக்கியமும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தால் ஐரோப்பாவின்- ஏன் உலகின் முழுக் கவனமும் தமிழின்பால் திரும்ப நேர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை

## ஐரோப்பிய மொழி மூலம் உலகெங்கும்

ஜெர்மானியர்களால் ஐரோப்பாவெங்கும், பின்னர் உலகெங்கும் பரவலாக அறிமுகப்படுத்தப் பட்ட சம்ஸ்கிருத மொழியும் இலக்கியங்களும் உலகின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை

இத்தகைய சூழலில் ஆங்கில ஆட்சியினருக்கு நெருக்கமாக இருந்த சம்ஸ்கிருத மொழி ஆர்வலர்கள், சம்ஸ்கிருதத்தை செம்மொழியாக அரசை அங்கீகரிக்கச் செய்வதில் மிக எளிதாக வெற்றி பெற முடிந்தது ஆயினும், ஆங்கில ஆட்சி, ஹிந்து சமயம் சார்ந்த சம்ஸ்கிருதத்தை செம்மொழி ஆக்கியதால் இங்கு அறுநூறு ஆண்டு காலம் ஆட்சி செய்த முஸ்லிம்கள், தங்களைத் தவறாகக் கருதிவிடாமல் இருக்க, முகலாய மன்னர்களின் ஆட்சிமொழியாக இருந்த பாரசீக மொழியையும், முஸ்லிம்களின் சமய மொழியாக இருந்த அரபி மொழியையும் செம்மொழிகளாக ஏற்றதன் மூலம் சமநிலைப்படுத்த முயன்று, அதில் வெற்றியும் பெற்றனர் இம் மூன்று

மொழிகளும் இந்தியச் செம்மொழி மகுடந்தரித்த சூழலும் வரலாறும் இதுதான் இந்திய மொழிகளில் அனைத்துத் தகுதிகளும் தமிழுக்கு இருந்தும், அதனை எடுத்துக் கூறவோ, அதற்கான முயற்சிகளில் ஈடுபடவோ யாரும் முனையாததால் தமிழ் செம்மொழி யாகும் நிலை, கோரிக்கையற்றுக் கிடக்கும் வேரிற் பழுத்த பலாவாகக் கிடக்க நேர்ந்தது

## தீர்மான வடிவில் செம்மொழிக் கோரிக்கை

தமிழ் வரலாற்றிலேயே 'சம்ஸ்கிருதம் போல் தமிழும் ஒரு செம்மொழியே' என்ற உரிமைக் கோரிக்கை, 1885களில் பரிதிமாற் கலைஞரால் முதன் முதல் எழுப்பப்பட்டது என்பதைத் தொடக்கத்தி லேயே தெளிவுபடுத்தினோம் அவரது மறைவோடு அக்கோரிக்கையும் மறைந்தது

பரிதிமாற் கலைஞர் மறைந்து முப்பதாண்டு கட்குப் பின்னர் 1918ஆம் ஆண்டில் நடைபெற்ற சைவ சித்தாந்த சமாஜ மாநாட்டில் 'செம்மொழி' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தமிழைச் செம்மொழியாக சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்க வேண்டும் என்பது தான் அத் தீர்மான சாரம் அதனை அடுதது 1919 மற்றும் 1920ஆம் ஆண்டுகளில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் இதேபோன்ற தீர்மானத்தை நிறைவேற்றினர் இந்தத் தீர்மானம் சென்னைப் பல்கலைக்கழகத் தையும் அரசையும் கேட்டுக் கொள்வதாயமைந்தது இக் கோரிககையைத் தொடர்ந்து எந்தவிதச் செயற் பாடுகளும் இல்லாததால் மீண்டும் செம்மொழிக் கோரிக்கை நீண்ட துயில் கொள்ளலாயிற்று

திரை விலகியது - உண்மை வெளிச்சத்துக்கு வந்தது

1975ஆம் ஆண்டு யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்த நான், ஒரு நாள் நண்பர் காரை அலி அவர்களின் உதவியோடு மிகச் சிறந்த ஃபிரெஞ்சு நாட்டுத் தமிழறிஞரான ஜீன் ஃபிலியோஸா அவர்களை நேரில் சந்தித்து உரையாடினேன் அதுவரை நடந்த உலகத் தமிழ் மாநாடுகளில் முக்கியப்பங்கு வகித்தவர் சில காலம் பாண்டிச்சேரியில் தங்கி தமிழாய்வு செய்தவர் அவரது தமிழறிவையும் தமிழ்ப் பணிகளையும் ஓரளவு நன்கு அறிவேன் அவரை நேரில் கண்டு தமிழ் வளர்ச்சி குறித்து உரையாட வேண்டும் என்பது என் நெடு நாளைய ஆவல்

அன்றுவரை நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடுகளில் பெருமளவில் வெளிநாட்டுப் பிரதி நிதிகள், குறிப்பாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலந்துகொள்வதைக் கண்டு, வெளி நாட்டுப் பல்கலைக் கழகங்களின் தமிழ்த் துறைகள் தமிழாராய்ச்சியை முறையாகவும் சிறப்பாகவும் செய்து வருவதாகக் கருதிக் கொண்டிருந்த எண்ணத்தோடு, அவரை நோக்கி பாரிஸ் சபோன் பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்த்துறையின் தமிழாராய்ச்சிகளைப் பற்றி வினாத தொடுக்கலானேன்

"இங்கு தமிழுக்கென்று தனித்துறைகள் ஏதுமில்லை இப்பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசை மொழிகள் (Oriental Languages) துறையொன்று சம்ஸ்கிருதத் துறையின் கீழ் இயங்கி வருகிறது நான் சம்ஸ்கிருதப்

பேராசிரியர் என்ற முறையில் இத்துறையின் தலைவராக இருக்கிறேன் எனக்குத் தமிழும் தெரியும் என்பதால் தமிழ்ப் பேராசிரியனாகவும் இருந்து வருகிறேன் தமிழுக்கென்று தனித் துறைகள் ஏதும் இங்கு இல்லை"

என்றார் இங்கு மட்டும்தான் இந்நிலையா? அல்லது உலகப் பல்கலைக்கழங்கள் பலவற்றிலும் இதே நிலைமை தானா? என்று வினாத் தொடுத்தபோது,

"தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள், ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியப் பல்கலைக்கழகங்கள் தவிர்த்து, புதுதில்லிப் பல்கலைக் கழகம் உட்பட உலகின் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் இங்குள்ள நிலைதான் எல்லா இடங் களிலும் தமிழுக்கு ஒட்டுக் குடித்தன வாய்ப்பு மட்டுமே உள்ளது தனிக் குடித்தனம் இல்லை"

என்று சிரித்துக் கொண்டே கூறினார்

"ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் சம்ஸ்கிருதம்போல் தமிழும் தனிக் குடித்தனம் நடத்த என்ன தான் வழி?"

எனக் கேட்டபோது சற்றும் தயஙகாமல்,

"ஒரே வழி, சம்ஸ்கிருதம்போல் தமிழையும் செம்மொழி ஆக்குவதுதான் தமிழைச் செம்மொழியாக இந்திய அரசு ஏற்றால் பல்கலைக் கழக மானியக் குழு அதனை உடனடியாக ஏற்கும் அதனால் இந்தியப் பல்கலைக் கழகங்கள் மட்டுமல்ல, உலகப்

பல்கலைக் கழகங்கள் அனைத்துமே செம்மொழியாக ஏற்கும் பின், எங்கும் தனிக்குடித்தனம் செய்வது தமிழுக்கு எளிதாகி விடும்"

எனக் கூறி மீண்டும் சிரித்தார்

## 'செம்மொழி' ஆய்வும் வழிமுறை காணலும்

அன்றிலிருந்து என் மனம் தமிழ் செம்மொழி ஆவதைப் பற்றியே சிந்திக்கத் தொடங்கியது இதற்கான செம்மொழிகளின் வரலாற்றை ஆய்ந்தேன் மொழியியல் வல்லுநர்களுடன் கலந்துரையாடினேன் பின், தமிழ் செம்மொழி ஆவதற்கான அடிப்படைத் தகுதிப்பாடுகள் எவையெவை என்பதில் கருத்தைச் செலுத்தி ஆய்வு நடத்தினேன் அவற்றையெல்லாம் தொகுத்து, வகுத்து முறைப்படுத்தினேன் அத்தகுதிப் பாடுகள் தமிழுக்கு எவ்வாறு பொருந்துவனவாய் உள்ளன என்பதையெல்லாம் ஒப்பீடு செய்து ஆய்ந்தேன் மற்ற செம்மொழிகளுக்கு எந்த அளவு இத் தகுதிப்பாடுகள் பொருந்துகின்றன என்பதையும் ஒப்பீட்டடிப்படையில் ஆய்ந்தேன் போதிய தகுதிப் பாடுகள் இல்லாத நிலையிலும் இவை செம்மொழி களாக அங்கீகரிக்கப்பட வேறு அழுத்தமான மறைமுகக் காரணங்கள் யாவை என்பதிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தினேன் அனைத்துத் தகுதிகளும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தும் தமிழ் செம்மொழி ஆகாததற்கு அக-புற காரணங்கள் எவையெவை என்பதிலும் ஆழ்ந்து கருத்தூன்றி ஆய்வு செய்தேன் இந்த ஆய்வுகளின் அடிப்படையில் இப்பிரச்சினையை முதன்மைப்படுத்த ஒருசில வழிமுறைகளைப் பின்பற்றி என்னளவில் செயல்படலானேன்

செம்மொழி பற்றி அறிஞர்களிடையே விரிவாகப் பேச எனக்கு முதற்களமாக அமைந்தது சென்னை எஸ்பிளனேடுவில் அமைந்துள்ள ஒய் எம் சி ஏ பட்டிமன்றமாகும் 1975இல் டெல்லிப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் சாலை இளந்திரையன் கலந்து கொண்ட கூட்டத்தில் இதைப் பற்றிப் பேசினேன் அதற்குக் காரணம், அவர் டெல்லியில் இருப்பவர் அங்கிருப்பவர்களுக்கு இச் செய்தியை எட்டச் செய்பவர் டெல்லியிலுள்ள மத்திய அரசின் கல்வித் துறைதான் இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய துறை இதையெல்லாம் மனதிற் கொண்டு பேசியதற்கேற்ப சாலை இளந்திரையன் அவர்களும் என் கருத்தை ஆதரித்து டெல்லியில் நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூறினார்

1975இல் செம்மொழிப் பிரச்சினையை முழுவடிவில் தொடங்கியவன் என்பதற்காக புது தில்லியில் 2000இல் நடைபெற்ற 'செம்மொழி' மாநாட்டை தொடங்கிவைக்கும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது இதில் பேரார்வம் கொண்டிருந்த சாலையாரும் சாலினியாரும் அடுத்தடுத்து மறைந்தது மாபெரும் இழப்பாகும்

1975 தொடங்கி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் செம்மொழி ஆக்கப்படுவதன் அவசிய, அவசரம் பற்றி பேசவும் எழுதவும் தொடங்கினேன் அவசரம்பற்றி ஆய்வறிஞர்களிடை யேயும் அரசு சார்புடையோரிடையேயும் செம்மொழி பற்றி விரிவாகப் பேசும் அரிய வாய்ப்பு மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் எனக்குக் கிடைத்தது

### வழிகாட்டிய மதுரை மாநாடு

மாநாடு தொடங்கிய இரண்டாம் நாள் காலை பொது நிலைக் கருத்தரங்கில் நீதியரசர் மகராஜன் தலைமையில் உரையாற்ற எதிர்பாரா வாய்ப்புக் கிடைத்தது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் ஆய்வறிஞர்களும் பேராளர்களும் முதலமைச்சர் உட்பட அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்ட கூட்டம் அது இந்த அரிய வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய நான், இன்றையச் சூழலில் தமிழை அறிவியல் தமிழாக வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசிய அவசரத்தை வலியுறுத்திப் பேசியதோடு, செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் இருந்தும் அதற்கு அங்கீகாரம் அரசு அளிக்காததால் நேர்ந்துள்ள பாதிப்புகளைப் பற்றி விரிவாகப் பேசியபோது, அங்கு நிலவிய அமைதியும் அவையில் கேட்டுக் கொண்டிருப்போரின் முக பாவமும் இந்தக் கருத்தையும் உணர்வையும் உள்வாங்கிக் கொள்வதில் காட்டிய ஆர்வத்தையும் பிரதிபலிப்பாக இருந்தது பேசிமுடித்து இருக்கைக்குத் திரும்பியபோது, அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் என் பேச்சைப் பாராட்டியதோடு, செம்மொழி தொடர்பாக அரசுக்கு ஒரு கோரிக்கை மனு அனுப்புமாறு பணித்தார் அவர் பாராட்டும் பணிப்பும் எனக்குப் பெருமகிழ்வளித்தது

### கோரிக்கை மனு முடக்கப்பட்டது ஏன்?

செம்மொழி தொடர்பாக அரசுக்கு கோரிக்கை மனு அனுப்புவதென்றால் சரியான காரண காரியங் களோடு இருக்க வேண்டுமெனக் கருதி, அது தொடர்பான ஆய்வில் மீண்டும் முழு மூச்சாக

ஈடுபட்டேன் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள் என்னென்ன என்பதை ஆராய்வதில் மீண்டும் பெருங்கவனம் செலுத்தினேன் செம்மொழி அங்கீகாரம் கிடைப்பதால் தமிழ் பெறக்கூடிய பயன்கள் என்ன என்பதையெல்லாம் பட்டியலிட்டேன் பிறகு 1982ஆம் ஆணடில் செம்மொழி கோரிக்கை மனுவை அரசின் பரிசீலனைக்கு அனுப்பினேன் 1983ஆம் ஆண்டு வரை காத்திருந்தேன் பதிலோ நடவடிக்கையோ ஏதும் எடுப்பதாகத் தெரியவில்லை மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதினேன் இதுவும் கிணத்தில் போடப்பட்ட கல்லானது 1984இல் 'கலைமாமணி' விருதளிததற்கு நன்றி கூறும் முறையில் முதல்வருக்கு எழுதியதோடு செம்மொழி நினைவூட்டுக் கடிதத்தையும் இணைத்து அனுப்பினேன் முதலமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ள அன்றைய தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளருக்கு அனுப்பி வைத்தார் செயலாளர் அக்கோரிக்கை மீது எழுதிய குறிப்பில் 'திரு மணவை முஸ்தபா கூறுவதுபோல் தமிழைச் செம்மொழி ஆக்கினால், தமிழைச் செத்த மொழிகளின் பட்டியலில் சேர்ததாகிவிடும் எனவே, இக்கோப்பு இத்துடன் முடித்துவைக்கப்படுகிறது' என்ற முறையில் குறிப்பு எழுதி கோப்பையே முடிதது வைத்து விட்டார் இது எதுவும் எனக்குத் தெரியாது 2000ஆம் ஆண்டில் புதுதில்லியில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் அன்றைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர், தொடர்புடைய கோப்பைக் கையில் வைததுக் கொண்டு பேசியபோது அவையோருக்கு இவ்வுண்மையை உணர்த்தியபோது தான் எனக்கும் அவையோருக்கும் தெரிய வந்தது அண்ணா பல்கலைக்கழகம் 1988இல் வளர்தமிழ்

மன்றம் சார்பில் 'செம்மொழி' கருத்தரங்கத்தை நடத்தியது

## கோரிக்கை ஏற்கப்பட்ட நிலையில் ஆட்சி கலைக்கப்பட்டது

என்னைப் பொறுத்தவரை நான் சிறிதும் சளைக்காமல் ஆண்டுதோறும் நினைவூட்டல் எனும் பெயரில் கோரிக்கை மனு அனுப்பிக்கொண்டேயிருந்தேன் 1989இல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அமைச்சரவை பதவி ஏற்றபின் கல்வி அமைச்சர் பேராசிரியர் க அன்பழகன் அவர்களை நேரில் கண்டு தமிழ் செம்மொழி ஆக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியபோது, என் கருத்துக்களை கோரிக்கை மனுவாக எழுதித்தரப் பணித்தார் அவ்வாறே எழுதிக் கொடுத்தேன் அவர் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்குமுன் ஆட்சிக் கலைக்கப்பட்டுவிட்டது

## ஏமாற்றமான தஞ்சை மாநாடு

அதன்பின் ஆட்சில் பொறுப்பேற்ற செல்வி ஜெயலலிதாவின் ஆட்சியில் 1995இல் தஞ்சையில் உலகத் தமிழ் மாநாடு நடப்பதையொட்டி, மாநாட்டைத் தொடங்கி வைக்க வருகை தரும் பிரதமர் பிவி நரசிம்மராவ் அவர்களைக் கொண்டு செம்மொழி அறிவிப்புச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி கோரிக்கை மனு அளித்தேன் அதன்மீது உடனடி நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் பணிக்கவே, அப்போது தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளராக இருந்த திரு எஸ்பி இளங்கோவன், ஐஏஸ், அவர்கள் என்னை

அழைத்துப் பேசினார் என் ஆலோசனைக்கொப்ப என்னோடு டாக்டர் வாசெ குழந்தைசாமி, டாக்டர் அகத்தியலிங்கம், டாக்டர் பொற்கோ, டாக்டர் ஜான் சாமுவேல் ஆகியோரைக் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, செம்மொழி கோரிக்கை மனு மாநில அரசு மூலம் மத்திய அரசுக்கு முறைப்படி அனுப்பப்பட்டது பிரதமர் மாநாட்டைத் தொடங்கி வைத்த போதிலும் செம்மொழி அறிவிப்பு எதையும் செய்யாமல் சென்றுவிட்டது பெரும் ஏமாற்றமாகி விட்டது

## செயலுக்கு வந்த செம்மொழிக் கோரிக்கை மீண்டும் முடக்கம்

1996இல் மீண்டும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் வழக்கமான செம்மொழி கோரிக்கையை அவருக்கு அனுப்பினேன் அதன்மீது அவர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, அம் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க அன்றைய தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சரைப் பணித்தார் அமைச்சரை இது தொடர்பாகச் சந்தித்து விரிவாக விளக்கினேன் அவர், என்னுடன் டாக்டர் வாசெ குழந்தைசாமி, டாக்டர் ஜான் சாமுவேல், டாக்டர் பொற்கோ முதலானவர்களை கொண்ட குழு அமைத்து, அறிக்கை தயாரிக்க, அதனை முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசின் கல்விதத்துறைக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டு, தமிழைச் செம்மொழியாக மத்திய அரசு அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டார் பின் மத்திய அரசின் கல்வித் துறை இக்கோரிக்கை

மனுவைப் பரிசீலித்து கருத்துரைக்குமாறு மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் ஆணையத்துக்கு அனுப்பினர். அவர்கள் அக்கோரிக்கை மனுவை எல்லாக் கோணத்திலும் அலசி ஆராய்ந்து, இறுதியில் 'செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப் பாடுகளும் தமிழுக்கு இருப்பதால் நடுவண் அரசு தமிழை செம்மொழியாக அறிவித்து செம்மொழிப் பட்டியலில் சேர்க்கலாம்' எனப் பரிந்துரை செய்து, மத்திய அரசுக்கு அனுப்பிவைத்ததாகக் கூறப்படுகிறது ஆனால் மத்திய அரசு அப்பரிந்துரையின்மீது இதுவரை எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை மீண்டும் கிணற்றுக்குள் போட்ட கல்லைப் போன்ற நிலையே தொடர்கிறது

## தமிழக பா.ஜ.க. மூலம் மீண்டும் முயற்சி

இதற்கிடையே மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சி ஏற்பட்டபோது, இங்குள்ள திரு இல கணேசன் போன்றவர்கள் தங்கள் தமிழார்வத்தை வெளிப் படுத்தும்வண்ணம் தமிழ் வளர்ச்சி பற்றியெல்லாம் அடிக்கடி பேசத் தலைப்பட்டனர் ஏதோ ஒரு நப்பாசை, இவர்கள் மூலம் ஏன் மத்திய அரசை நேரடியாக அணுகக்கூடாது? என்ற எண்ணம் ஏற்படவே, கமலாலயத்தில் திரு இல. கணேசன் அவர்களை நேரில் கண்டு தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெறவேண்டியதன் அவசிய அவசரத்தையும் அதனால் தமிழ் பெறக்கூடிய உலகளாவிய பலன்களையும் எடுத்துக் கூறி விளக்கினேன் அவற்றையெல்லாம் உள்வாங்கிய அவர் செம்மொழிக் கோரிக்கையை ஒரு மனுவாக

ஆங்கிலத்தில் தரும்படியாகவும் அதை நேரிடையாக பிரதமர் வாஜ்பேயிடம் தர விரும்புவதாகவும் கூறினார்

தமிழ் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளை எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கி மூன்று பக்க அளவில் கோரிக்கை மனுவாக திரு இல கணேசனிடம் அளிக்க, அவரும் புது தில்லியில் அடுத்து நடைபெற்ற கட்சிக் கூட்டதத்தில் பிரதமரிடம் அளிக்க, அதை மேலோட்டமாகப் பார்த்த பிரதமர், அதை மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மனோகர் ஜோஸியிடம் அளிக்க அந்நிகழ்வு அத்தோடு முடிந்தது

சில மாதங்கள் காத்திருந்தேன் ஏதும் நடககவில்லை மீணடும் திரு இல கணேசன் அவர்களைக் கண்டு பேசினேன் முந்தைய மனு அதிக பக்கமிருந்ததால் பிரதமர் சரியாகப் படிக்காமலே திரு ஜோஸியிடம் தந்துவிட்டார் இம்முறை பிரதமர் படிக்கும் வகையில் இதனைச் சுருக்கமாக அரைப் பக்கம் அல்லது முக்கால் பக்கத்துக்கு மிகாமல் எழுதித் தருமாறு கேட்டார் அவ்வாறே முக்கால் பக்கத்திற்குள் கோரிக்கை மனு கொடுத்தனுப்பினேன் அவரும் அதனை பிரதமர் வாஜ்பாயிடம் சமர்பித்தார் மனுவை வாஙகிய பிரதமர் அதனை முழுக்க பார்வை யிட்ட பின் திரு ஜோஸியிடமே ஒப்படைத்து விட்டார் ஏனெனில் இதன் மீது நடவடிக்கை எடுக்கக் கூடியவர் திரு ஜோஸி மட்டுமே யாவார்

### தலைநகர் தமிழ்ச் சங்க முயற்சி

இந்த முயற்சியும் உரிய பயனை அளிக்கா நிலையில், 2000ஆம் ஆண்டில் தலைநகர் தமிழ்ச்

சங்கம் புதுதில்லியில் நடத்திய செம்மொழி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசும்போது, தமிழ் செம்மொழியாவதன் அவசியத்தையும் அனைத்துத் தகுதிப்பாடுகள் இருந்தும் அரசு அக்கரையில்லாமல் இருப்பதையும் அதற்கான என் முயற்சிகள் கால் நூற்றாண்டாகத் தொடர்ந்து கொண்டு இருப்பதையும் விவரித்துப் பேசியதோடு வானொலி போன்ற ஊடகங்கள் மூலமும் வேண்டுகோள் விடுத்தேன்

இம் முயற்சியைத்.தொடர்ந்து தலைநகர் தமிழ்ச் சங்கத்தார், பெங்களூர் தமிழ்ச்சங்கம், திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கங்களின் உறுதுணையோடு அந்தந்த மாநிலத் தலைநகரங்களில் செம்மொழி மாநாடுகளைச் செவ்வனே நடத்தினர்

## இந்திய மொழியியலார் மாநாட்டில் டாக்டர் கலைஞர் பேருரை

இறுதியாக, 2002இல் தமிழ் அக்காதெமியின் சார்பில் சென்னையில் இந்திய மொழி அறிஞர்களின் மாநாடு நடக்க ஏற்பாடாகியது அம் மாநாட்டை தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டது அன்றைய பாண்டிச்சேரி ஆளுநர் வாழ்த்துரை வழங்க ஏற்பாடாகியது

இந்திய மொழியிலாளர்கள் பெருமளவில் பங்கேற்கும் இம்மாநாட்டில் தமிழ் செம்மொழி கோரிக்கை முக்கிய இடம் பெறவேண்டும் என்பது என்னுடைய நாட்டம் மட்டுமல்ல, தமிழ் அக்காதெமியின் தலைவர்களின் குறிப்பாக மூத்த வழக்கறிஞர் திரு காந்தி, செயலாளர் திரு தசிக

கண்ணன், திருமதி மணிமேகலைக் கண்ணன் ஆகியோரின் விருப்பமாகவும் இருந்தது

இதற்காக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை இம்மூவரோடு நேரில் கண்டு, இப்பிரச்சினையை மாநாட்டில் வலியுறுத்துமாறும் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளைப் பற்றிய விரிவான குறிப்புரைகளையும் வழங்கிவிட்டு வந்தேன் இந்திய மொழியியலாளர்களின் மாநாட்டைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையில் டாக்டர் கலைஞர் அவர்கள் அனைத்து மொழியியல் வல்லுநர் களும் ஏற்று, போற்றும் வகையில் அற்புதமாக அவருக்கேயுரிய முறையில் செம்மொழிக் கோரிக்கையை விளக்கிப் பேசினார் வாழ்த்துரை வழங்கிய பாண்டிச்சேரி ஆளுநர் அவர்கள், அனைத்துத் தகுதிப்பாடுகளும் உள்ள தமிழ் 'செம்மொழி' அங்கீகாரம் பெற தன்னால் இயன்ற வழிகளிலெல்லாம் முயலப்போவதாகவும் கூறினார் அன்று டாக்டர் கலைஞர் பேச்சை பாராட்டாத மொழியியல் அறிஞர்களே இல்லை எனலாம் என்றாலும், மத்தியில் ஏதும் நடவடிக்கை இல்லை, பரிசீலிக்கிறோம்' என்ற வழக்கமான பதிலைத் தவிர

நாடாளுமன்ற உறுப்பினர்களின் முயற்சி

அதன்பின், இப்பிரசசினையை பிரதமர் வாஜ்பாய் அவர்களின் நேரடிப் பார்வைககுக் கொண்டு செல்லும் வகையில் 'செம்மொழி கோரிக்கை மனு'வில் நாடாளுமன்ற திமுக; பாமக, மதிமுக ஆகிய கட்சி உறுப்பினர்கள் கையொப்பமிட்டு மனு அளிக்க முத்தமிழறிஞர் டாகடர் கலைஞர் அவர்கள் ஏற்பாடு செய்ய, அவ்வாறே பிரதமருக்கு மனு

அளிக்கப்பட்டது அதனாலும் எந்த விளைவும் ஏற்படவில்லை.

## நாடாளுமன்றம் முன்பு தமிழறிஞர் பட்டினிப் போராட்டம்

இந்நிலையில், தலைநகர் தமிழ்ச் சங்கத்தார் மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கையால் நூற்றுக்கு மேற்பட்ட தமிழறிஞர்கள் நாடாளுமன்றம் அருகில் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த ஏற்பாடாகியது உண்ணாவிரத நிகழ்ச்சி செம்மையாக நடந்தேற திமுக, பாமக, மதிமுக உறுப்பினர்களும் அமைச்சர்களும் பெருந்துணை புரிந்தனர் உண்ணாவிரதம் வெற்றி பெற்ற போதிலும், கோரிக்கை வெற்றி பெறவில்லை வழக்கமான 'பரிசீலிக்கிறோம்' என்பதைத் தவிர வேறு எந்த பதிலும் இல்லை

என்றாலும், இந்நிகழ்வின் மூலம் பத்திரிகை தொலைக்காட்சி, வானொலி போன்ற செய்தித் தொடர்பான ஊடகங்கள் மூலம் 'தமிழ் செம்மொழி' ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அனைத்திந்திய அளவில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவிலும் விளம்பரமானது, உலகெங்கும் வாழும் தமிழர்கள் மட்டுமல்லாது, மற்றவர்களும் புரிந்து கொள்ள ஏதுவானது இதன்மூலம் ஒருவித விழிப்புணர்வு தோன்றியுள்ளது என்றே கூற வேண்டும் இதன்மூலம் அனைத்திந்திய அளவில் அரசியல் ஆதரவு திரளக் கூடியது சூழலும் உருவாகியுள்ளதெனலாம்

## அரசியல் கட்சிகளிடையே 'செம்மொழி' தாக்கம்

இதன் விளைவு இன்று தமிழக அளவில் இயங்கும் அரசியல் கட்சிகளும் அனைத்திந்திய

அளவிலான மாபெரும் தேசியக் கட்சிகளின் தமிழகக் கிளைகளும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ் செம்மொழிப் பிரச்சினையைத் தங்கள் தேர்தல் அறிக்கையில் ஒரு முக்கியக் கோரிக்கையாக வைத்து மக்களிடம் வாக்குச் கேட்க முனைந்திருப்பதுதான் அதில் குறிப்பிடத்தக்க வேடிக்கை என்னவென்றால், இப்போதும் ஆட்சியில் இருக்கும் பா ஜா க நினைத்திருந்தால் எப்போதோ தமிழை செம்மொழி யாக அறிவித்திருக்க முடியும் ஆளும் கூட்டணிக் கட்சிகளெல்லாம் கோரிக்கைவிடுத்தும் நாடாளு மன்றத்தில் பேசியும் மசியவில்லை அக்கட்சியின் தமிழகக் கிளை கோரிக்கைவிடுத்தும் செவிசாய்க்க வில்லை ஆனால், நாடாளுமன்றத் தேர்தலை யொட்டி அவர்கள் விடுக்கும் வேண்டுகோள், தாங்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தமிழைச் செம்மொழியாக அறிவிப்போம் என்பதுதான் இப்பேச்சும் வாககுறுதியும் நம் நாட்டுப் புறங்களில் 'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன், வானமேறி நிலவைப் பிடித்து வந்தானாம்' என்று கூறும் பழமொழியைப் போல் உள்ளது இதெல்லாம் வெறும் ஏமாற்று என்பது மக்களுக்குத் தெரியாதா என்ன?

### தமிழ் 'செம்மொழி' ஆவதால் ஏற்படும் நன்மை தான் என்ன?

அதுசரி, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க மத்திய அரசு ஏன் தயங்குகிறது என்பதைப் பற்றி பேசும் முன், தமிழ் செம்மொழி ஆவதால் அப்படி என்ன பெரிய நன்மை, பயன் தமிழுக்கு ஏற்பட்டு விடப்போகிறது? என்ற சாதாரண மக்களின் கேள்விக்குப் பதில் காண்போம்

## ஒட்டுக்குடித்தனம் போய் தனிக் குடித்தனம்

இப்போது செம்மொழிகளாக இந்திய அரசு ஏற்றுள்ள சம்ஸ்கிருதம், பாரசீக, அரபி மொழிகளைப் போல் தமிழையும் செம்மொழியாக ஏற்று செம்மொழிப் பட்டியலில் இணைத்தால், இந்தியப் பல்கலைக்கழக மானியக்குழு உடனடியாக ஏற்கும் இவ்வாறு ஏற்றால் இந்தியாவில் மொழிப்பாடமுள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் தமிழுக்கென்று ஒரு தனித்துறை அமைய வாய்ப்பேற்படும்

இந்திய அரசும் பல்கலைக்கழக மானியக் குழுவும் தமிழைச் செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் தமிழைச் செம்மொழியாக ஏற்கும் தற்போது சம்ஸ்கிருதத் துறைகள் எங்கெங்கெல்லாம் உண்டோ அப் பல்கலைக் கழகங்களில் தமிழுக்கென்று தனித்துறைகள் உருவாகும் தற்போது கீழ்த்திசை நாடுகளின் மொழிகளின் துறையின் (Department of Oriental Languages) ஒரு மொழியாக ஒட்டுக் குடித்தனம் நடத்திவரும் தமிழ்மொழி, தனித்துறையாக தனிக்குடித்தனம் நடத்தும் நிலை உருவாகும் இதன்மூலம் அதிகமானோர் தமிழ் பயிலவும் தமிழில் ஆய்வுகள் செய்யவும் அரிய வாய்ப்பு உருவாகும்

இங்குக் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பம்சம் தற்போது உலகில் 57 நாடுகளில் தமிழர்கள், குறிப்பாக ஈழத் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இவர்கள் தங்கள் தாய்மொழியைப் பல்கலைக்கழக அளவில் படிக்கவும் ஆய்வுகள் செய்யவும் பெரிதும் விரும்புகின்றனர். அங்குள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைகள்

உருவானால் இவர்களின் ஏக்கமும் நீங்கும்; தமிழ்க் கல்வியும் ஆய்வும் சிறப்புறும் என்பது திண்ணம்

## 'தமிழ் ஆண்டு' தரும் தனிப்பெரும் பயன்கள்

தற்போது மத்திய அரசு, சம்ஸ்கிருதம் செம்மொழி என்பதற்காக 'சம்ஸ்கிருத ஆண்டு' அறிவித்து சிறப்பாகக் கொண்டாடியதுபோல், தமிழ் செம்மொழியானால் மத்திய அரசு தமிழ் ஆண்டு கொண்டாடும் வாய்ப்பு உருவாகும் தமிழ்நாட்டைச் சிறப்பிக்கும் வகையில் சம்ஸ்கிருத மொழியின் பன்முக வளர்ச்சிக்கு 100 கோடிக்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கிச் செலவிட்டதுபோல் தமிழ் வளர்ச்சிக்கான பன்முகத் திட்டங்களைத் தீட்டி மிகச் சிறப்பாக நிறைவேற்ற முனையும் தமிழ் ஆண்டை தமிழ்நாடு, இந்தியா மட்டும் கொண்டாடுவதோடு அமையாது, எந்தெந்த நாட்டுப் பல்கலைக் கழகங்கள் தமிழ்த்துறைகளை உருவாக்கியுள்ளனவோ அவை யெல்லாம் கொணடாடும் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தமிழ் ஆண்டு' சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்படும் இதற்காக ஆங்காங்குள்ள தமிழர் அமைப்புகளும் பல்கலைக் கழகங்களும் அந்தந்த நாடுகளின் அரசுகள் சிறுபான்மைத் தமிழர் மொழி தமிழ் என்பதால் நிதி ஒதுக்கிக் கொண்டாட உதவும் இதன் மூலம் தமிழ், தமிழ்க் கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் போன்றவற்றின் சிறப்பும் பெருமையும் ஆய்வு பூர்வமாக நிறுவப்படும் அது தமிழ் இனத்தின் மீது பொழியப்படும் புகழ் பூக்களாக அமையும்

### உலகளாவிய அறநிறுவன உதவிகள்

ராக்ஃபெல்லர் ஃபௌண்டேஷன், ஃபோர்டு ஃபௌண்டேஷன் போன்ற உலகப் புகழ்பெற்ற அறக்கட்டளை நிறுவனங்கள் செம்மொழிகளில் உள்ள சிறப்புக் கூறுகளை பல்வேறு தலைப்புகளில் உலகளாவிய முறையில் ஆய்வுகள் நடைபெறுவதை ஊக்குவிக்கும் வகையில் நிதியுதவிகளையும் ஆய்வாளர்களுக்கான உதவித் தொகைகளையும் வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளன இதன் மூலம் தமிழ் மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டு ஆய்வுகள் பரவலாக முனைப்புடன் நிகழ்தலுடன் இதன் வாயிலாக இத்துறைகளில் மறைபொருளாய் பொதிந்துள்ள சிறப்புக்கள் வெளிப்பட அது ஒட்டு மொத்தத் தமிழினப் பெருமையாக அமைய வாய்ப்பேற்படும்.

### தமிழ் - ஆங்கில அகராதிகள்

இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள பூனா நகரில் 'டெக்கான் காலேஜ் ஆஃப் போஸ்ட் கிராஜுவேஷன் அண்டு ரிசர்ச்' என்ற அமைப்பு சம்ஸ்கிருதம் செம்மொழி என்பதற்காக சம்ஸ்கிருதம்-ஆங்கில அகராதிகளைத் தயாரித்து வெளியிட்டு வருகிறது. மொத்தம் 60 தொகுதிகளைத் தயாரித்து வெளியிட வேண்டுமெனத் திட்டமிட்டு இது முப்பத்தைந்து தொகுதிகளை இதுவரை வெளி யிட்டுள்ளது இதற்கான முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக் கொண்டிருப்பது போல் தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற்றால் இதுபோல் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு தமிழ்-ஆங்கில

அகராதிகள் பல தொகுதிகளாக உருவாக்கப்படலா மல்லவா?

## சம்ஸ்கிருத அளவுகோலுக்குப் பதிலாகத் தமிழ் அளவுகோல்

அச்சகங்கள் உருவாகும்வரை தமிழ் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு வந்தன இம்முறை சங்க காலத்துக்கு முன்பிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும் அன்றையத் தமிழ்ப் படைப்புகள் அனைத்தும் ஓலைச் சுவடிகளிலேயே அடக்கமாகி யிருந்ததைப்போல் ஆட்சி, சமயம் மற்றும் தமிழ்ச் சமுதாயத் தொடர்பான செய்திகளைக் கொண்ட கல்வெட்டுகள், சாசனங்களாக உருவாக்கப் பட்டிருந்தன இக்கல்வெட்டுகளில் பெரும்பாலானவை கோயில் மதிற்சுவர்களிலும் கோட்டை கொத்தளங் களிலும் பதிக்கப்பட்டிருந்தன அதேபோல் செப்புப் பட்டயங்களும் பொறிக்கப்பட்டன. இவற்றைப் பற்றிய ஆய்வுகள் தொல்பொருள் ஆய்வாளர்களாலும் கல்வெட்டு ஆய்வறிஞர்களாலும் ஓலைச் சுவடிகளில் புலமைமிக்க ஆய்வறிஞர்களாலும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன

இத்தகைய கல்வெட்டு மற்றும் ஓலைச்சுவடி ஆய்வுகளுக்கு அளவுகோளாக சம்ஸ்கிருத மொழியே இருந்து வருகிறது காரணம், சம்ஸ்கிருதம் செம்மொழியாக இருந்து வருவதுதான் இது தவிர்க்க முடியாததாகவும் தொல்பொருளாய்வாளர்களால் கருதப்படுகிறது இதனால், பிராமி எழுத்து முறைகளின் சாயலில் தமிழ் எழுத்துக்கள் கணிக்கப் பட நேர்வதால் வடமொழி உறவுடன் தமிழ் வளர்ந்ததாகக் கணிக்கப்பட வேண்டிய கட்டாயச்

சூழல் உருவாவதும் தவிர்க்க முடியாததாகிறது இதனால், உண்மை நிலைமை அறிந்துணரவியலா நிலை தமிழறிஞர்கட்கும் ஆய்வாளர்கட்கும் ஏற்படுகிறது

தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற்றால், செம்மொழி என்ற முறையில் தமிழையே அளவு கோலாகக் கொண்டு தமிழ் ஓலைச் சுவடிகளும் கல்வெட்டுகளும் ஆராயப்பட்டால் மிகச் சரியான தகவல்கள் கிடைக்க வழியேற்படுமல்லவா

## மேலை மற்றும் கீழை மொழிகளில் தமிழ்ப் படைப்புகள்

சம்ஸ்கிருதம் 'செம்மொழி' என்பதனால், அதிலுள்ள படைப்புகள் பல கீழை, மேலைய நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன இன்றும் பெயர்க்கப்பட்டு வருகின்றன இதே நோக்கில் தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற்றால் உலக மொழியியலாளர்களின் - இலக்கியவாணர்கள் - ஆய்வறிஞர்களின் கவனம் தமிழின்பால் திரும்பும் தமிழில் உள்ள உயர்ந்த படைப்புகளை, செவ்விலக் கியங்களை தத்தமது மொழிகளில் பெயர்க்க முனைவர் இதன் மூலம் தமிழ் படைப்புகள், பழைய, புதிய இலக்கியங்கள் கீழை நாட்டு மொழிகளிலும் மேலைநாட்டு மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்படும். இதன் மூலம் தமிழ் மொழியின் சிறப்பும் இலக்கியப் படைப்புகளின் உயர்வும் எழுத்துப் பூர்வமாக உலகளாவிய முறையில் நிறுவப்படும் இதனால், தமிழ் படைப்புகளுக்கு ஒரு உலகளாவிய ஆய்வுப் பார்வை கிடைக்க வாய்ப்பேற்படும்

## உலகப் பெரும் கலைக்களஞ்சியங்களில் தமிழுக்கு சிறப்பிடம்

உலகளாவிய முறையில் வெளியாகும் 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' போன்ற கலைக் களஞ்சியங்களில் சம்ஸ்கிருதம், கிரீக், லத்தீன் போன்ற மொழிகளைப் பற்றியும் அம்மொழி களிலுள்ள படைப்புகள், படைப்புசார்ந்த இலக்கியத் தகவல்களும் பெருமளவில் இடம்பெற வாய்ப்பேற் பட்டுள்ளது அதே சமயம் இரண்டாயிரம் ஆண்டு கட்கு மேற்பட்ட பழமையுடைய மொழியாயினும் தமிழ் பற்றி தகவல்கள் மிகக் குறைவாகவே இடம் பெற நேர்கிறது இதற்கு அடிப்படைக் காரணம் சம்ஸ்கிருதம் 'செம்மொழி' எனும் சிறப்பைப் பெற்றிருப்பதேயாகும் இதே செம்மொழித் தகுதிப்பாட்டைத் தமிழும் பெற்றிருந்தால் தமிழ்த் தொடர்பான பல்வேறு செய்திகள் இத்தகைய கலைக் களஞ்சியங்களில் அதிக அளவில் இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனக் கூற வேண்டியதில்லை

உலகப் புகழ்பெற்ற கலைக்களஞ்சியங்களில் தமிழ் தொடர்பான பல்வேறு செய்திகள் வெளி வருவதைப் படிக்கும் வாசகர்கள், மேற்கொண்டு செய்திகளை அறியவும் ஆராய்ச்சி செய்யவும் வாய்ப்பேற்படும் இதனால், மேலும் மேலும் தமிழ் பற்றியும் தமிழர் வாழ்வு பற்றியும் பல அரிய செய்திகள் உரிய முறையில் உலகுக்குக் கிடைக்கப் பெரு வாய்ப்புக் கிடைக்கவியலும்

## ஒப்பீட்டாய்வு மூலம் தமிழ் சிறப்பு நிலைபெற

ஒரு மொழி 'செம்மொழி' என அறிவிக்கப் பட்டால், அம்மொழி ஆய்வாளர்கள் மற்றும்

இலக்கியத் திறனாய்வுத்துறை வல்லுநர்களின் கவனத்தை ஈர்ப்பது இயல்பு அப்போது அவர்கள் உலகின் மற்றைய செம்மொழிகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வர் அத்தகைய ஒப்பீட்டாய்வுகளில் தமிழ் செம்மொழி என்ற முறையில் மற்றைய செம்மொழி களின் தன்மைகளிலிருந்து மொழி, இலக்கிய அளவில் எவ்வாறெல்லாம் தனித்து விளங்குகிறது, மற்ற செம்மொழிகளில் காணவியலாத தனித்தன்மை கொண்ட சிறப்பம்சங்கள் என்னென்ன என்பதெல்லாம் ஆய்வு முடிவுகளாக வெளிப்படலாம் இதன்மூலம் தமிழ் மொழி, இலக்கியப் பெருமையோடு தமிழ் இனத்தின் பெருமையும் உலகில் ஆதார பூர்வமாக நிலைபெற வாய்ப்பேற்படும்

- அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வழிகாட்டும் 'செம்மொழி'

தமிழ் செம்மொழி எனும் அங்கீகார முத்திரை பெறுவதன் மூலம் தமிழ் பழமைக்குப் பழமையும் புதுமைக்குப் புதுமையும் ஒருங்கே வாய்க்க அரும் பெரும் மொழி என்பது தெளிவாகும் அன்றைய மொழி, இலக்கிய வளத்தை அறிவதோடு இன்றைய சமுதாயப் போக்குக்கும் தேவைக்குமேற்ப தமிழை வளர்த்தெடுப்பது எப்படி என்பதைப் பற்றிய சிந்தனையும் முனைப்படையும்

இதன் விளைவாக இன்றைய இன்றியமையாத் தேவையான அறிவியல் தமிழாக - நான்காம் தமிழாகத் தமிழை வடித்தெடுத்து வளமடையச் செய்யும் இனிய சூழல் உருவாகும் இதற்கான விரிவான வளர்ச்சித் திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு உருவாகும் இதன் வாயிலாகத் தமிழின் பரப்பு விரியும்; ஆழம்

கூடும் எதிர்காலத்தில் தமிழ் உலகப் பெரும் மொழிகளில் ஒன்றாக மலர்ந்து மணம் வீசும் இனிய சூழல் உருவாகி தமிழுக்குப் பொற்காலமாயமையும்

## தமிழ் 'செம்மொழி' அங்கீகாரம் பெற எது தடை?

தமிழ் செம்மொழியாக அங்கீகரிப்பதற்கு வேண்டிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் இருந்தும், செம்மொழியாவதால் தமிழுக்கு ஏற்படக் கூடிய அனைத்து நலன்களையும் நன்கு அறிந்தும், அதனை செம்மொழியாக அங்கீகரிக்க எது தடையாக உள்ளது என்பதையும் நாம் அனுமானித்தறிய கடமைப் பட்டுள்ளோம்

இன்றைய சூழலில் யார் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமோ அந்த ஆட்சியினர் 'என்ன' என்பதில் கருத்தூன்றுவதற்கு மாறாக 'யார்' என்பதில் அதிகம் கருத்தூன்றும் போக்கு உள்ளவர்களாக இருக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது எதையும் சமயக் கண்ணோட்டத் தோடு காணும் மனஇயல்பு அவர்களிடம் அழுத்தம் கொண்டிருப்பதால் இந்து சமய மொழியான சம்ஸ்'கிருதத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை சமயச் சார்பிலா சமுதாய மொழியாயமைந்துள்ள தமிழ் மொழிக்குத் தர விரும்பாத மனநிலை அரசோச்சிக் கொண்டிருப்பதாகக் கருத வேண்டியுள்ளது

தாங்கள் சமய அடிப்படையில் இறை மொழியாக - கடவுளர்கட்குரிய மொழியாக அமைந்துள்ள சம்ஸ்கிருத மொழிக்கு இணையாக - சம மதிப்பில் - தமிழ் வருவதை அவர்கள் விரும்பாத நிலையே நிலவுகிறது எனக் கூறலாம். இந்தியா

என்றால் ஹிந்து சமயம், இந்தியர்கள் என்றால் ஹிந்துக்கள், இந்தியாவின் ஒரே புனித மொழி சம்ஸ்கிருதம் என்ற நிலையை உலக அரங்கில் நிலை நிறுத்துவதற்கு இடையூறாக 'தமிழ் செம்மொழி' என்ற நிலை அமைந்துவிடுமோ என்ற எண்ணம் ஆட்சியாளர்க்கு குறிப்பாக செம்மொழி அங்கீகாரம் வழங்கக்கூடிய மனித வள மற்றும் கல்வித் துறை அமைச்சருக்கு இருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது இப்போது இருக்கும் நிலையே நீடித்தால்தான் எதிர்காலத்தில், இந்தியா என்றால் ஹிந்து, ஹிந்து மொழி எனில் சம்ஸ்கிருதம் என்ற நிலை நிலைபெறும் என்ற எண்ணமே மேலோங்கி இருப்பதாகத் தெரிகிறது

## இயங்கும் மொழியும் இயங்கா மொழியும் ஒன்றா?

தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற்றபின்னர் செம்மொழியான சம்ஸ்கிருதத்தோடு ஒப்பீட்டாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்கவியலா ஒன்றாகும் அப்போது சம்ஸ்கிருதத்தின் குறைகளும் செம்மொழி தமிழின் நிறைகளும் பட்டியலிட வேண்டிய காட்டயாச் சூழ்நிலை ஏற்படும் ஏனெனில், செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள் பதினொன்றில் ஏழு தகுதிப்பாடுகள் மட்டுமே சம்ஸ்கிருதத்துக்கு உண்டு தமிழுக்கு பதினொரு தகுதிப்பாடுகளும் பொருந்துவனவாகும் மற்றும், சம்ஸ்கிருதம் முழுக்க முழுக்க வேத மொழி என்ற அடிப்படையில் ஹிந்து சமயத்தைச் சார்ந்த மொழியாயமைந்துள்ளது தமிழ் சமயச் சார்பற்ற சமுதாய மொழியாக அமைந்துள்ளது இதெல்லாவற்றையும்விட தமிழ் இயங்கும் மொழியாக அமைந்துள்ளது ஆனால், சம்ஸ்கிருதமோ இயங்கா மொழி இக்காரணங்களால் தமிழின் முன்

சம்ஸ்கிருதத்தின் பெருமை சிதைய நேருமோ என்ற அச்சமும் அவர்களிடம் உருவாகி நிலைபெற்றிருப்பது ஒரு காரணமோ என்னவோ

## மேனாட்டு ஆய்வாளர் கவனம் அதிகம் ஈர்க்கப்படுமே என்ற அச்சமா?

தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற்றால், பல வெளிநாட்டு மொழியியலாளர்களின் பார்வை தமிழின் மீது திருப்பும் இது இயற்கையும் கூட ஆரிய இனம் சார்ந்த மொழி என்பதற்காகத்தான் ஜெர்மானிய மொழியியல் அறிஞர் மார்க்ஸ் முல்லரின் முழு ஆய்வுப் பார்வை சம்ஸ்கிருதத்தின் மீது படிந்தது கெதே என்ற ஜெர்மானிய இலக்கியவாணர் காளிதாசனின் 'சாகுந்தலம்' போன்ற படைப்புக ளெல்லாம் ஜெர்மன் மொழி வாயிலாக உலகெங்கும் சென்றது 'ஜெர்மன் இன்டாலஜி' எனும் அரிய நூலை எழுதிய ஆசிரியர், மார்க்ஸ்முல்லருக்கு அவரது இறுதிக் காலத்தில் தான் தமிழ் இலக்கியம் அறிமுகமாகியது என்றும் தமிழ் இலக்கியப் படைப்புகளைக கண்டு அவர் பெரிதும் வியந்து போற்றினார் என்றும் சம்ஸ்கிருத இலக்கியங்கள் அறிமுகமான காலத்தில் தமிழ் மொழியும் இலக்கியங்களும் அவருக்கு அறிமுகப் படுத்தப்பட்டிருந்தால் நிச்சயம் மாக்ஸ்முல்லரின் முழுக் கவனம் தமிழின் மீதும் தமிழ் இலக்கியத்தின் மீதும் திரும்பியிருக்குமே தவிர சம்ஸ்கிருதத்தின்பால் இந்த அளவு முனைப்பு காட்டியிருக்காது' எனக் குறிப்பிட்டிருப்பது மிகச் சரியான கணிப்பு ஆகும் இதே நிலையும் போக்கும் இன்றும் சம்ஸ்கிருத மொழிமீது காட்டிவரும் மேனாட்டு மொழி ஆய்வாளர்கட்கு ஏற்பட வாய்ப்புண்டு இதை

யெல்லாம் சம்ஸ்கிருத ஆர்வலர்களான இன்றைய ஆட்சியாளர்கட்கு இயைபுடையதாக இல்லை என்ற ஒரு கருத்தும் நிலவி வருகிறது

## மற்றைய மொழிகள் உரிமை கோறுமா?

தமிழைச் செம்மொழியாக்கினால் மற்றுள்ள இந்திய தேசிய மொழிகளும் இத்தகைய கோரிக்கை வைக்கலாம் அத்தனை இந்திய மொழிகளையும் செம்மொழி ஆக்குவது எங்ஙனம்? என்றொரு வினா உரியவர்களால் அடிக்கடி எழுப்பப்படுகிறது இது முழுக்க முழுக்க உணமைக்குப் புறம்பான, உப்பு சப்பற்ற அசச உணர்வாகும் ஒரு மொழி செம்மொழி யாக இருக்க வேண்டுமெனில், குறைந்தது இரண் டாயிரம் ஆண்டுகட்கு முன் அம்மொழி வழக்கில் இருந்திருக்க வேண்டும் இலக்கியப் படைப்பு களையும் இலக்கணக் கட்டுக்கோப்பையும் பெற்று, எல்லா மட்டத்திலும் செல்வாக்குப் பெற்று அரசோச்சியிருக்க வேண்டும் இந்தத் தகுதிப்பாடு இந்திய மொழிகளில் தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகளைத் தவிர வேறு எந்த மொழிக்கும் இல்லை என்பது வெள்ளிடைமலை இன்னும் சொல்லப் போனால் ஆயிரம் ஆண்டு பழமையுடைய மொழிகளையே வாய்விட்டு எண்ணிவிடலாம் எனவே, தமிழொத்த பழமையும் மொழி, இலக்கிய, இலக்கணச் செழுமையுமுடைய பழம்பெரும் இந்திய மொழி வேறு எதுவும் இல்லாத நிலையில், தமிழைச் செம்மொழியாக்குவதற்கு குறுக்கே எந்த இந்திய மொழியும் வர வாய்ப்பு இல்லை என்பதுதான் உண்மையிலும் உண்மை

## மருட்சி வேண்டாம்

தமிழ் செம்மொழியாவதால் சம்ஸ்கிருதத்தின் பெருமையும் சிறப்பும் குன்றும், குறையும் என்பதெல்லாம் வெறும் மருட்சியேயன்றி, வேறில்லை இன்னும் சொல்லப்போனால் தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெறுவதன் மூலம், இந்தியாவின் ஒட்டு மொத்தப் பெருமைக்கும் சிறப்புக்கும் அது உறு துணையாயமையும் என்பதுதான் உண்மை சுருங்கச் சொன்னால் பழமைச் சிறப்புமிக்க சம்ஸ்கிருத மொழியும் தமிழும் இந்தியாவின் இரு பெரும் கண்களாகும்

## முழு இந்தியாவைக் காண உதவும் இரு கண்கள்

ஐரோப்பாவை முழுமையாக அறிந்துணர வேண்டுமெனில், லத்தீன், கிரேக்க மொழிகளின் மூலமே பழைமைச் சிறப்போடு தெளிவாக அறிந்துணர முடியும் அதற்குரிய இரு கண்களாக இவ்விரண்டு மொழிகளும் அமைந்துள்ளன என்பது மொழியியலாளர் முடிவு அவ்வாறே இந்தியாவை முழுமையாக அறிந்துணர வேண்டுமெனில் அதற்கு எல்லா வகையிலும் உறுதுணையாக - இருகண்களாக அமைவனதான் சம்ஸ்கிருதமும் தமிழும் வட இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதச் செல்வாக்கும் தென்னக மொழிகளில் தமிழின் செல்வாக்கும் மிகுந்திருப்பதால் ஒட்டு மொத்த இந்தியாவை மொழி, கலை, இலக்கிய, பண்பாடு மற்றும் எண்ணப்போக்கு சிந்தனை வளம் போன்ற தன்மைகளை முழுமையாக அறிய இவ்விரு மொழிகளின் உறுதுளை கட்டாயம் தேவை என்பதைச் சொல்லத் தேவையில்லை

எனவே, ஒட்டுமொத்த இந்தியாவின் இதயத் துடிப்பைத் துல்லியமாய் உணர்த்தவல்ல இதயத்

துடிப்புமானியின் (Stethoscope) இருபுறமுள்ள நாடிக்குழல் போல அமைந்திருப்பதுதான் தமிழும் சம்ஸ்கிருதமும். ஆகவே, ஒன்றுக்கொன்று சாதகமானது என எண்ணுவதும் ஒன்றுக்கொன்று முட்டுக் கட்டையாயமையும் எனக் கருதுவதும் அறிவீனம் மட்டுமல்ல மா பாதகமுமான உணர்வுமாகும்

உலகப் பேரமைப்பான யுனெஸ்கோவால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமையான மொழிகள் என இனங்காணப்பட்ட ஆறு மொழிகளுள் ஒன்றான தமிழ், செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிகளும் ஒருங்கே பொருந்தியுள்ள ஒரே மொழி என்பதை ஆய்வுபூர்வமாக அறிந்துணர்ந்தோம் தமிழ் மொழி 'செம்மொழி' மகுடம் தரிப்பது எவ்வாறு என்ற கேள்வி நம் உள்ளத்தில் முளைவிடுவது இயல்புதான்

தமிழ் செம்மொழி ஆவதற்காக பாராளு மன்றத்தில் ஆளும் கட்சியால், தமிழ் செம்மொழி அங்கீகார மசோதா கொண்டு வரப் பட்டு, அதன்மீது வாத, பிரதிவாதங்கள் நடைபெற்று, இறுதியில் சபாநாயகரால் வாக்கெடுப்பு நடத்தி, அதிக வாக்குகளோடு மசோதா வெற்றி பெற்று, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, சட்டமாவதன் மூலம்தான் செம்மொழித் தகுதியைத் தமிழ் பெற முடியும் என்ற நடைமுறைகள் எதுவுமே தேவை யில்லை பின், எப்படித்தான் தமிழ் 'செம்மொழி' தகுதியைப் பெறுவது?

இன்றுள்ள, மனிதவள மேம்பாடு மற்றும் கல்வித்துறை அமைச்சராக இருப்பவர், தன் துறை மூலம், இன்று செம்மொழி அங்கீகாரம் பெற்றுள்ள மொழிகளான சம்ஸ்கிருதம், பாரசீக, அரபி மொழிகளின் செம்மொழிப் பட்டியலில் தமிழும் ஒரு

செம்மொழியாக சேர்க்கப்படுகிறது அல்லது இணைக்கப்படுகிறது என அரசு ஆணையொன்றைப் பிறப்பித்தாலே போதும், தமிழ் 'செம்மொழி' எனும் அங்கீகார முத்திரை பெற்றுவிடும்

இதற்கு உறுதுணையாயமையும் வண்ணம் தமிழ் மொழி 'செம்மொழி' தகுதி பெறுவதற்கான அனைத்து அம்சங்களையும் ஒருங்கே பெற்றுள்ளது என்பதை, மொழியியல் அடிப்படையிலும் பிறவகைகளிலும் நன்கு ஆய்வு செய்த மைசூரிலுள்ள மத்திய அரசின் இந்திய மொழிகளுக்கான நடுவ ஆணையம் 'செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப் பாடுகளும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற மொழியாகத் தமிழ் இருப்பதால், அதற்குச் 'செம்மொழி' எனும் தகுதியை - அங்கீகாரத்தை மத்திய அரசு வழங்கலாம்' எனப் பரிந்துரைத்துள்ளது என்பதை நாம் கவனத்தில் கொளள வேண்டிய செய்தியாகும் பின் தயக்கம் ஏன்?

தமிழை 'செம்மொழி'யாக மத்திய அரசு அங்கீகரித்தால் அது சம்ஸ்கிருதப் பெருமைக்கு இடையூறாகுமோ, ஹிந்துத்துவா கொள்கைக்கு முரணாக அமைந்துவிடுமோ என்ற அச்சத்தின் அடிப்படையில், மறைமுகமான மழுப்பல் போக்கு மூலம் தமிழுக்குரிய உரிமையும் நீதியும் மறுக்கப் படுவது எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள இயலாததாகும்

எனவே, இனியும் எவ்விதக் காரணமுமின்றி, வெறுமனே காலங்கடத்தாமல் தமிழுக்கு 'செம்மொழி' தகுதி வழங்க மத்திய அரசு முன் வருவதன் மூலம் நீதி நிலைபெற, உரிமையை உறுதி செய்ய எல்லா வகையிலும் முற்படும் என நம்புகிறோம்

## வளர்தமிழ்ச் செல்வர்
# மணவை முஸ்தபா



அறிவியல் தமிழ்ப் பணியை வாழ்நாள் பணியாக மேற்கொண்டுள்ள மணவை முஸ்தபா, சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டங்கள் பெற்றவர். தென்மொழிகள் புத்தக நிறுவன நிர்வாகப் பதிப்பாசிரியர், சர்வதேசத் திங்களிதழ் 'யுனெஸ்கோ கூரியர்' ஆசிரியராகப் பணியாற்றி, 30 உலக மொழி ஆசிரியர்களில் 'பணி மூப்பு ஆசிரியர்' எனும் தகுதிக்காக யுனெஸ்கோவால் சிறப்பிக்கப்பட்டவர், தற்போது 'பிரிட்டானிக்கா' கலைக் களிஞ்சியத் தமிழ்ப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இவரது 40-க்கு மேற்பட்ட நூல்களில் 7 கலைச்சொற் களஞ்சிய அகராதிகளாகும். இவை இந்திய மொழிகளில் முதலாவதாகும். பல இலட்சம் கலைச் சொற்களை உருவாக்கிய இவரை உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகள் விருதளித்துப் பாராட்டிப் பரிசளித்துள்ளன. தமிழ்நாடு அரசின் ஐந்து விருதுகள் உட்பட 35-க்கு மேற்பட்ட விருதுகளைப் பெற்ற ஒரே தமிழறிஞர் எனும் சிறப்புப் பெற்றவர்.

எட்டு ஆண்டுகள் திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினர், சர்வதேசத் தமிழ் ஆராய்ச்சிப் பேரவை இணைச் செயலர், தொலைக்காட்சி, வானொலி ஆலோசனைக் குழு உறுப்பினர், ஞானபீடத் தேர்வுக்குழு உறப்பினர், முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி மேல்மட்டக் குழு உறுப்பினர், சுதந்திரப் பொன்விழாக் குழு உறுப்பினர், அண்ணா பல்கலைக்கழக தமிழ்வளர்ச்சிக் குழு உறுப்பினர், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக, கலைச் சொல்லாக்கக் குழு உறுப்பினர், முன்னாள் கௌரவ மாகாண மாஜிஸ்திரேட்...

இதழ்கள், தொலைக்காட்சி, வானொலிகளில், நூறுக்கு மேற்பட்ட படைப்புகளை வெளிப்படுத்தியவர். பன்னிரெண்டு மொழி பெயர்ப்பு உத்திகளை வகுத்தவர். இவரது அறிவியல் நூல்கள் தமிழ்நாடு அரசு, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புகளின் பரிசுகளைப் பெற்றுள்ளன.

மலையாள-தமிழ்ப் பணிக்காக கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை பொன்விழாவில் சிறப்பிக்கப்பட்டவர்.

இவரது வாழ்க்கையும் சாதனைகளும் மத்திய அரசால் 7 மணி 20 நிமிடம் பதிவு செய்யப்பட்டு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மணவையார் அறிவியல் தமிழ் அறக்கட்டளையின் நிறுவனர். இருபதுக்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட இவர் மூன்று முறை உலகை வலம் வந்துள்ளார்.